

திருவாசகம் - 04
போற்றித் திருவகவல் கதைகள்
கே. வீ. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



# என்னுரை

திருவாசகம் என்பது தேன் என்று யாவரும் சொல்வர். அதில் போற்றித் திருவகவல் தேனில் ஊறிய பலாச்சுளை. ஒவ்வொரு வரியும் தித்திக்கிறது. சிவனைப் போற்றும் வரிகள் சிவனையும், போற்றுவிப்போரையும் மகிழ்விப்பானவாகவே இருக்கின்றன. ஆயிரமாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இந்நூல் இன்றுவரை உரைநூலாகவே இருந்து வருகிறது. அதனால் அதன் பொருள் யாருக்கும் விளங்குவதில்லை. நான் செய்யுள்களைக் கதைகளாக்கும் ஒரு புதிய இலக்கிய வடிவை அறிமுகம் செய்துள்ளேன். அதன்படி திருவாசகத்திற்கும் கதைகள் எழுதி வருகிறேன். இது சரியோ பிழையோ என எனக்குத் தெரியாது. அறியாமை மிக்க நான் சிவனை நம்பி அவரின் விருப்பத்திற்கமைய எழுதிவருகிறேன். பொருள் தெரிந்தவர்கள் தான் சரி பிழை கூறுதல் வேண்டும். இதுவரை யாரும் கூறாமையால் நான் எழுதியவை யாவும் சரியானவையென்றே நினைக்கிறேன். என்னால் முடிந்தவரை கல்விக்கும், தமிழுக்கும், சமயத்திற்கும் தொண்டு செய்ய நினைக்கிறேன். அதற்கு சிவனின் ஆசி உண்டு. நான் எழுதி முடித்ததும் உடனே வெளியிட வெளியீட்டாளரும் உண்டு. இவற்றையெல்லாம் சிவன் ஒழுங்கு செய்து தந்துள்ளான். அவனைப் போற்றி வணங்குகிறேன். **அடுத்து இன்னொரு திருவாசகத்துடன் சந்திப்போம்.**

போற்றி போற்றி புயங்கப் பெருமானே
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சய சய போற்றி.

நன்றி.

**கே. வி. குணசேகரம்**

உ

சிவமயம்

# போற்றித் திருவகவல் கதைகள்

## தில்லையில் அருளியது

**1) நான்முகன் முதலா வானவர் தொழுது எழ**

**2) ஈர் அடியாலே மூஉலகு அளந்து**

**3) நால்திசை முனிவரும் ஐம்புலன் மலரப்**

**4) போற்றிசெய் கதிர்முடித் திருநெடுமால் அன்று**

**5) அடிமுடி அறியும் ஆதரவு அதனில்**

சிவராசா என்ற ஆசிரியர் ஆச்சிரமத்திற்கு வந்து சிரமதான வேலைகள் யாவும் செய்பவர். பசனைகள் செய்பவர். சிவனை வணங்குபவர். ஏழை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வாங்கிக் கொடுப்பவர். அவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் வந்து மிக்க கவலையுடன் சொன்னார்; "சுவாமி என்னை உங்களுக்குப் பல வருடங்களாகத் தெரியும். நான் சிவனுக்குத் தினமும் பல தொண்டுகள் செய்கிறேன், வணங்குகிறேன், தானதர்மம் செய்கிறேன். எனினும் எனக்கு பாடசாலையின் அதிபர் பதவி கிடைக்கவில்லை. அருள்வேலுவுக்குத்தான் கிடைத்தது. அப்படியானால் நான் சிவனை வணங்குவதால் பயனில்லையே" என்று கவலையோடு சொன்னார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் மென்மையானவர். ஒருவரது குறைநிறைகளைச் சுட்டிக்காட்டாது சிவனைப் பற்றியே கூறுபவர். அவர் அருகில் இருந்த கதிரேசனைப் பார்த்தார். கதிரேசன் சொன்னார்; "மகனே, நீ நல்லவன், வல்லவன், சேவை செய்பவன், சிவபக்தன். ஆனால் உனக்கு நிகரானவன் யாரும் இல்லை என்ற நினைப்பை உடையவன். கற்பித்தலில் சிறந்தவன். ஆனால் மாணவர்களுடன் கண்டிப்பாகவே நடந்து கொள்கிறாய். அன்பு காட்டுவது இல்லை. ஆசிரியன் தாயைப்போல இரக்கமுள்ளவனாகவும், தந்தையைப்போலக் கண்டிப்பவனாகவும் இருக்க வேண்டும். அத்துடன் பெற்றோருடன் அன்பாகப்

பழகக்கூடியவனாகவும் இருத்தல் வேண்டும். சக ஆசிரியர்களை மதிக்க வேண்டும். அதிபரை மதிக்க வேண்டும். அதிகாரிகளை மதிக்க வேண்டும். தற்போது கல்விப் பணிப்பாளராக இருக்கும் கந்தசாமி முன்பு கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய மயில்வாகனத்தின் பிள்ளைகளுக்கு அவர்களின் வீட்டுக்குச் சென்று கல்வி கற்பித்தவர். அப்போது உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டது. கந்தசாமி அதற்கு விண்ணப்பித்துவிட்டு மயில்வாகனத்தின் பிள்ளைகளிடம் தன்னை உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கும்படி வேண்டினவர். பிள்ளைகள் வற்புறுத்தியமையால் தான் கந்தசாமிக்கு அந்த நியமனம் கிடைத்தது. பின் மயில்வாகனம் ஓய்வுபெற்ற பின் கந்தசாமியிடம் ஓர் அதிபருக்காக உதவி கோரியபோது அவர் செய்யவில்லை. அதற்குக் காரணம் சிவானந்தன் என்ற கல்வி அதிகாரி மயில்வாகனம் கேட்ட அதிபரை விரும்பவில்லை. அதுபோல கல்விப் பணிப்பாளரான கந்தசாமியின் மகன் சரவணன் உன்னிடம் படிக்கிறான். அவன் உன்னைப்பற்றித் தவறாகவே தனது தந்தைக்குத் தினமும் கூறுவான். ஒருவன் கல்வியில், திறமையில், பணத்தில், அதிகாரத்தில் மேம்பட்டிருந்தாலும் நல்ல பண்புகளையும், இரக்கத்தையும், அன்பையும், பிறரை மதிக்கும் தன்மையையும் கொண்டிரா-விட்டால் அவனை யாரும் விரும்பார். அவன் ஒவ்வொரு செயலிலும் பாதிக்கப்படுவான். இது கடவுளர்க்கும் பொருந்தும். நான்கு முகங்களை உடைய பிரமா முதலிய தேவர்கள் தொழுது வணங்கிக் கொண்டிருந்தபோது இரண்டு அடிகளால் உலகம் முழுவதையும் நாராயணன் அளந்து முடித்தவன். அப்பொழுது நான்கு திசைகளிலும் இருந்த முனிவர்கள் உலகை அளந்த திருமாலை வணங்கினார்கள். அதனால் செருக்குற்ற திருமால் சிவனது அடியையும் முடியையும் காண விரும்பினான்."

**6) கடும்முரண் ஏனம் ஆகி முன் கலந்து**

**7) ஏழ்தலம் உருவ இடந்து பின் எய்த்தும்**

**8) ஊழிமுதல்வ சய சய என்று**

**9) வழுத்தியும் காணா மலர்அடி இணைகள்**

கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; "சிவா, வலிமை மிக்க திருமால் பன்றி வடிவம் எடுத்து நிலத்தைத் துளைத்துக்கொண்டு சென்று ஏழு பாதாள

உலகங்களையும் கடந்து சென்றதால் அவன் தளர்வடைந்தான். வேறு வழியின்றிச் சிவனை நினைத்துத் தனக்கு வெற்றியுண்டாகும்படி வேண்டினான். அதன் பின்பும் சிவனது திருவடியை அவனால் காணமுடியவில்லை. இதற்குக் காரணம் செருக்கு. தன்னைவிட உயர்ந்த தெய்வம் வேறு எதுவும் இல்லை என்ற எண்ணம் மனதில் இருந்தமையால் அவனால் சிவனது திருவடியைக் காணமுடியவில்லை. சிவன் பயன் கருதாத அன்புக்கு மட்டும்தான் சிக்குவான். நீ வணங்கும்போது நான் இன்ன இன்னவெல்லாம் செய்துள்ளேன். இன்னும் செய்வேன். எனக்கு அதிபர் பதவியைத் தா என்று வேண்டுவாய். அதிகமானோர் அப்படித்தான் வேண்டுகின்றனர். பலர் ஒரு பதவியைக் கேட்கும்போது சிவன் யாருக்கு அந்தப் பதவியைக் கொடுப்பது. ஐந்தொழில்களையும் செய்யும் சிவன் மனிதர்களிடமே அத்தொழில்களைக் கையளித்துவிட்டான். ஒருவன் தனது நிலையையும், சிவனது நிலையையும் உணர வேண்டும். அதற்காகத்தான் சிவன் மூளையைப் படைத்துள்ளான். சுத்தமான மனதுடன் தனது அறிவைப் பயன்படுத்தினால் குற்றம் குறைகள் அதில் ஏற்படாது. அதனால் முன்பு செய்த வினை தேயும். அறிவைப் பயன்படுத்தாது பற்றுக்களால் வேண்டியவர்களுக்கு உதவிகளைச் செய்தால் வினை அதிகரிக்கும். அதனால் பாவம் சேரும். முன்பு செய்த நல்ல வினையின் பயனாக மானிடப்பிறப்புக் கிடைத்துள்ளது. அப்பிறப்பின் மூலம் நல்லவற்றைச் செய்து வினையை அகற்றிச் சிவனை அடைய வேண்டும். அதை விட்டுவிட்டு மனிதர்கள் மேலும் மேலும் பாவத்தைச் செய்கின்றனர்."

**10) வழுத்துதற்கு எளிது ஆய் வார்கடல் உலகினில்**

**11) யானை முதலா எறும்பு ஈறுஆய்**

**12) ஊனம் இல் யோனியின் உள்வினை பிழைத்தும்**

**13) மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து**

**14) ஈனம் இல் கிருமிச் செருவினில் பிழைத்தும்**

"சிவா, அருவநிலையில் தேவர்களாலும் காணமுடியாத சிவனது திருவடிகளை உயிர்கள் கண்டு வணங்குவதற்காகச் சிவன் உருவம் தாங்கி வருகிறான். சிவனை வணங்குவதற்குப் பக்குவமாக வேண்டிய உயிர்கள்

பூவுலகில் வந்து பிறக்கின்றன. வினைக்கேற்ப அவ்வுயிர்கள் அழிவற்ற யோனிகளால் யானை முதல் எறும்பு வரையில் உள்ள பல வடிவங்களில் பிறக்கின்றன. மானிட யோனியில் மனிதனாகவும் பிறக்கின்றன. பின் யோனியின் விருப்பால் உயிர்த் தத்துவங்களுக்கிடையில் போராட்டம் ஏற்பட்டு, அவைகளில் ஏதேனும் ஒன்று ஓங்கி வளர்கிறது. இப்படி வளர்ந்து வரும் உயிரானது தாயின் கர்ப்பத்தில் என்ன செய்கிறது என்றும் மாணிக்க வாசகர் கூறுகிறார். போட்டியும், பொறாமையும், அகந்தையும் தான் மனதை அலைக்கழிக்கின்றன. கருவில் சிவனால் வைக்கப்பட்டவை யாவும் தவறாது தன்னை வந்து சேரும் என்று நினைப்பவன் அறிவாளி. அவனுடன் என்றும் சிவன் இருந்து அவனைச் சமநிலைப்படுத்தி அவனது துன்பங்களைத் தீர்த்து வைப்பார். இது தான் சைவசமயத் தத்துவம். இதை உணராதவர்கள் பல்வேறு வகைகளிலும் துன்பப்படுவர். ஒவ்வொருவருக்கும் வரும் துன்பங்களை அவரவரே நீக்க வேண்டும். தனது பசிதீரத்தான் உண்ண வேண்டும். அதுபோல தனது நோய்தீரத்தான் மருந்து உண்ண வேண்டும். கல்விப் பணிப்பாளர் காலையில் சிவனை வழிபடக் கோவிலுக்கு வந்தபோது உன்னைப்பற்றி விசாரித்தேன். அவர் உனது குணத்தை மாற்றாவிட்டால் உனக்குத் துன்பங்கள் வரும் என்றார். உனது குணத்தை முதலில் மாற்று. சிவனைத் தொழுபவர்கள் அன்பு உள்ளவர்களாகவும், பொறுமை உள்ளவர்களாகவும், பிறரை மதிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். அன்புதான் சிவன். அன்பில்லாத மனதில் அவன் மகிழ்வுடன் இருக்க மாட்டான். அதனால் அன்புடன் பழகு” என்றார் கதிரேசன்.

**15) ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்**

**16) இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்**

**17) மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்**

**18) ஈர்இரு திங்களில் பேர்இருள் பிழைத்தும்**

**19) அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்**

**20) ஆறு திங்களில் ஊறுஅலர் பிழைத்தும்**

**21) ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்**

**22) எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்**

**23) ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்**

**24) தக்க சத மதி தாயொடு தான்படும்**

**25) துக்க சாகரம் துயர் இடைப் பிழைத்தும்**

**26) ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை**

**27) ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்**

**28) காலை மலமொடு கடும்பகல் பசி நிசி**

**29) வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்**

அன்று ஆச்சிரமத்திற்கு அதிகமான பெண்கள் வந்திருந்தனர். மகப்பேற்று நிபுணர் திருமதி. மாதுமை சிவலிங்கம் அன்று மகளிருக்காக உரையாற்ற வந்திருந்தார். "சிவனடியார்களே, மாதுமை ஐந்து வயதில் இருந்து பெற்றோருடன் ஆச்சிரமத்திற்கு வந்து ஆச்சிரமப் பணிகளைச் செய்பவர். அத்துடன் சைவசமய அனுட்டானங்களைப் பேணுபவர். வைத்தியரான பின்பும் ஆச்சிரமத்திற்கு வந்து சிவனடியார்களுக்கான மருத்துவ உதவிகளைச் செய்பவர். அவருக்குத் திருவாசகத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. மாணவர்களுக்கு இப்போதும் திருவாசகத்தைப் பண்ணுடன் பொருள் விளங்கச் சொல்லிக் கொடுப்பவர். இப்போது அவர் உங்களுக்கு உரையாற்றுவார்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

"சுந்தரமூர்த்தி சுவாமிகளே, மற்றும் சிவனடியார்களே அனைவருக்கும் எனது மாலை வணக்கம். சைவசமய நூல்கள் மக்களின் மேம்பாட்டிற்காக வாழ்வின் முக்கியமான பல விடயங்களை மிகவும் விரிவாகக் கூறுகின்றன. இந்த வகையில் முன் நிற்பது திருமந்திரம். சிவன் மகப்பேற்றை உயிர்களிடம் கையளித்துள்ளான். அதற்குக் காரணம் உயிர்களுக்குப் பெரும் இன்பம் அளிப்பதற்காகவே. ஆணும் பெண்ணும் ஒன்று கூடுவதால் ஒரு புதிய உயிர் உண்டாகிறது. அதன்மூலம் மனிதனுக்குச் சகல இன்பங்களும் உண்டாக வேண்டும் என்றே சிவன் விரும்புகின்றான். அதற்காகச் சிவன் திருமூலரை

அழைத்து ஆணும் பெண்ணும் எவ்வாறு கூட வேண்டும் என்றும் எவ்வாறு கூடக்கூடாது என்றும் கூற அதைத் திருமூலர் திருமந்திரத்தில் விபரமாகக் கூறியுள்ளார். அது உங்களுக்குத் தெரியும். ஆணும் பெண்ணும் கூடி இன்பம் அனுபவிக்கும்போது பெண் கர்ப்பமடைகிறாள். அதனால் அப்பெண் பெரும் துன்பங்களுக்கு ஆளாகிறாள். இது பெண்களுக்குத் தெரியும். ஆனால் ஆண்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கில் மாணிக்கவாசகர் தனது திருவாசகத்தில் இவ்வாறு கூறுகிறார்," ஒரு கரு தாயின் வயிற்றில் உருவாகி ஒரு மாதம் பூர்த்தியடைந்ததும் தான் தனக்காகவென்று ஒரு தனிவடிவு எடுக்கும். இரண்டு மாதமுடிவில் அந்தக் கரு வலிமை பெறும். மூன்றாம் மாத முடிவில் தாயின் கருவில் பெருகும் கொழுப்பு நீரில் புதையுண்டு போகாமல் சிவனின் அருளால் தப்பித்துக் கொள்ளும். நான்கு மாதங்கள் முடியும்வரை அதற்குக் கண்கள் தோன்றாது. ஐந்தாவது மாதம் கர்ப்பவதிகள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். ஐந்தாவது மாதத்தில் கருவானது கலைந்துவிடும் அபாயம் உள்ளது. ஆனால் சிவனின் அருளால் அது கலையாது. உயிர்வாழும் தன்மையைப் பெற்றுவிடும். இதிலிருந்து தப்பி உயிர்வாழும் கருவுக்கு ஆறாவது மாதம் அவயங்கள் முறையாக அமையும். ஏழாம், எட்டாம், ஒன்பதாம் மாதங்களில் இயல்பாகப் பல துன்பங்கள் தாய்க்கு வந்து சேரும். இக்காலங்களில் தாயையும் சேயையும் நல்ல முறையில் கணவன்மார் பாதுகாத்தல் வேண்டும். பத்தாவது மாதம் மகவு பிறக்கும். பத்து மாத காலமும் பெண் பெரும் வேதனைகளை அனுபவிக்கிறாள் என்பதை ஆண்கள் தெரிந்து கொள்ளல் வேண்டும். பிரசவம் என்பது மறுபிறப்பென்று எனது தந்தையார் சொல்வார். கருவுற்ற பெண்களைப் பாதுகாப்பது கணவனின் கடமையாகும். தற்போதைய ஆண்களில் சிலர் அதைஉணர்வதில்லை. அதனால் பெண்கள் தான் துன்பப்படுகின்றனர். கர்ப்ப காலத்தில் கணவனும் மனைவியும் மகிழ்வுடனும், கடவுள் பக்தியுடனும், நல்ல சிந்தனைகளுடனும் வாழுதல் வேண்டும். இருவருக்கிடையேயும் அன்பு பெருக வேண்டும். அன்னியோன்னியம் ஏற்படல் வேண்டும். பிறக்கப்போகும் மகவின் எதிர்காலம் பெற்றோரின் கையில் தான் உண்டு. கர்ப்பகாலத்தில் நடைபெறும் சம்பவங்கள் குழந்தையின் வளர்ச்சியில் முக்கிய பங்கேற்கின்றன. பாரதக்கதையில் அபிமன்யு தாயின் வயிற்றில் இருந்தபோது போருக்கான வியூகம் அமைப்பதைப் பற்றி அரிச்சுனன் கதைத்தபோது கருகில் இருந்த அபிமன்யுவின் தந்தையிடம் கேள்வி கேட்டதை நாம் அறிவோம். அதனால் கர்ப்பகாலத்தில் பெண்களை மதித்து அவர்களைப் பாதுகாத்தல் வேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்றால் சில ஆண்கள்

குடித்துவிட்டு மதுபோதையில் தமது மனைவியுடன் மிக மோசமாக நடந்து கொள்கின்றனர். நேற்று ஒரு கர்ப்பிணிப்பெண் கணவனால் தாக்கப்பட்டு என்னிடம் சிகிச்சைக்காக வந்தாள். இதை உணர்ந்துதான் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் இவ்வாறு கூறுகிறார்" என்றாள் மாதுமை.

**30) கருங்குழல் செவ்வாய் வெள் நகைக் கார்மயில்**

**31) ஒருங்கிய சாயல் நெருங்கி உள்மதர்த்துக்**

**32) கச்சு அறநிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து**

**33) எய்த்து இடைவருந்த எழுந்து புடைபரந்து**

**34) ஈர்க்கு இடைபோகா இளமுலை மாதர்தம்**

**35) கூர்த்த நயனம் கொள்ளையில் பிழைத்தும்**

"சிவனடியார்களே வயிற்றில் வளரும் கருவின் நிலைபற்றி, வைத்திய கலாநிதி திருமதி. மாதுமை சிவலிங்கம் அவர்களின் அனுபவமான வார்த்தை-களைக் கேட்டீர்கள். அடுத்துத் தலைசிறந்த ஆசிரியராக இருந்து கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சிறப்பாகப் பணி செய்துவரும் சிவனடியாரான ரவீந்திரன் அவர்கள் மாணிக்கவாசகர் கூறிய பிள்ளை வளர்ப்பு முறை பற்றிக் கூறுவார். அவர் ஒரு சிறந்த ஆசிரியர். மாணவர்களைத் தனது கண்களைப் போலப் பாதுகாத்து ஒழுக்கசீலர்களாக வளர்த்தமையால் எமது கிராமத்தில் மிக மிகச் சிறந்த மாணவர்கள் பலர் வாழ்கின்றனர். அவர் இப்போது உரையாற்றுவார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

"சிவனடியார்களே பிள்ளைகளைப் பெறப்போகும் தாய் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்கிறாள் என்பதை மாணிக்கவாசகர் கூறியுள்ளதுபோல எமது ஆச்சிரம மருத்துவர் திருமதி மாதுமை சிவலிங்கம் அவர்கள் சொல்லக் கேட்டீர்கள். குழந்தையைச் சுமக்கும்போது தாய்படும் வேதனையைவிட அதை வளர்த்தெடுக்கும்போது தந்தையும் தாயும் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்றும் மாணிக்கவாசகர் கூறுகிறார். உண்பதும் உறங்குவதும் என்ற கடமைகளை முறையாகச் செய்த பிள்ளை கல்விகற்று

வளர்ந்து வாலிபப் பருவத்தை அடைந்த பின்புதான் பெற்றோர் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். அப்பருவத்தில்தான் அவர்கள் நண்பர்களோடு கூடுவர். நல்ல நண்பர்களானால் அந்த வாலிபன் நல்வாழ்வைப் பெறுவான். தீய நண்பர்களோடு சேர்ந்தால் மது, மாமிசப் பழக்கம் ஏற்படும். அழகிய கருங்கூந்தலையும், சிவந்த உதடுகளையும், கார்காலத்தில் நடனமாடும் மயிலினைப் போன்ற சாயலையும் உடைய வரைவில் மகளிரின் நட்பு ஏற்படாதவாறு கவனித்துக் கொள்ளல் வேண்டும். அன்பு கொள்ளாது பொருளை விரும்பி இனிமையான சொற்களைப் பேசும் பொதுமகளிரின் தொடர்பை ஏற்படுத்தும் பருவம் அது. நன்மை தீமை தெரியாமையாலும், நண்பர்களின் செயற்கையாலும் தான் இது ஏற்படும். அத் தொடர்பு பொருள்களுக்கேற்ப மாறுபடும் என்றும், அவர்களின் தழுவல் இருட்டறையில் பிணத்தைத் தழுவுவது போன்றது என்றும் அவர்களுக்குத் தெரியாது. அப்பருவம் எதையும் ஆராயாது முடிவெடுக்கும் பருவமாகும். அதை உணர்ந்து பெற்றோர் மிகவும் கவனமாக அதைக் கையாளுதல் வேண்டும். இரு வகைப்பட்ட மனமுடைய பொது மகளிரும் கள்ளும் சூதும் ஒரு மனிதனின் வாழ்க்கையை முற்றாக அழித்து விடும் என்பதை நாம் ஆச்சிரமத்தில் மாணவர்களுக்குக் கூறி வருகிறோம். இருப்பினும் சில பெற்றோர் இதைக் கவனத்தில் எடுப்பதில்லை. அண்மையில் ஒரு சம்பவம் நடைபெற்றது. ஒருவர் தனது நண்பனின் மகன் ஒரு பொதுமகளுடன் உறவு வைத்திருக்கிறான் என்பதைத் தனது நண்பனுக்குச் சொன்னார். அந்த நண்பன் சொன்னவரை கண்டபடி ஏசி அடித்தும் விட்டான். தன் மீதுள்ள பொறாமை காரணமாகத்தான் அவன் அவ்வாறு சொல்கிறான் என பலருக்கும் சொன்னான். அவர்கள் அது உண்மையென அறிந்து எதுவும் பேசவில்லை. அதனால் அவன் தனது மகன் அப்படி நடக்கமாட்டான் என நம்பினான். சில தினங்களுக்குப் பின் அவரின் மகன் விபச்சாரம் செய்யும் வீட்டில் இருந்து காவல் துறையால் கைது செய்யப்பட்டான். அப்போது வேறும் சிலரும் கைது செய்யப்பட்டார்கள். ஒருவர் ஒரு சம்பவத்தைக் கூறினால் அறிவுள்ள தந்தை இரகசியமாகத் தனது மகனைக் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டுமே தவிர சொன்னவருடன் சண்டைக்கு போகக் கூடாது. இது தான் இன்று நடைபெறுகிறது. இதனால் தான் பிள்ளைகள் வழி தவறுகின்றனர். எனவே பிள்ளையைப் பெறுவதை விட அதை நல்லபடி வளர்ப்பதில் தான் அதிக கவனம் செலுத்த வேண்டும்" என்றான் ரவீந்திரன்.

**36) பித்தம் உலகர் பெரும் துறைப் பிறப்பினுள்**

**37) மத்தம் களிறு எனும் அவாவிடைப் பிழைத்தும்**

“சிவனடியார்களே, பிள்ளைகளை வளர்க்கும்போது மிக்க அவதானத்துடன் வளர்த்தல் வேண்டும். பிள்ளைகளுக்குக் கல்வியில், நட்பில், கடவுள் வணக்கத்தில், பிறரை மதித்தலில் அக்கறையை உண்டு பண்ணுதல் வேண்டுமே தவிர ஆசைகளை உருவாக்கக்கூடாது. உங்கள் இனத்தவரின் பிள்ளை கெட்டித்தனமாகப் படித்தால் அது போல உங்கள் பிள்ளையும் படிக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை. ஆனால் அந்தப் பிள்ளையைவிட அதிகமாகப் படிக்க வேண்டும் என்ற ஆசையை உங்கள் பிள்ளைக்குச் சொல்லக்கூடாது. அது நாளடைவில் பொறாமையாக மாறி இருவருக்குமிடையே விரோதத்தை உண்டாக்கும். பேராசையை உண்டு பண்ணும். பேராசை மதங் கொண்ட யானையை ஒத்தது. அது நல்லவற்றைச் சிந்திக்கவிடாது. நிலவுலகில் வாழும் மக்கள் உலக ஆசைகளிலீடுபட்டு பைத்தியம் பிடித்தவர்கள் போலச் செயலாற்றுகின்றனர். இதிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் பிள்ளைக்கு நல்ல உபதேசங்களைச் செய்தல் வேண்டும். சிவ உணர்வை உண்டாக்குதல் வேண்டும். கடவுள் மீது அன்பு வைப்பவர்கள் தீய செயல்களைச் செய்ய அஞ்சுவர். ஒருவர் ஆசைப்படாது வாழ்வது தான் அறவாழ்வு. ஆசை இல்லாதவர்களுக்கு துன்பங்கள் ஒருபோதும் வராது. பாடசாலையில் நாம் மாணவர்களுக்கு எப்போதும் நல்லவற்றையே சொல்லிக் கொடுப்போம். என்னிடம் கற்கும் மாணவன் ஒருவன் பாடசாலையில் மிகுந்த ஒழுக்கமுள்ளவனாக இருப்பான். ஆனால் வீட்டில் பெற்றோர் அவனுக்கு வேண்டாதவற்றைச் சொல்லிக் கொடுப்பர். அதனால் அம் மாணவன் விரக்தியுற்று என்னிடம் வந்து சொன்னான் நான் அவனது பெற்றோரை அழைத்துப் புத்திமதிகள் சொன்னேன். சில தினங்களின் பின் வீதியில் ஒரு தங்கச் சங்கிலியைக் கண்டெடுத்து அம் மாணவன் அதை வீட்டுக் கொண்டு சென்று தந்தையிடம் கொடுக்கத் தந்தை எனது வீட்டிற்கு மகனை அழைத்து வந்து அச் சங்கிலியைத் தந்தபோது மாணவன் சொன்னான்; “குருவே சங்கிலியை கண்டெடுத்தவுடன் அதை உங்களிடம் கொண்டு வந்து தரத்தான் விரும்பினேன். ஆனால் அப்பாவின் நடத்தை எப்படி இருக்கிறது என்று பார்க்கவே அப்பாவிடம் கொண்டு சென்று கொடுத்தேன். இப்போ எனக்குத் திருப்தி” என்றான். இப்போது அந்த மாணவன் வைத்தியராக இருக்கிறான். நல்லொழுக்கம் ஒருவனை உயர்வடையச் செய்யும்” என்றான் ரவீந்திரன்.

**38) கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்**

**39) செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்**

சிவனடியார்களே, பிள்ளைகளைச் சாதாரணமாக வளர்த்தல் வேண்டும். அவர்களுக்கு அளவுக்கு மீறிய நம்பிக்கையை வளர்க்கக்கூடாது. எல்லோரும் சமம். அவரவர் செய்யும் முயற்சியால் தான் மேன்மை அடைகின்றனர். முயற்சி தான் ஒருவனது வாழ்வைச் சிறப்பிக்கும். முயற்சியில்லாதவன் தான் வாழ்க்கையில் துன்பப்படுகிறான் என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதற்காக முயற்சியுடையவர்களைப் பற்றி அறிந்து அவர்களுக்கு அதைப்பற்றிச் சொல்லுதல் வேண்டும். திறமையாகக் கற்பவனை உற்சாகப்படுத்துதல் வேண்டுமே தவிர அவரது திறமையை உயர்வாகக் கருதி செயற்பட வைத்தல் கூடாது. கல்வியாலும் செல்வத்தாலும் செருக்கு உண்டாகக்கூடாது. செருக்கு உண்டானால் அச் செருக்கு அவரைச் சமூகத்தில் இருந்து விலக்கி வைத்துவிடும். எமது ஊரில் வாழும் கோணேஸ்வரன் என்ற வர்த்தகரைப் பாருங்கள். பெருங் கோடீஸ்வரர். ஒரு நாளென்றாலும் அவர் பட்டுப் பீதாம்பரம் அணிந்ததில்லை. ஏனென்றால் அவருக்கு அதில் பற்றில்லை, அவர் சொல்வார், “நாம் எதையும் செய்யுமுன் அதைப்பற்றி ஆராய வேண்டும். எளிமையாக வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால் தான் மற்றவர்களும் என்னைப் பின்பற்றி வாழ்வர். நான் பட்டு அணிந்து ஆபரணங்களும் அணிந்தால் வறியவர்களும் அப்படி அணிய ஆசைப்படுவர். அந்த ஆசை திருட்டைத் தோற்றுவிக்கும். அதனால் தான் எனது பிள்ளைகளையும் எளிமையாக வளர்த்துள்ளேன். எனது மகன் அரவிந்தன். பேர் பெற்ற வைத்தியன். அவன் அருகில் வசிக்கும் ஏழைகளது வீட்டுக்கும் சென்று வைத்தியம் பார்ப்பான. இது அவனது மனைவிக்கும் பெற்றோருக்கும் பிடிப்பதில்லை. அதனால் குடும்பத்தில் பிரச்சினைகள் வரும். ஒரு முறை அரவிந்தனின் மனைவியின் தகப்பன் விபத்தில் சிக்கி இரண்டு கால்களும் முறிந்து விட்டன. அவரால் இயற்கைக் கடன்களைக் கூட கழிக்கமுடியாதநிலை. இருந்தும் ஊரவர்கள் அவரை நல்ல முறையில் பராமதித்தனர். அவர்களது உறவினர்கள் எல்லோரும் கல்விச் செருக்குடைய பணக்காரர். அந்த நிகழ்வுக்குப் பின் அவர்கள் திருந்தி உலகைப் புரிந்து கொண்டனர்’’ என்பார். இரக்க குணம் எல்லாவற்றையும் பெற்றுத்தரும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்’’ என்றான் ரவீந்திரன்.

**40) நல்குரவு என்னும் தொல்லிடம் பிழைத்தும்**

**41) புல்வரம்பு ஆய பலதுறை பிழைத்தும்**

"சிவனடியார்களே, வறுமை என்னும் கொடுமையில் இருந்து விடுபவன் தான் சிவனை நேசிப்பான். ஒவ்வொருவரும் பொருளாதாரத்தில் மேம்படுதல் வேண்டும். இதற்காக ஒவ்வொருவரும் விடாமுயற்சி உடையவர்களாக இருத்தல் வேண்டும். முயற்சி கைகூடச் சிவனை வணங்குதல் வேண்டும். சிவனின் அனுக்கிரகமில்லாதவன் முயற்சித்து உழைத்தாலும் வீண் செலவுகள் செய்து பணத்தை வீணடித்து விடுவான். சிவ நினைவுள்ளவன் வீணாகச் செலவு செய்யமாட்டான். வீண்வார்த்தைகள் பேசமாட்டான். நாவலூரிலே மணிகண்டன் என்றொரு வர்த்தகன் இருந்தான். அவன் கடும் உழைப்பாளி. ஆனால் சிவ நினைவு இல்லாதவன். கலப்படம் செய்து நல்ல இலாபம் அடைவான். அவனது நண்பன் கணேசன். சிவபக்தன். விடாமுயற்சியுள்ளவன். சிவசேவை செய்பவன். அவன் ஏழைகளுக்குப் பொருட்களைக் கடனாகக் கொடுப்பான். எல்லோருக்கும் உதவி செய்வான். அவனை மணிகண்டன் எப்போதும் ஏசுவான். "உனக்குப் பிழைக்கத் தெரியாது. பொருட்களை வாங்கிய விலைக்குச் சற்று கூட்டி விற்கிறாய். ஏழைகளுக்குக் கடன் கொடுக்கிறாய். அப்படி வாழ்ந்தால் எப்படி முன்னேற முடியும்" என்று கேட்பான். அதற்கு கணேசன் சொல்வான்; "மணி ஒரு மனிதன் உழைப்பது தரித்திரத்தில் இருந்து விடுபட அத்துடன் தீய செயல்களில் ஈடுபடாது வாழ்வது தான் சிவ வாழ்க்கை. சிவ வாழ்க்கை வாழ்பவனைச் சிவன் கைவிடமாட்டான். அவனுக்குத் தரித்திரமான வறுமை வரவும் விடமாட்டான். சிவனை நம்பியவன் அன்றன்று தனக்குத் தேவையான அனைத்தும் கிடைக்கும் என்று வாழ்வான். அது அவனுக்குக் கிடைக்கும். எனக்கு ஒரே ஒரு மகன். அவனுக்குத் தரித்திரம் வராதபடி கல்வியூட்டியுள்ளேன். அவன் பட்டதாரியாகி நல்ல வேலை செய்கிறான். கை நிறையச் சம்பளம் வாங்குகிறான். அவனது நல்ல குணங்களை விரும்பிய மேலதிகாரி தனது மகளைத் திருமணம் செய்யுமாறு கேட்டுள்ளார். அவன் என்னைக் கேட்கும்படி சொல்ல அவர் வந்து என்னைக் கேட்டார். நான் சம்மதித்து விட்டேன். விரைவில திருமணம் நடைபெறும். ஒரு தந்தை வறுமை ஏற்படாதவாறு வாழப் பிள்ளைக்கு பழக்க வேண்டும். அத்துடன் தீய செயல்களைச் செய்யாதிருக்கவும் பழக்க வேண்டும். இரண்டும் இருந்தால் போதும். செல்வம் யாவும் சிவனின் அருளால் வந்து சேரும். பணத்தைத் தேடுவது நல்ல வழியில் வாழ. குடித்து வெறிப்பதற்கும் தீயவற்றை அனுபவிப்பதற்கும் அல்ல" என்றவன். அதனால் சிவனடியார்களே, வறுமை ஏற்படுவது முயற்சியின்மையாலும், தீய செயல்களாலுமே. அதனால் அவற்றை உணர்ந்து உங்கள் பிள்ளைகளுக்கு உணர்த்துங்கள்" என்றான் ரவீந்திரன்.

**42) தெய்வம் என்பது ஓர் சித்தம் உண்டாகி**

**43) முனிவு இலாதது ஓர்பொருள் அது கருதலும்**

**44) ஆறு கோடி மாயா சக்திகள்**

**45) வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின.**

"சிவனடியார்களே, உயிரானது எண்ணிறைந்த பிறவினைகளை எடுத்த பின்பே பரம்பொருளான சிவம் என்று ஒன்று உண்டு என்பதை உணர்கிறது. எத்தனையோ பிறவிகளுக்குப் பின்புதான் மானிடப்பிறவி கிடைக்கிறது. இது கிடைத்தற்கரிய பிறவி. இந்த மானிடப் பிறப்பை எடுத்த உயிரானது சிவத்தை உணருதல் வேண்டும். அதனால்தான் மானிடப்பிறப்புச் சிவனால் உயிருக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதன் முக்கியத்துவம் தெரியாத பலர் அதை வீணாக்குகிறார்கள். அதனால் வினை அதிகரித்து மேலும் மேலும் கீழான பிறவிகளை எடுக்க நேரிடுகிறது. மனிதனாகப் பிறந்துவிட்டால் இயற்கை எத்தனையோ மாய உருக்களை உண்டாக்கி மனிதனைக் கெடுக்கிறது. மனிதனுக்குக் காண்பவை எல்லாவற்றையும் அடைய வேண்டும் என்ற அவா உண்டாகிறது. ஒருவன் வாழப் பொருள் தேவை. அப்பொருளை அறவழியில் தேடுதல் வேண்டும். அறவழியில் செலவு செய்தல் வேண்டும். மணிகண்டன் என்ற வியாபாரி பொருட்களில் கலப்படம் செய்து விற்பான். பணம் ஏராளமாகவே வரும். குடிப்பான், பெண்களோடு சல்லாபிப்பான். இதனால் பணம் செலவாவதோடு மானக்கேடும் உண்டாகும். மணிகண்டனுக்கு மூன்று பெண்கள். திருமண வயதைத் தாண்டியும் அவன் தன் பெண்பிள்ளைகள் மீது அக்கறை கொள்ளாமையால் அவர்கள் ஒவ்வொரு ஆண்களைத் திருமணம் செய்தனர். பொருளில்லாததால் அவர்கள் மிகவும் துன்பப்படுகின்றனர். இதற்குக் காரணம் சிவநினைவு இல்லாமை. கடவுளின் நினைவிருந்தால் தீய செயல்களைச் செய்ய அந்நினைவு விடாது. அத்துடன் குடும்பப் பொறுப்பை நினைவுறுத்தும் மணிகண்டன் தனது மூன்று பெண்களும் சென்றமையால் மிக்க மகிழ்வுடன் செலவு செய்து இறுதியில் வறுமைப்பட்டு மடத்தில் தங்கியிருக்கிறான். சிவநினைவுள்ள கணேசன் தான் மணிகண்டனுக்கும் அவனது மூன்று பெண்பிள்ளைகளுக்கும் உதவி செய்கிறான். கணேசன் பரம்பொருளான சிவனை உணர்ந்தமையால் துன்பங்களின்றி இன்பமாக வாழ்கிறான். மணிகண்டனுக்குச் சிவனின் நினைவு இப்போதும் ஏற்படவில்லை. இது தான் மனித வாழ்வு. கைக்குள் உள்ள இன்பத்தை உணர்ந்து செயற்படாதவர்கள் ஒருபோதும் சிவனை உணர்ந்து இன்பமடையமாட்டார்கள்" என்றான் ரவீந்திரன்.

**46) ஆத்தம் ஆனார் அயலவர் கூடி**

**47) நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்**

"சிவனடியார்களே, மதுவைக் குடிக்காதீர்கள். அது உலகில் உள்ள பாவங்கள் அனைத்தையும் செய்ய வைக்கும். நேற்று மாலை என்னிடம் படித்த மாணவர்கள் இருவர் நன்றாகக் குடித்துவிட்டு அவர்களோடு சேர்ந்து குடித்தவர்களோடு கூடிக் கடவுள் என்று ஒருவர் இல்லை என்று நாக்கூசாது வசைபாடிக் கொண்டிருந்தனர். இது மிகத்தவறான பாவச் செயலாகும். உங்களைக் கடவுள் என்ன கேட்டார்? அவர் தன்பாட்டில் இருக்கும்போது நீங்கள் ஏன் அவரைப்பற்றிப் பேசுகிறீர்கள். ஒருவன் ஆறு மாதங்களாகச் சிவனைத் தன்னை வெளிநாட்டுக்கு அனுப்பும்படி கும்பிடுகிறானாம். இன்னும் அனுப்பவில்லையாம். பணக்காரர்களைத் தான் அனுப்புகிறார் என்று ஒருவன் சொல்ல அதைச் சிலர் ஆமோதித்தனர். கள்ளுண்டவரின் மயக்கத்தைத் தெளிய வைக்க முடியாது. அது நீரில் மூழ்கியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவதைப் போன்றது. சிவனைப் பற்றில்லாமல் தொழுதல் வேண்டும். என்னை வெளிநாட்டிற்கு அனுப்பினால்தான் வாகனம் செய்து தருவேன். சங்கிலி செய்து தருவேன். காவடி எடுப்பேன் என்று பேரம் பேசாதீர்கள். உலகத்தையும், உலகிலுள்ள பொருட்களையும் படைத்தளித்த சிவனுக்கு நீங்கள் படைத்தளிக்கத் தேவையில்லை. ஐந்தெழுத்தைப் பக்தியுடன் ஓதி, ஒரு பூவை வைத்து வணங்குங்கள். உங்களது துன்பங்களைச் சிவன் போக்குவான். அதைவிட்டுவிட்டுப் பயனில்லாத சொற்களைப் பேசாதீர்கள்" என்றான் ரவீந்திரன்.

**48) சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்**

**49) பற்றி அழைத்துப் பதறினர் பெருகவும்**

"சிவனடியார்களே, அப்போது அந்த மாணவர்களின் செயலைக் கண்டு பொறுக்க முடியாத அவர்களின் பெற்றோரும், உறவினர்களும் இங்கு வந்து மிகவும் கவலையோடு நின்றனர். ஊர்ப்பெரியவரான கதிரேசன் அந்த மாணவர்களின் செயலைக்கண்டு வருந்தி அவர்களின் அருகே வந்து அன்புடன் அவர்களைப் பார்த்து; "பிள்ளைகளே, சிவனை நிந்தனை செய்வது பாவம். சிவன் நீங்கள் நினைப்பதுபோலப் பாரபட்சம் காட்டுபவர் அல்ல. அவர் பற்றற்றவர். எல்லோருக்கும் உதவி செய்பவர். அவரை அன்போடு வழிபட வேண்டும். ஊரில்

உள்ளவர்களைப் பாருங்கள். சிவனை அன்போடு வழிபடுவோர் மகிழ்வுடன் இருக்கின்றனர். நீங்கள் மது அருந்துவது பெரும் பாவம். மதுவை அருந்திவிட்டு வாயில் வந்தபடி கதைக்கிறீர்கள். முதலில் மது அருந்துவதை விட்டுவிட்டு அன்புடன் சிவனைப் பூசியுங்கள். உங்களுக்கு உதவி செய்யும்படி நான் சிவனை வணங்குகிறேன்" என்றபோது அங்கு நின்ற தாமோதரன் என்ற வர்த்தகன் சொன்னான். "நீங்கள் சிவனை வணங்கியதாகச் சொல்கிறீர்கள். சிவனை வணங்குவதோடு முயற்சியிலும் ஈடுபடல் வேண்டும். நீங்கள் வெளிநாட்டிற்குச் செல்வதற்கான கடவுச்சீட்டை எடுத்தீர்களா? நான் வெளிநாடுகளுக்கு வேலைக்காக இளைஞர்களை அனுப்புபவன். நீங்கள் வந்து உங்களை அனுப்பும்படி கேட்டீர்களா...? இல்லையே. இது கூடத் தெரியாது சிவனை நிந்திக்கிறீர்களே. அது உங்களுக்கு நியாயமாகத் தெரிகிறதா?" என்று கேட்டார்.

"பலரைக் கண்டதும் பயந்த அவர்கள் இருவரும் கதிரேசனின் கால்களில் விழுந்து வணங்கித் தம்மை மன்னிக்குமாறு வேண்டினர். இதுபோன்ற தவறுகளை இனிமேல் செய்யாதீர்கள்" என்றான் ரவீந்திரன்.

**50) விரதமே பரம் ஆக வேதியரும்**

**51) சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்**

"மகனே, கர்மகாண்டத்தில் சொல்லப்பட்ட கருமநியதிகளே பெரும் பயனைத் தரும் என்று சொல்லி அதைச் செய்கின்ற வேதியர்கள் சாத்திரங்களைக் காட்டி வழிபடுபவனை மாற்ற முயல்கின்றனர். அதனால் அவர்கள் தந்திரமாக வழிபடுவோரை ஏமாற்றிப் பரிகாரங்களையும், நேர்த்திகளையும், பூசைகளையும் செய்வித்துப் பணம் சம்பாதிக்கின்றனர். சைவசமயம் சிவபூசையை வற்புறுத்துகிறது. சிவபூசை என்பது மனத்தையும் உடலையும் தூய்மைப்படுத்திச் சிவனை வழிபடுவது. சிவலிங்கத்திற்கு ஒரு பூவை வைத்து ஐந்தெழுத்தையும், திருமுறைகளையும் தவறாது ஓதி வந்தால் சிவனது அருள்கிடைக்கும். நீயும் உனது தந்தையும் சென்ற மாதம் பெரும்பணம் செலவு செய்து ஒரு பூசையைச் செய்தீர்கள். அப்பூசையைச் செய்தால் ஓரிருநாட்களில் வெளிநாட்டிற்குச் செல்லலாமென்று பூசை செய்தவன் கூறியதை நம்பிச் சிவனை நிந்திக்காதீர்கள். அது பிழையான செயல். சிவனை அன்போடு வணங்குங்கள். முறைப்படி திருவைந்தெழுத்தையும், திருமுறைகளையும் ஓதுங்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்" என்றார் கதிரேசன்.

**52) சமய வாதிகள் தம் தம் மதங்களே**

**53) அமைவது ஆக அரற்றி மலைந்தனர்**

“சிவனடியார்களே, சிவசிந்தை இல்லாதவர்கள் தாம் உயர்ந்தவர்கள், பணம் படைத்தவர்கள், சக்திமான்கள் என்று சொல்லித் திமிருடன் நடந்து கொள்கிறார்கள். சிவ சிந்தனை இல்லாத மனதில் ஆணவம் தான் குடியிருந்து அவர்களைத் தன்போக்கில் ஆட்டிப் படைக்கும். அதனால் என்றும் துன்பத்தையே அவர்கள் அனுபவிப்பார்கள். இப்போது சிவனை நிந்திக்கும் பல சமயங்கள் தோன்றிவிட்டன. அவற்றில் சிலவற்றைச் சிவசிந்தனையில்லாத தனவந்தர்கள், உயர்ந்த உத்தியோகத்தர்கள் தமது நன்மைக்காகப் பின்பற்றுகின்றனர். அவர்கள் கண்களை மூடியவாறு கையை உயர்த்திச் சிறு சிறு பொருட்களை எடுத்து அங்குள்ளோர்க்குக் கொடுக்கிறார்கள். நோய்களைக் குணமாக்குவதாகக் கூறித் தமது கையாட்களை நோயாளிபோல நடிக்க வைக்கின்றனர். அவர்களை நம்பாதீர்கள். சிவனை வழிபட்ட நாயன்மார்கள் கண்முன்னே பல அதிசயங்களை நிகழ்த்திக் காட்டியதை நீங்கள் அறிவீர்கள். கடவுள் தேவைக்காக அவதாரம் எடுப்பாரே தவிர நெடுநாட்கள் அவதார புருஷராக இருக்க மாட்டார். தேவை முடிந்ததும் அந்த அவதாரத்தின் தேவையும் முடிந்துவிடும். தான் கடவுளின் அவதாரம் என்று சொல்லி மக்களை ஏமாற்றுவோர் மக்களின் வறுமையைப் போக்கலாம். தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்கலாம். இவற்றை விட்டுவிட்டு சிறு சிறு பொருட்களைக் கொடுப்பதிலும், பரிகாசம் செய்வதிலும் கண்ணாக இருக்கின்றனர். இவை யாவும் பிழைப்புக்காக நடைபெறுகின்றன. இவற்றை நம்பாதீர்கள். இவர்கள் தங்களது கடவுளை வணங்கினாலொழிய உய்வு இல்லை என்கின்றனர். அவர்களின் மாய வார்த்தைகளை நம்பாதீர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**54) மிண்டிய மாயா வாதம் என்னும்**

**55) சண்ட மாருதம் சுழித்து அடித்து ஆஅர்த்து**

“சிவனடியார்களே, இவ்வுலகம் பொய்த்தோற்றம் என்று மாயாவாதம் செய்பவர்களின் வாதம் பெருங்காற்றுப் போன்று குழப்பத்தை உண்டுபண்ணக் கூடியது. சிவனை வழிபடுவோர் அதிலிருந்து தப்பித்தல் வேண்டும். மாயைதான் உலகை உருவாக்குவது. சிவனை அடைய வழிவகுப்பது. அதனால்

மாயாவாதிகள் கூறுபவற்றை நம்பாதீர்கள். சிவனை நம்புங்கள். நித்திய இன்பமான முத்தி என்ற பேரின்பத்தை அனுபவிப்பீர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**56) உலோகாயதன் என்னும் ஒன்திறல் பாம்பின்**

**57) கலா பேதத்த கடுவிடம் எய்தி**

“சிவனடியார்களே, இவ்வுலகைத் தவிர வேறு உலகம் எதுவும் இல்லை. அதனால் மறுமை என்று எதுவும் இல்லையென்று உலோகாயுதம் என்ற சமயம் கூறுகிறது. அவர்கள் ஒளிவீசிக் கொண்டிருக்கின்ற கொடிய நஞ்சை உண்ட பாம்புக்குச் சமமானவர்கள். அவர்களது விபரீதமான கோட்பாடுகள் நஞ்சுக்கு ஒப்பானவை. எதற்கும் ஒரு மூலம் உண்டு. காரணம் இல்லாமல் காரியம் நடக்காது. மழையில் கடுமையாக நனைந்தால் தடிமன் காய்ச்சல் போன்ற நோய்கள் வரும். உண்ணக் கூடாதவற்றை அல்லது அமிர்தமாகச் சுவைக்கும் உணவை அதிகமாக உண்டால் நோய் உண்டாகும். ஒருவன் பணக்காரனாகவும், இன்னொருவன் ஏழையாகவும் ஏன் பிறக்க வேண்டும்? சிலர் அங்கவீனமாகப் பிறக்கிறார்கள். இது ஏன்? மூன்று பிள்ளைகள் நிபுணத்துவமுள்ளவர்களாகப் பிறந்திருக்கும்போது ஒரு பிள்ளை வலது குறைந்த பிள்ளையாக ஏன் பிறக்கிறது. மூன்று பிள்ளைகளும் பிறக்குமுன் என்னென்ன தருமம் செய்தனர். வலது குறைந்த பிள்ளை என்ன பாவம் செய்தது. மறுமையில்லையானால் அவை எப்பிறப்பில் புண்ணியத்தையும், பாவத்தையும் செய்தன. விதை இருந்தால் தான் மரம் உண்டாகும். விதை இல்லாவிட்டால் மரம் எப்படி உண்டாகும்? விதையின் வீரியத்தைப் பொறுத்துத் தான் மரத்தின் வளர்ச்சி தெரியும். இவற்றிற்கெல்லாம் முன்புள்ள ஏதோவொன்றின் தொடர்பு இருந்திருக்கிறது. பிறந்த பிள்ளை தாயைப் போலவும் இல்லை, தந்தையைப் போலவும் இல்லை. தாயும் தந்தையும் நல்ல சிவந்த நிறத்தவர். பிள்ளை இருண்ட கறுப்புப் பிள்ளை. பிள்ளையின் தாயின் தாய் சொல்கிறாள். எனது தந்தை வந்து பிறந்துள்ளார். அவர் சரியான கறுப்பு நிறம். இடது கண்ணின் வெண்படலத்தில் அவருக்கு ஒரு மச்சம் உண்டு. இவனுக்கும் இருக்கு. அவர் சரியான கோபக்காரர். இவனுக்கு ஒரு வயது, சகோதரர்களுக்கு அடிக்கிறான். பிடிவாதம் பிடிக்கிறான். இது அவர் தான் என்கிறார். வந்து பிள்ளையைப் பார்த்த முதியவர்கள் “கந்தர் வந்து பிறந்திருக்கிறார்.” என்று சொல்கின்றனர். அதனால் முற்தொடர்பு இல்லாமல் எதுவும் இராது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**58) அதில் பெரு மாயை எனைப்பல சூழவும்**

“சிவனடியார்களே, இந்த உலகத்திற்கு அப்பால் எதுவும் இல்லை. அதுபோல மாயைக்கு அப்பாலும் எதுவும் இல்லை. அவைக்கு அப்பால் இருப்பது சூனியம் என்கிறது உலோகாயுதம். மாயைக்கு அப்பால் சிவன் இருக்கிறார். அண்டங்கள் இருக்கின்றன. சுவர்க்கம், நரகம் உண்டு என்று கூறுவது சைவசமயம். சிவன் அன்பானவன். ஆருயிர்களிடத்து அன்பு கொண்டுள்ளமையால் தான் அவன் ஆருயிர்களுக்காகச் செயற்படுகிறான். சிவனடியார்கள் பற்றின்றி வணங்கினால் அவனைக் கண்டு கொள்ளலாம். சிவனடியார்களுக்காக அவன் எதையும் செய்வான். உதாரணமாகச் சிவன் மார்க்கண்டேயருக்காக யமனைக் காலால் உதைத்தவன். சம்பந்தர் பசியால் அழ உமையைக் கொண்டு பாலூட்டியவன். இப்படி எத்தனையோ திருவிளையாடல்களைச் சொல்லலாம். சைவசமயக் கோட்பாடுகள் முரண்படாதவை. மயக்கத்தைக் கொடுக்காதவை. நம்பிப் பின்பற்றக்கூடியவை. ஆனால் உலோகாயுதத்தக் கொள்கைகள் எது சரி, எது தப்பு என்று முடிவெடுக்க முடியாதவை. அதனால் அவை தடுமாற்றத்தை உண்டுபண்ணுபவையாகவே இருக்கின்றன. சைவசமயம் சிவ வழிபாட்டைப்பற்றி மிகத் தெளிவாகக் கூறுகிறது. உணவைப் பற்றிய உண்மையைக் கூறுகிறது. மாயையைப்பற்றித் தெளிவாகக் கூறுகிறது. சிவனது திருவடிப் பேரின்பம் பற்றி விளக்கமாகக் கூறுகிறது. இவ்வாறு உலோகாயுதம் கூறவில்லை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**59) தப்பாமே தாம் பிடித்தது சலியாத்**

**60) தழலது கண்ட மெழுது அது போலத்**

**61) தொழுது உளம் உருகி அழுது உடல் கம்பித்து**

அன்று காலை கதிரேசனது வீட்டுக்கு வந்த செந்தூரன் என்ற நடுத்தர வயோதிபர் சொன்னார்; “ஐயா, நான் மிகவும் ஏழை என்பது உங்களுக்குத் தெரியும். உங்களின் துணையோடும், சிவனின் அருளோடும் எந்தவிதத் துன்பமுமின்றி வாழ்ந்து வருகின்றேன். முன்பு மாற்று மதத்தினர் பொருளாசை காட்டிப் பலரைத் தாம் பின்பற்றும் மதத்திற்குச் சேர்த்தபோதும் நான் சேராது சிவனையே தொழுது வந்தேன். அது உங்களுக்குத் தெரியும். எத்தனையோ விதமான மதி மயக்கங்களுக்கிடையில் எனது கொள்கையில் இருந்து

மாறாதிருந்தேன். தீயிலிட்ட மெழுகுபோல உள்ளம் உருகிச் சிவனைத் தொழுதேன். இறைவனின் அருளை நினைத்து அழுது புலம்பினேன். சிவன் எனக்கு எல்லாவற்றையும் தந்தான். இப்போ எனது மூத்தமகன் சைவத்திற்கு முரணான சமயத்தைப் பின்பற்றும் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். நான் அவனின் காதலை ஏற்கத் தயார். ஆனால் அப்பெண் தனது சமயத்தைக் கைவிட்டு விட்டுச் சைவத்தைப் பின்பற்ற வேண்டும் என்றேன். அவள் மறுக்கிறாள். மகனைத் தனது மதத்தில் சேர்ந்தால்தான் அவனைக் கல்யாணம் செய்வாளாம்.” அழுதான் செந்தூரன்.

“அழாதை செந்தூரா, இப்படியான துன்பங்கள் உடைய உலகத்தில் தான் நாம் வாழ்கிறோம். உனது மகன் மகேசன் சிவபக்தன். முன்பு நீ ஏழையாக இருந்தபோது பலர் உன்னைச் சைவசமயத்தில் இருந்து மாற்ற முயற்சித்தனர். நீ அதற்கு இடங்கொடுக்கவில்லை. அதனால் நீ பாக்கியவான், சிவபக்தன். அதனால் உனது மகன் மகேசன் மதம் மாறமாட்டான். நான் அவனுடன் கதைக்கிறேன். நீ சிவனிடம் முறையிடு” என்றார் கதிரேசன்.

**62) ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்**

**63) கொடிறும் பேதையும் கொண்டது விடாது எனும்**

**64) படியே ஆகிநல் இடை அறா அன்பின்**

அன்று மாலை மகேசன் கதிரேசனைத்தேடி அவரது வீட்டுக்கு வந்து சொன்னான்; “ஐயா, உங்களின் உதவியால் தான் நான் படித்து இந்த நிலையை அடைந்தேன். அதற்குச் சிவனின் அருளும் இருந்தது. அப்போது நான் சிவனை நினைத்துப் பாடி ஆடுவேன். குறடு போன்றும் அறிவிலி போன்றும் நான் நீங்கள் சொல்லிய சிந்தனைகளை ஆராயாது பின்பற்றி வாழ்ந்தேன். சிவன்மீது பக்தி கொண்டு அந்நினைவாகவே வாழ்ந்தேன். வறுமைப்பட்ட காலத்தில் எனது தந்தை தான் உண்ணாது பிள்ளைகளுக்கு உணவு ஊட்டியவர். அப்படியானவரின் மனதை நான் துன்பப்பட விடமாட்டேன். என்னுடன் வேலை செய்யும் ஒரு பெண் பேரழகி. அவள் என்ன சமயத்தாள் என்பதை ஆராயாது அவளின் அழகை மோகித்து அவளைக் காதலித்தேன். இப்போதுதான் அவள் எமது சமயத்திற்கு மாறானவள் என்று புரிந்து கொண்டேன். அப்பா எனது காதலை ஏற்றுவிட்டார். அவள் மதம் மாறினால் சரி என்கிறார். ஆனால் அவள் அதற்குச்

சம்மதிக்கிறாளில்லை. அவள் என்னைத் தனது சமயத்திற்கு மாறட்டாம். இது நடக்காது. அவளுக்குத் தனது மதத்தில் உள்ள பற்றைவிட எனக்கு சிவன்மீது பத்துமடங்கு பற்று அதிகம். அதனால் அவளை வெறுத்து ஒதுக்கி விட்டேன்" என்றான்

"மகனே, உனது தந்தை பக்தி என்னும் தூய அன்பில் மூழ்கியவர். அவரைப் போலவே நீயும் இருக்கிறாய். இதைக் கேட்டால் உனது தந்தை மகிழ்வார்" என்றார் கதிரேசன்.

**65) பசு மரத்து ஆணி அறைந்தால் போலக்**

**66) கசிவது பெருகிக் கடல் என மறுகி**

**67) அகம் குழைந்து அனுகுலம் ஆய் மெய்விதுர்த்துச்**

**68) சகம்போய் என்று தம்மைச் சிரிப்ப**

"ஐயா பச்சைமரத்தில் ஆணியைச் செலுத்துவது போன்று நீங்கள் சிவசிந்தனைகளை எனது மனதுள்ப் புகுத்தினீர்கள். அதனால் எனது மனம் வைரம் பாய்ந்துவிட்டது. சிவனை நினைத்தால் உடல் சிலிர்க்கிறது. அந்த நினைவோடு அவளைப் பார்க்க என் கண்கள் கூசுகின்றன. உடல் பற்றி எரிவதைப் போலுள்ளது. இப்போது அவளைக் கண்டால் வெறுப்புத்தான் உண்டாகியது. அவள் என்னிடம் அடிக்கடி வந்து இனிமையாகப் பேசுகிறாள். மாயப் புன்னகையைச் சிந்துகிறாள். இவை எதுவும் என்னை மயக்காது. நெஞ்சம் எரிகிறது. முன்பு சிவனை நினைத்தால் நான் பைத்தியக்காரனாகி விடுவேன். சிவனோடு கதைத்துச் சிரிப்பேன். கைகொட்டி மகிழ்வேன். புலம்புவேன். அப்போது சிலர் என்னைப் பைத்தியக்காரன் என்பர். அண்மையில் எனக்குத் திருமணம் பேசி வந்தபோது பெண்ணின் தந்தை என்னைப்பற்றி ஊரவரிடம் விசாரித்தபோது ஒருவர் சொன்னாராம் அவன் பைத்தியம் என்று. சிலர் என்னைப் பேய் என்றனராம். இவ்வாறு சிவப்பித்துப் பிடித்த நான் எவ்வாறு மதம் மாறுவேன்" என்று ஆத்திரப்பட்டான் மகேசன்.

**69) நாண் அது ஒழிந்து நாடவர் பழிந்துரை**

**70) பூண் அது ஆகக் கோணுதல் இன்றிச்**

“மகனே, மேலான சிவபக்தன் எதற்கும் வெட்கப்படுவதுமில்லை. எதைக் குறித்தும் கவலை கொள்வதும் இல்லை. உலகத்தவர்களின் கேலிப் பேச்சுக்களை அவன் ஆபரணங்களாக எடுத்துக் கொள்கிறான். ஏனென்றால் தன்னிடம் உள்ள குறைபாடுகள் எதுவும் இருக்குமானால் அதை அறிந்து கொள்ள அது பயன்படும் என்பது அவனுக்குத் தெரியும். பேய், பிசாசு, பைத்தியம் என்பது மேலான சிவநிலை” என்றபோது மகேசன் சொன்னான்; “ஐயா, இவற்றையெல்லாம் முன்பே நீங்கள் எனக்கு விளக்கமாகக் கூறியதால் நான் கவலைப்படவில்லை. இன்று தூற்றுவோர் நாளை உண்மையை அறிந்து கொள்வர். அவர்கள் அறிந்து கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. நான் விரும்பிய பெண்ணின் பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர்கள் மிகவும் கேவலமாக என்னைப் பற்றிக் கதைத்தமையால் அந்தப் பெண் என்னைவிட்டு நீங்கி விட்டாள். அது பெரும் நன்மைதானே. நான் அவளை வெறுத்து ஒதுக்கினால் ஊரவரும் என்னைப்பற்றித் தவறாக நினைப்பார்கள். கேவலமாகவும் கதைப்பார்கள். இவை நடக்காமல் என்னைச் சிவன் காப்பாற்றி விட்டான். அவப்பெயர் ஏற்படாமல் போய்விட்டது.” என்றான் மகேசன்.

**71) சதுர் இழந்து அறிமால் கொண்டு சாரும்**

**72) கதியது பரமா அதிசயம் ஆகக்**

**73) கற்றா மனம் எனக் கதறியும் பதறியும்**

**74) மற்று ஓர் தெய்வம் கனவிலும் நினையாது**

“மகனே நான் வல்லவன், தனவந்தன், கற்றவன் என்ற செருக்குச் சிவசிந்தனைக்குத் தடையாகும். அது உன்னிடத்தில் இல்லை. அந்தச் செருக்கு நீங்கினால்தான் மெய்யறிவு உண்டாகும். பக்தனது நோக்கம் சிவனை அடைதலே. அது உனக்குத் தெரியும். அதனால் உனது பெற்றோரின் விருப்பப்படி திருமணம் செய்து கொள். ஏனென்றால் குடும்ப உறவுதான் முக்திக்கு வழிவகுப்பது. என்னைப்பற்றி உனக்குத் தெரியும். எனது மனைவி எனது சிவச்சேவைகளுக்கு உறுதுணையாக என்றும் இருப்பவள். கன்றிற்காகப் பசு உருகுவது போன்று பக்தர்கள் சிவனை நினைத்து உருக வேண்டும். அவனால் அவர்கள் கதறவும் பதறவும் செய்கின்றனர். அதனால் சிவனைப் பற்றிய நினைவன்றி அவர்களின் மனதில் வேறு எதுவும் பவரலாகாது. அதற்கு

நல்லதொரு மனைவி எப்போதும் உறுதுணையாக இருப்பாள். சிவனை நினைப்பவர்கள் அந்நிலையை மறந்து விடுவார்களா என்ன. சிவனும் சக்தியும் போலக் கணவனும் மனைவியும் இணைபிரியாது வாழ்ந்து சிவச்சேவை செய்து சிவனை அடைதல் வேண்டும்." என்றார் கதிரேசன்.

**75) அருபரத்து ஒருவன் அவனியில் வந்து**

**76) குருபரன் ஆகி அருளிய பெருமையைச்**

"மகனே, பிரபஞ்சத்துக்கு அப்பால் இருக்கின்ற சிவன், பிரபஞ்சத்தின் ஒரு பகுதியான பூமிக்குப் பரமகுருவாக வந்து குறிப்பிட்ட ஆன்மாக்களை ஆட்கொள்வார். அப்படியான சிவன் திருப்பெருந்துறையில் குருவாக வந்து மாணிக்கவாசகரை ஆட்கொண்டவர் என்று மாணிக்கவாசகரே கூறுகின்றார். அவர் எம்மையும் ஆட்கொள்வார் என்று நம்பு. பூமியில் நாம் வந்து பிறந்தது சிவனுக்குச் சேவை செய்வதற்காக என்ற நினைவு எப்போதும் மனதில் இருத்தல் வேண்டும். அந்த நினைவு உன்னிடத்தில் உண்டு. அதனால் வேறு நினைவுகளை விட்டுவிட்டுச் சிவ நினைவாக இரு. சிவன் கட்டாயம் உனக்கு அருள்வார்" என்றார் கதிரேசன்.

**77) சிறுமை என்று இகழாதே திருவடி இணையைப்**

**78) பிறிவினை அறியா நிழல் அதுபோல**

"மகனே, இறைவன் இன்பத்தைத் தான் தர விரும்புவான். ஆனால் வினை வலுத்தால் துன்பங்கள் எம்மை வந்தடைகின்றன. நீ சிவபக்தன். இருப்பினும் வினைப்படி ஒரு துன்பம் உன்னை வந்து வாட்டி விட்டது. ஒழுக்கமாக வாழ்ந்த உனது வாழ்வில் ஒரு பெண் வந்து குறுக்கிட்டு விட்டாள். அது வினைப்பயன் அன்றி வேறு எதுவும் இல்லை. சிவன் இப்படி ஒரு பெண்ணை என் வாழ்வில் குறுக்கிட வைத்துவிட்டானே என்று அதை நீ அலட்சியப்படுத்தாது சிவனது திருவிளையாடல் என நினைத்து அதை அகற்றிவிட்டாய். அதைச் செய்தவன் சிவன். விதி சிவனடியார்களை வருத்தும்போது அவர்கள் தூய்மைப்படுத்தப்-படுகிறார்கள். நிழல் உருவங்களை விட்டுப் பிரியாது இருப்பதைப் போலச் சிவனடியார்களின் சிந்தனைகள் சிவனைவிட்டுப் பிரியாது இருத்தல் வேண்டும். அதற்கு உறுதியான மனநிலை வேண்டும். ஒரு பெண்ணைக் கண்டால்

திருமணமானவனும் ஆசைப்படுவான். இது இயல்பு. அதுவும் அழகிய பெண்ணென்றால் பேசத் தேவையில்லை. காதலிப்பது தவறு அல்ல. அம்மை சிவனைக் காதலித்தவள். அதனால் காதல் புனிதமானது. ஆனால் காதலித்த பெண்ணை ஆராயாது அவளது கவர்ச்சியில் மயங்கி அழிந்தவர்கள் பலர். ஆனால் உனது எண்ணங்கள் நிழலைப்போலச் சிவனைப் பின் தொடர்வதால் காமம் அகன்று விட்டது. இதிலிருந்து உனது எண்ணம், சிந்தனை, நோக்கம் யாவும் சிவனைச் சூழ்ந்திருக்கின்றது என்று தெரிகிறது. இதற்காகத்தான் மாணிக்கவாசகர் சிவத்துடன் தனக்கிருந்த தொடர்பை விளக்கினார்" என்றார் கதிரேசன்.

**79) முன்பின் ஆகி முனியாது அத்திசை**

**80) என்பு நைந்து உருகி நெக்கு நெக்கு ஏங்கி**

**81) அன்பு எனும் ஆறு கரை அது புரள**

**82) நன் புலன் ஒன்றி நாத என்று அரற்றி**

"மகனே, மெய்யான சிவனடியான் சிவன்மீது வைத்துள்ள பக்தியில் ஏற்றத் தாழ்வு இல்லை. அதுபோல வெறுப்பும் ஏற்படாது. தான் ஆட்கொள்ளப்பட்ட திசையை நோக்கி அவனது நினைவுகள் இருப்பதனால் அவனது எலும்புகள் உருகி அன்பு வெளிப்படும். காட்டாற்று வெள்ளம்போல அவனது பக்தி பெருகி ஓடும். அவனது ஐம்புலன்களும் தமது செயல்களை இழக்கின்றன. அதனால் சிவனது நாமத்தை அவனது நாவு பாடும்" இவ்வாறு மாணிக்கவாசகர் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை மனம் திறந்து கூறுகிறார். இந்த அனுபவம் எளிதில் கைகூடாது. நான் ஐம்பது வருடங்களாகச் சிவனை நினைத்து உருகுகிறேன். மாணிக்கவாசகர் கூறியதுபோன்று அனுபவம் எதுவும் எனக்கு ஏற்படவில்லை. என்னைச் சிவன் ஆட்கொண்டால்தான் அது ஏற்படும். அது ஏற்படவில்லை என்று நான் வருந்தவும் இல்லை. அதைப்பற்ற எண்ணவும் இல்லை. காலம் கைகூடும்போது எதுவும் நடக்கும். சுந்தரம் பெரும் சிவபக்தன். எந்நேரமும் சிவ நினைவோடு இருப்பவன். அவனுக்கு ஐந்து பெண்பிள்ளைகள் இருந்தும். ஐந்தும் திருமண வயதை அடைந்தவர்கள். யாராவது, "சுந்தரம் ஐந்து பெண்பிள்ளைகளைப் பெற்று வைத்துள்ளாய். உன்னிடம் சொத்துக்கள் பெரிதாக இல்லை. இருப்பினும் அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும்

என்ற எண்ணம்கூட உனக்கில்லை என்று யாராவது சொன்னால்; “எம்மால் எதைச் செய்ய முடியும். பெரும் தனவந்தனான அருணாசலத்திற்கு ஒரே ஒரு பெண்பிள்ளை. முப்பது வயது கடந்தும் திருமணமாகாது இருக்கிறாள். என் அப்பனான சிவன் எனது பிள்ளைகளுக்கு எப்போது திருமணத்தைச் செய்து வைக்க விரும்புகின்றானோ அப்போது நடக்கும்” என்றவன். எல்லாப் பிள்ளைகளுக்கும் திருமணம் முடிந்துவிட்டது. அத்துடன் அருணாசலத்தின் மகளுக்கும் திருமணம் முடிந்துவிட்டது. காரியம் முடியும்வரை சிவநினைவோடு பொறுத்திருத்தல் வேண்டும்” என்றார் கதிரேசன்.

**83) உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்பக்**

**84) கரம் மலர் மொட்டித்து இருதயம் மலர**

**85) கண் சுளிகூர நுண் துளி அரும்ப**

“மகனே, உலகத்தவர்களின் நன்மைக்காகவே சிவனடியார்கள் வாழ்கின்றனர். அவர்கள் சிவனை இடையறாது வணங்குவதால் சிவனும் அவர்களோடு எவ்வேளையிலும் கூட இருக்கிறார். அதனால் சிவனடியார்களுக்குச் சிவனைத் தவிர வேறு எந்த நினைவும் இராது. நல்லைநதன் பெரும் சிவபக்தன். எனது நண்பன். எனது வயதுக்காரன், சென்ற மாதம் அவனது பீட்டப் பிள்ளை திடீரென்று காலமானது. அதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. விதிப்படி காரியங்கள் நடைபெறும். அதைத் தடுக்க முடியுமா…? யாராலும் எதுவும் செய்ய முடியாது” என்றான். இதைக்கேட்ட பலர் அவனை ஏசினர்; “பக்தியின் மேலீட்டால் சொல் தடைப்படும். உடல் சிலிர்க்கும், கை குவியும், உள்ளத்தில் உணர்ச்சி பெருகும். ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கக்கூடும்” என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். அது உண்மை. சிவனை நினைத்தால் எனக்கும் அந்நிலை உண்டாகிறது. சிலர் பேசுவர். சிலர் பேசார். “நல்லைநாதன் அதிகமாகப் பேசமாட்டான். நான் சிவனின் பெருமையைப் பேசுவேன். இதை உணராமலே தவிர காண முடியாது? என்றான் கதிரேசன்.

**86) சாயா அன்பினை நாள்தோறும் தழைப்பவர்**

**87) தாயே ஆகி வளர்த்தனை போற்றி**

“மகனே, நீ சிவனின் மீது கொண்டுள்ள பக்தி போற்றுதற்குரியது. மேலானது. தினந்தோறும் உனது பக்தி மேலோங்குவதை என்னால் காண முடிகிறது. அப்படியான பக்தி உடையவர்களுக்குச் சிவன் தாயாகி விடுகிறான்.” என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். எனது மனைவியை நான் திருமணம் செய்தபோது அவள் அகங்காரம் மிக்கவளாக இருந்தாள். அவள் யாரையும் மதிப்பதில்லை. என்னுடன்கூட அவள் முரண்படுவாள். எனக்கு அளவுக்கு மீறிய கோபம் வரும். அப்போது சிவனை நினைப்பேன். திருணமான சில வருடங்களில் அவளின் போக்கு மாறிவிட்டது. ஒரு தாயைப்போல என்மீது மட்டற்ற அன்பைச் சொரிந்தாள். எனது பெற்றோருடனும், அயலவர்களுடனும் அன்பாகப் பழகத் தொடங்கினாள். இன்றுவரை அப்படித்தான் பழகுகிறாள். அதற்குக் காரணம் நான் சிவனின்மீது வைத்த அளவில்லாத பக்திதான். எனக்கேன் இப்படியான ஒரு பெண்ணை மனைவியாகத் தந்தாய் என்று நான் சிவனை வணங்கும்போது அழுவேன். எனது அளவில்லாத பக்தி அவளை அன்புள்ளவளாக மாற்றிவிட்டது. தாய்க்குப் பின் தாரம் என்பார்கள். அது உண்மை. இன்று எனது முன்னேற்றத்திற்குக் காரணம் அவள்தான். சிவன் அவளை மாற்றாதிருந்தால் நான் இன்று ஒரு பெருங் குடிகாரனாக இருந்திருப்பேன். அப்படியான சிவனை நான் போற்றிப் புகழ்ந்து வணங்குகிறேன். முன் செய்த தீவினைப் பலனாகத்தான் அந்தப் பெண் உனக்குக் காதலியாகக் கிடைத்தாள். அதைச் சிவன் மாற்றியருளிவிட்டார். இனி உனக்குத் தாயைப் போன்ற ஒரு பெண் தான் மனைவியாகக் கிடைப்பாள்” என்றார் கதிரேசன்.

**88) மெய்தகு வேதியன் ஆகி வினை கெடக்**

**89) கைதர வல்ல கடவுள் போற்றி**

**90) ஆடு அகம் மதுரை அரசே போற்றி**

**91) கூடல் இலங்கு குருமணி போற்றி**

“மகனே, மெய்ப்பொருளை விளக்குகின்ற அந்தணனாக வந்து எனது பிறவினைகளை அறுத்து உதவிய சிவனே போற்றி. மதுரையைத் திருத்தாண்டவத்திற்குரிய இடமாகக் கொண்டு திருநடனம் புரியும் சிவனே போற்றி. என்னைச் சீடனாக உன்னோடு சேர்த்துக் கொண்ட பரமாச்சாரியனே போற்றி” என்று மாணிக்கவாசகர் உருகுகிறார். மகிழ்கிறார். மேலான ஆனந்தம் கொள்கிறார். இந்நிலை மெய்யன்பர்களுக்கு உண்டாவது இயல்பு. அதனால் சிவனைப் போற்றி வணங்கு” என்றார் கதிரேசன்.

**92) தென் தில்லை மன்றினுள் ஆடி போற்றி**

**93) இன்று எனக்கு ஆர்அமுது ஆனாய் போற்றி**

**94) மூவா நான்மறை முதல்வா போற்றி**

**95) சேஆர் வெல் கொடிச் சிவனே போற்றி**

"மகனே, மேலும் மாணிக்கவாசகர் சொல்கிறார்" தெற்கில் உள்ள சிதம்பரத்தில் ஆடுகின்றவனுக்கு வணக்கம். என்னை அமிழ்த சொரூபமாக்கிய-வனுக்குப் போற்றி. காலத்தால் அழிக்க முடியாத நான்கு வேதங்களுக்கும் தலைவனாக இருக்கின்ற தலைவா போற்றி" என்கிறார்.

**96) மின் ஆர் உருவ விகிர்தா போற்றி**

**97) கல் நார் உரித்த கனியே போற்றி**

**98) காவாய் கனகக் குன்றே போற்றி**

**99) ஆ ஆ என்தனுக்கு அருளாய் போற்றி**

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கதிரேசனும் சில சிவனடியார்களும் அயலூர் மக்களின் வேண்டுகோளுக்காக அங்கு சென்றனர். அவ்வூர் சிவன்கோவில் பாழடைந்திருந்தது. கடந்த இரண்டு வருடங்களாக மழைபெய்யாமையால் கோவிலைச்சுற்றி இருந்த நிலத்தில் நின்ற மரங்கள் யாவும் பட்டுப்போயின. கிணறுகளில் நீர் இல்லை. அவ்வூர்ப் பெரியவர் ஒருவர் சொன்னார்" சுவாமி, என்ன நடந்ததென்று தெரியவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக மழை பெய்யாததால் எமது ஊர் வறுமைப்பட்டுவிட்டது. பலர் ஊரைவிட்டுச் சென்று விட்டனர். எமக்குச் செல்லப் புகலிடம் இல்லாததால் நாம் அடுத்த கிராமங்களுக்குச் சென்று கூலிவேலை செய்து வருகின்றோம். குடிநீரையும் பத்து மைல்களுக்கப்பால் இருந்து கொண்டு வருகிறோம். இந்தத் துன்பத்தை நீங்க வழி சொல்லுங்கள்" என்றான்.

"மகனே, முதலில் கோவிலைத் துப்பரவு செய்யுங்கள். பூசை செய்வோம்" என்று கூறிய கதிரேசன் கோவிலின் முன்னால் நின்ற அரச மரத்தின் கீழ்ச்

சென்று அமர்ந்தார். சுவாமியாரும் கூட வந்த அடியவர்களும் கதிரேசனுக்கு அருகில் வந்து அமர்ந்தனர். கதிரேசன் கண்மூடியபடி அமர்ந்து திருமுறைகளை ஓதினார். சில முதியவர்களும் அவர்கள் அருகில் வந்து அமர்ந்தனர். சுவாமியார் சொன்னார், "துன்பம் வரும் வேளையில் தான் சிவனை முழுமையாக நம்பித் தொழுதல் வேண்டும். பிரபஞ்சமெங்கும் வேறு வேறு வடிவங்களை எடுத்து மக்களைக் காப்பாற்றும் சிவனை போற்றுவோம். கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்ப பெறுதற்கு அரிய ஞானக்கனியாக இருக்கும் சிவனைப் போற்றுங்கள். உங்களது துன்பங்கள் யாவும் நீங்கும். துன்பங்கள் வந்தவுடன் அத்துன்பங்களை நீக்கியருளும்படி வேண்டாது ஒவ்வொருவரும் தங்களை நம்பி ஊரைவிட்டு வெளியேறியும், ஊர்ச்சிவனை மறந்தும் விட்டீர்கள். துன்பம் வரவரத் தாங்கிக்கொண்டு பிரார்த்தித்தல் வேண்டும். பிரார்த்தியுங்கள்" என்றார். மேலும் பலர் வந்திருந்து பிரார்த்தனை செய்தனர். கோவில் முழுமையாகத் துப்பரவு செய்யப்பட்ட பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனுக்குப் பூசை செய்தார். இரு தினங்கள் கழியப் பெரும் மழை பெய்தது.

பெருமழை நான்கு தினங்கள் பெய்தது. மக்கள் மகிழ்வுடன் சுவாமியாரையும் கதிரேசனையும் வாழ்த்தினர். "மக்களே மாணிக்கவாசகர் சொல்கிறார்; "பொன்மலை போன்று இருந்து எங்களைக் காப்பவனே போற்றி" என்கிறார். ஆ ஆ என்று பெரிதாகக் கத்தி வணங்கிய எனக்கு அருளியவனே போற்றி" என்றிறார். சிவன் பொன்மலை போன்றவன். பொன் பெறுமதியானது அது போலச் சிவனது அருளும் பெறுமதியானது. அந்த அருள் எம்மை வந்தடைய வேண்டுமானால் நாம் அவனை இரந்து அழைத்தல் வேண்டும். நாம் சில தினங்களாகச் சிவனை இரந்தோம். அதனால் அவனது அருள் கிடைத்துவிட்டது" என்றார் கதிரேசன்.

**100) படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி**

**101) இடரைக் களையும் எந்தாய் போற்றி**

பசுபதி என்ற முதியவர் சொன்னார்; "எமது பூமி பொன்விளையும் பூமி. சமீபகாலமாகச் சிலர் செய்யத்தகாத செயல்களில் ஈடுபட்டனர். நன்றாகக் குடித்தனர். பால்தரும் பசுக்களை வெட்டி அதன் மாமிசத்தை உண்டனர். கோவில் சொத்துக்களைக் களவெடுத்தனர். கோவில் தலைவரும் சில துட்டர்களும் சேர்ந்து சிவனது ஆபரணங்களைத் திருடிக்கொண்டு வேறு

ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். இங்கிருந்து பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து சென்றுவிட்டன. நாம் சிவனின் மீது இருந்த நம்பிக்கையில் இருந்தோம். கோவிலைப் பராமரிக்க முடியவில்லை. எமது ஊரவர்கள் உங்கள் ஆச்சிரமத்திற்கு வந்து அங்கு தங்கிவிட்டனர். அவர்கள் தான் எமது நிலையை உணர்ந்து உங்களை அழைத்து வந்தனர். அதற்கான பயன் கிடைத்துவிட்டது” என்றார்.

இன்னொரு முதியவர் சொன்னார்; “அவர்கள் பாவம் செய்யும்போது நாம் தட்டிக் கேட்கவில்லை. அதற்கான தண்டனை தான் இது. சிவன் பிரபஞ்சத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்பவன். அவனைப் போற்றி வணங்கினால் உயிர்களுக்கு உண்டாகும் துன்பங்களைப் போக்குவான் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். அதில் எனக்கு நம்பிக்கை உண்டு. இங்கு வாழும் பலர் அதனை நம்புகின்றனர். அதனால் தான் அவர்கள் உங்களை அழைத்து வந்தனர். ஐந்தறிவுள்ள மிருகங்கள் துன்பப்பட்டாலே உதவிடும் சிவன் மனிதர்களுக்குக் கட்டாயம் உதவுவான் என்ற நம்பிக்கையில் இருந்தேன். நான் ஒரு விவசாயி. வயலை உழுது விதைத்து விட்டேன். குளத்தில் நீர் நிரம்பியுள்ளது. அதனால் வயலில் விளையும் நெல் எமது குடும்பத்திற்கு இரண்டு வருடங்களுக்கு உண்ணப் போதும். குளத்தில் நீர் நிரம்பியுள்ளதால் இன்னும் இரண்டுமுறை விதைக்கலாம்” என்று ஆனந்தக் கண்ணீர் விட்டார் அந்த முதியவர்.

**102) ஈச போற்றி இறைவ போற்றி**

**103) தேசப் பளிங்கின் திரனே போற்றி**

பசுபதி சொன்னார்; “சுவாமி திருவாசகத்திற்கு உருகாதவர் வேறு எதற்கும் உருகமாட்டார் என்று எனது தந்தை சொல்வார். எமது கிராமம் கெட்டது பிறசமயத்தவரின் வருகையால். அவர்கள் வந்து உணவும், உடையும், பொருட்களும் கொடுத்தவுடன் பலர் மதம்மாறி விட்டார்கள். யார் எதைச் சொன்னாலும் கேட்பதில்லை. சில நாட்களில் சமயத்தை மாற்ற வந்தவர்கள் மழையில்லாததால் சென்று விட்டனர். அதனால் பலர் மீண்டும் சிவனை வணங்கத் தொடங்கினர். மழை பெய்யாவிட்டாலும் சிலர் பெரிதாகப் பாதிக்கப்படவில்லை. எனது மகன் பெரும் சிவபக்தன். சிவனின் அருளால் பட்டணத்தில் உள்ள அரச நிறுவனமொன்றில் தலைமை அதிகாரியாக

இருக்கிறான். அவன் படிக்கும் காலத்தில் இருந்தே சிவனை வழிபடுவான். அவன் எமக்குத் தேவையான பொருட்களை அனுப்பிக் கொண்டிருப்பான். நான் தினமும், “என்னை ஆளும் ஈசனே போற்றி, என்தலைவா போற்றி, ஆன்மாக்குள் இருக்கும் சோதியே போற்றி என்று வணங்குவேன். அதனால் என்னையும் எனது குடும்பத்தையும் சிவன் எந்தக் குறைகளும் இல்லாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றான்” என்றார்

**104) அரசே போற்றி அமுதே போற்றி**

**105) விரைசேர் சரணம் விகிர்தா போற்றி**

கதிரேசன் சொன்னார்; “சிவன் நம்பியவர்களைக் கைவிடமாட்டான். உங்களது மகனை நீங்கள் சிவபக்திமிக்கவனாக வளர்த்தமையால் அவன் சிவவுணர்வு மிக்கவனாக வாழ்ந்து வருகின்றான். அனேகமான கிணறுகளில் நீர் வற்றியபோதும் சிவன் கோவிற்கிணறு வற்றவில்லை. அத்துடன் உங்கள் மகன் இயந்திரத்தால் அதற்குத் துளையிட்டு நீரைப் பெருகப் பண்ணியுள்ளான். அதனால் இக்கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினை முற்றாக நீங்கிவிட்டதாக இவ்வூரவர்கள் சொன்னார்கள். நீர் வற்றிய பல கிணறுகளில் இயந்திரத்தினால் துளையிட்டபோதும் நீர் சுரக்கவில்லை. கோவிற் கிணறு வற்றாதிருப்பது வேந்தனான சிவனின் அருள்தான். அதனால் தான் மாணிக்கவாசகர் அரசே போற்றி, அமுதே போற்றி நறுமணம்மிக்க திருவடிகளையுடையவனும், உலகிற்குப் புறம்பானவனும் ஆகிய இறைவா போற்றி என்று வணங்குகிறார். இதை உணராதவாகள்தான் சிவனைப் புரியாது தடுமாறுகின்றனர்.” என்றார்.

**106) வேதி போற்றி விமலா போற்றி**

**107) ஆதி போற்றி அறிவே போற்றி**

அன்று காலை பசுபதியின் மகன் வருணன் அதிகாரிகளுடன் சிவன்கோவிலுக்கு வந்தான். பசுபதி மகனை அழைத்து வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் கதிரேசனுக்கும் அறிமுகஞ் செய்து வைத்தார்; “கதிரேசன் ஐயா, உங்களைப்பற்றி எமது ஊரவர்கள் கதை கதையாகச் சொல்வார்கள். தீவிரமான சிவபக்தராக நீங்கள் இருந்தமையால் தான் நீங்கள் எமது ஊருக்கு வந்ததும் மழை போதும் போதுமெனப் பெய்தது. இப்போது நான் உரிய அரச

அதிகாரிகளை அழைத்து வந்துள்ளேன். விவசாயிகளுக்கு நல்ல இனவிதை நெல்லும், பசளையும், கிருமிநாசினியும், பணமும் வழங்கவுள்ளோம். இங்குள்ள சிலர் ஆராயாது சிவத்துரோகம் செய்தமையால்தான் இந்த நிலை ஏற்பட்டது. அனைத்தும் அறிந்த புனிதனான முதல்வன் சிவன். அவனைப் போற்றி வணங்குபவர்களுக்குத் துன்பம் ஏற்பட்டால் சிவன் அவற்றைப் போக்குவான். இப்போது இங்கே வாழ்பவர்கள் அனைவரும் சிவனைப் போற்றுபவர்கள். அதனால் அவர்கள் பட்ட துன்பங்களை நீக்கச் சிவன் என்னை அனுப்பியுள்ளான். அது நான் செய்த பாக்கியம்" என்று கலங்கினான் வருணன்.

**108) கதியே போற்றி கனியே போற்றி**

**109) நதிசேர் செம்சடை நம்பா போற்றி**

**110) உடையாய் போற்றி உணர்வே போற்றி**

**111) கடையேன் அடிமை கண்டாய் போற்றி**

"மகனே உனது தொண்டு சிறக்க மூர்த்தி என்னும் கதியைக் கொடுப்பவனும், கங்கைநதியைத் தனது செஞ்சடையில் வைத்திருப்பவனுமாகிய சிவன் உதவுவான். அவன் அனைத்தையும் தனக்குச் சொந்தமாக்கியவன். மெய்யுணர்வைக் கொடுப்பவன். கீழான மனிதர்களை மேலாக்குபவன். அவனைப் போற்றி வணங்கினால் வணங்குபவனுக்கு எல்லாம் கிடைக்கும்" என்றார் கதிரேசன்.

அதைக்கேட்டு மகிழ்ந்த வருணன் சொன்னான்; "உண்மை ஐயா, மாணிக்கவாசகரும் அவ்வாறுதான் சொல்கிறார். நான் முதலில் எமது கிராம மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று எனது மேலாளரைக் கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். நாட்டிலுள்ள அனேகமான விவசாயக் கிராமங்கள் மழையாலும், வெப்பத்தாலும் பாதிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. பல கிராமத் தலைவர்கள் அதுபற்றி முறைப்பாடு செய்துள்ளனர். இது வருடா வருடம் நடக்கும் சாதாரண நிகழ்வு" என்றார். எனக்குத் துக்கமாக இருந்தது. இருப்பினும் என்னால் என்ன செய்ய முடியும். கங்காநதியைச் சடையில் வைத்திருக்கும் மூர்த்தியான சிவனே, முன்பு இந்திரனின் பூந்தோட்டம் மழையில்லாது வாடியதால் கங்கையைப் பூமியில் பாயவிட்டாய். இன்று ஆயிரக்கணக்கான விவசாயிகளின்

பயிர்கள் மழையில்லாமல் வாடி வதங்குகின்றன. அனைத்தையும் தாங்கித் தனக்குள் அடக்கியவனே, மெய்யுணர்ந்தவனே, கீழான எனது கோரிக்கையை ஏற்றுக் கொள் எனச் சிவனை வணங்கினேன். மறுநாள் நான் அலுவலகத்திற்குக் சென்றபோது அமைச்சர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும்படி கட்டளையிட்ட கடிதம் வந்திருந்தது. எல்லாம் சிவனின் செயல்" என்றான் வருணன்.

**112) ஐயா போற்றி அனுவே போற்றி**

**113) சைவா போற்றி தலைவா போற்றி**

**114) குறியே போற்றி குணமே போற்றி**

**115) நெறியே போற்றி நினைவே போற்றி**

"மகனே, சிவன் மேலானவன் என்பதன் அர்த்தம் என்னவென்று தெரியுமா….? அவன் தன்னை அன்போடு வணங்குபவர்களுக்கு மேலான எண்ணங்களை மனதில் உருவாக்கும் தலைவன். அதனால்தான் தன்னை வணங்குவோருக்கு மேலான நிலையைக் கொடுக்கிறான். உனது அலுவலகத்தில் நீ மதிப்போடும் மரியாதையோடும் இருப்பதற்குக் காரணம் நீ சிவனில் வைத்த அன்பு. அது போலச் சிவன் உன்னில் வைத்த அன்பு. அன்புதான் சிவன். அதனால்தான் யாரும் உனது கிராமத்தவர்கள் மீது அன்பு செலுத்தாத வேளையில் நீ அன்பு செலுத்தினாய் அந்த அன்பு சிவனைச் சென்றடைந்து உரிய அதிகாரிகளைச் செயற்படுத்தியது. அவன் மங்களகரமானவன். அனுவாக இருப்பவன். அனைத்துக்கும் ஈசன். அதனால் அவனைப் போற்றி வணங்கினால் கேட்டது கிடைக்கும். எல்லோரும் வணங்கும்போது தமது குறைகளைக்கூற அதனை நிவர்த்தி செய்யமாறு கோரச் சிலர்மட்டும் தான் தனக்குள்ள துன்பங்களைப் போக்காது மற்றவர்களின் துன்பங்களைப் போக்குமாறு சிவனை இரக்கின்றனர். அப்போது சிவன் மற்றவர்களின் துன்பங்களை நீக்கும்போது வணங்கியவனின் துன்பங்களையும் நீக்குவான். இது மெய்யுணர்ந்தவர்களுக்குத் தான் பொருந்தும். வாழ்க்கையின் இலட்சியம் சிவனை அடைதலே ஆகும். அதற்குச் சீரிய குணங்கள் வேண்டும். நன்னெறி வேண்டும். நல்ல நினைவுகள் வேண்டும். அவற்றைத் தரும்படி சீரிய குணங்களையும், நன்னெறிகளையும், நல்ல நினைவுகளையும் உடைய சிவனைப் போற்றி வணங்குதல் வேண்டும். ஒரு

தீயவன் சிவன்மீது அன்பு வைத்தானானால் அவனுக்குச் சிவனது நன்னெறிகள், நல்ல நினைவுகள், நன் நோக்கங்கள் யாவற்றையும் அவன் கொடுப்பான். அதன் பின் தான் அவன் சிவனடியானாவான். உனது தந்தையின் வாழ்க்கை முறை உன்னை நன்னெறிப்படுத்தியது. அதனால் சிவனது அருள் உனக்குக் கிடைத்தது. அதனால் இன்று ஊரவர் நன்மையடைகின்றனர்" என்றான் கதிரேசன்

**116) வானோர்க்கு அரிய மருந்தே போற்றி**

**117) ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி**

"மகனே, சிவன் தேவர்களுக்குக் கிடைத்தற்கரிய அமிர்தம் போன்றவன். ஆனால் எளிதில் அவர்களுக்கு அகப்பட மாட்டான். ஆனால் மனிதர்களுக்கு எளிதில் அகப்படும் இறைவன் அவன்" என்று கதிரேசன் கூறியபோது பசுபதி சொன்னார்; "உண்மை ஐயா, நான் மிகவும் ஏழை. விவசாயம் தான் எனது தொழில். விவசாயம் மழை பெய்தாலும் அழியும். பெய்யாவிட்டாலும் அழியும். விலங்குகளாலும் அழியும். எனது வயல் குளத்திற்கு மிக அருகில் உள்ளது. அதனால் எனது வயல் மழை பெய்யாவிட்டாலும் நல்ல விளைச்சலைத் தரும். குளத்திற்கு வரும் நீர் எனது வயலில் தங்கித்தான் பின் குளத்திற்குச் செல்லும். எனது நண்பனின் வயல் மேட்டுநிலம். மழை பெய்யாவிட்டால் பயிர் கருகிவிடும். பாவம் அவன் ஏழை. மழை பெய்யாவிட்டால் குளத்து நீர் வற்றிவிடும். அதனால் எனது நண்பனான பரமசிவம் விதைக்கு முன்பே, என்னை ஆளும் சிவனே, நான் உன் அடியவன். மிகவும் ஏழ்மையானவன். அதிக பணம் செலவு செய்து விதைக்கப் போகிறேன். இம்முறை மழை பெய்யாதென்றால் சொல்லிவிடு. என்னை நட்டப்படுத்தாதே" என வணங்குவான். பின் இம்முறை நான் விதைக்கவில்லை என்பான். அவன் விதைக்காத வருடங்களில் மழை பெய்யாது. அதனால் அவன் காய்கறி வகைகளையே பயிரிடுவான். அதைப் பார்த்து மேட்டு நிலத்தில் நெல் விதைப்போர் விதைக்காது காய்கறிப் பயிர்களைப் பயிரிடுவர். கேட்டால் அவன் சொல்வான்; "நான் என்ன தேவனா…? ஆணவமிடுக்கோடு வாழ. சிவனே, நான் உன் அடிமை. என்னைச் சோதிக்காதே" என்று ஐந்தெழுத்தை ஓதிப் பிரார்த்தித்தால், சிவன் எளிதில் எனது கோரிக்கைகளை நிறைவேற்றி விடுவான்" என்பான். அது போலச் சிவன் உன்னிடமும் அகப்பட்டு விட்டான். நீ பாக்கியசாலி" என்றார் கதிரேசன்.

**118) மூஏழ் சுற்றம் முரண் உறு நரகு இடை**

**119) ஆழாமே அருள் அரசே போற்றி**

சுந்தரமூர்த்தி சுவாமிகளும், கதிரேசனும், பசுபதியும், வருணனும் சில சிவனடியார்களும் கோவிலில் இருந்தபோது ஒரு சிவனடியார் அங்கு வந்து அவர்களை வணங்கினார். பின்பு சொன்னார்; "நல்ல காரியத்தைச் செய்துள்ளீர்கள். எப்போதும் சிவன் உங்களுடன் கூட இருப்பார். ஒரு பாழடைந்த சிவன்கோவிலைப் புணரமைப்பது, சிவனது பெருமைகளை வெளிப்படுத்துவது, பற்றில்லா மனதுடன் சிவனை வணங்குவது, ஏழைகளுக்கு உதவுவது போன்ற சிவச்சேவைகளைச் செய்வோர் புனிதராவார். அத்தகையோர் சிவசாயுச்சியம் என்ற முத்தியை அடைவர். அப்படியானவர்களின் சுற்றத்தவர் இருபத்தொரு தலைமுறையாகக்கூட வருவார்கள். அவர்கள் நரகத்தை அடைந்து துன்பப்படமாட்டார்கள். அவர்களைத் துன்பப்படாமல் பேரின்பப்படுத்துபவன் எம் அரசனான சிவன். அவனை வணங்குகிறீர்கள். பற்றில்லா மனதுடன் சிவசேவை செய்கிறீர்கள். உங்களைச் சிவன் ஆட்கொள்வான். தளராத மனமுடைய நீங்கள் நினைத்தவை யாவும் சிவனின் அருளால் நடைபெறும்" என்றார்.

அவர் அந்தக் கிராமத்திற்குப் புதியவராக இருந்தமையால் பசுபதி கேட்டார்; "சுவாமி, தங்களை நான் இதுவரை காணவில்லை. தங்களைப் பற்றி அறியலாமா....?" சிவனடியார் சிரித்தார். பின்பு சொன்னார்; "நானும் ஒரு சிவனடியான் தான். ஊர் ஊராகச் சென்று சிவனைத் தரிசித்து வருகின்றேன். அந்தவகையில் இங்கு வந்தேன். எனக்கு ஊரில்லை, உறவுகளில்லை, சொந்தபந்தமில்லை எல்லாம் சிவன்தான்." என்று கூறிவிட்டு கண்களை மூடினார்.

**120) தோழா போற்றி துணைவா போற்றி**

**121) வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி**

கண்களை மூடியிருந்த அச் சிவனடியார் சொன்னார்; "எல்லாவற்றையும் துறந்து சிவனின் அடிமையானேன். எல்லோருக்குத் தாயாகத் தந்தையாகச் சுற்றமாக விளங்கும் எனது நண்பனான சிவனைப் போற்றி வணங்குகிறேன். அவன் தான் உலகிற்கும் எனக்கும் அடித்தளமானவன். அதனால் எந்நேரமும் அவனையே போற்றித் தொழுகின்றேன். உலக உயிர்களின் வாழ்விற்கு

மூலாதாரமாக விளங்குபவன் சிவன். அதனால் அவனைப் போற்றி வணங்குகிறேன். உலகிலுள்ள உயிர்களின் இருப்பிடம் அவன் தான் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அதை உலகினுள்ளோர் உணர வேண்டும். அவற்றை உணர்ந்து நீங்கள் சிவவாழ்வு வாழ்கிறீர்கள். உங்களுக்கு எந்தத் துன்பமும் ஏற்படச் சிவன் விடமாட்ட்ான்" என்றார்.

**122) முத்தா போற்றி முதல்வா போற்றி**

**123) அத்தா போற்றி அரனே போற்றி**

மேலும் அச் சிவனடியார் சொன்னார்; "இளமையின் துடிப்பால் இளவயதில் நான் பல்வேறு விதமான தீய செயல்களைச் செய்தேன், குடித்தேன், மாமிசம் உண்டேன். பெண்களோடு உறவாடினேன். ஒரு நாள் ஒரு கன்னிப்பெண்ணைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. அவள் மிகவும் ஏழை. ஏழ்மையைப் பயன்படுத்த எண்ணி ஏராளமான பணத்தைக் கொடுத்தேன். அப்போது நான் பெரும் தனவந்தன். எனது நோக்கத்தை அறிந்து, கொண்ட அவள் சொன்னாள்; "ஐயா, நான் ஒரு சிவபக்தை. அத்துடன் கன்னிப்பெண். தாங்கள் என்னைத் திருமணம் செய்வதாக இருந்தால் நான் தங்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வேன். தங்களைப் பற்றிய முழுமையான தகவல்கள் யாவும் எனக்குத் தெரியும். சிவன் தருவதுதான் பேரின்பம். ஏனையவற்றுள் வருவது சிற்றின்பம் அது போலியானது, ஏமாற்றுவது, பாவத்தைச் சேர்ப்பது. ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அவளோடு இன்புற்றிருந்து சிவனைத் தொழுவதுதான் பேரின்பமான வாழ்க்கை. எனக்குப் பணம், பொருள் தேவையில்லை. தற்செயலாகத் தங்களைச் சந்தித்தேன். தயவுசெய்து சிவத்துரோகங்களைச் செய்யாதீர்கள். உங்களுக்கு எனது உடம்பு தேவையானால் எடுத்துக் கொள்ளுங்கள். அதற்கு முன் நீங்கள் தகுதியானவரா என யோசித்து முடிவெடுங்கள். நித்திய முத்தனாக இருக்கும் ஈசனைப் போற்றுங்கள். அனைத்திற்கும் ஆதிமூலமாக இருக்கும் சிவனைப் போற்றுங்கள். அனைவருக்கும் தந்தையாக இருந்து மலங்களைப் போக்கும் சிவனைப் போற்றுங்கள். உங்கள் வாழ்வு சிறக்கும். இதை நான் சொல்லவில்லை. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்" என்றாள் எனக்குப் பயமேற்பட்டுவிட்டது. என்னைக் கண்டால் பெண்கள் மறைந்து விடுவார்கள். மறையாது நின்று சிரித்தால் அவர்களை நான் எப்படியும் அடைவேன். அவள் மறையாது நின்றபடியால் அவள் சம்மதிப்பாள் என நினைத்தேன். அவளது பேச்சும்

என்னைப் பயமுறுத்தியது. அதனால் எனது சொத்துக்களையெல்லாம் அவளிடம் ஒப்படைத்துவிட்டுப் புறப்பட்டு ஊரூராகச் சென்று சிவன்கோயில்களைத் தரிசித்து வருகிறேன்" என்றார்.

**124) உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி**

**125) விரிகடல் உலகின் விளைவே போற்றி**

"எதற்கும் கட்டுப்படாது அலைந்த எனது மனம் சிறிது சிறிதாக கட்டுப்பட்டது. எனது மனதுள் அவள் சிவமாக இருந்து பெருத்த ஓசையுடன் நான் தடுமாறும்போது எனக்கு அறிவுரை கூறுகிறாள். ஒரு நாள் நான் ஊர்ச்சிவன்கோயிலில் சிவனை வணங்கிவிட்டு வந்தபோது என்னுடன் முன்பு தொடர்பு வைத்திருந்த ஒரு அழகான பெண் என்னருகே வந்து மயக்கம் தரும் புன்னகையைத் தனது உதடுகளில் தவளவிட்டாள். ஒரு கணம் எனது மனம் தடுமாறியது. அப்போது எனது இதயத்தில் இருந்து ஒரு குரல் கேட்டது," மனம் மாறிச் சிவனைச் சரணடைந்தபின் மயக்கங்களுக்கு இடமளியாதே. சொல்லிற்கும் மனதிற்கும் எட்டாத தனிப்பெரும் பொருளை அடையவென்றெண்ணி அதை நடைமுறைப்படுத்துகிறாய். அதனால் அவனைப் போற்று. கடல் சூழ்ந்த உலகில் வாழ்வோர் பெறுகின்ற பேறுகளில் பெரும் பேறாக விளங்கும் சிவனைப் போற்று. அவன்தான் உயிர்களுக்குப் பெரும் போறளிப்பவன்." என்று ஒலித்தமையால் அன்றே ஊரைவிட்டுப் புறப்பட்டு விட்டேன். அதன்பின் எனது மனம் சலனம் அடைவதில்லை. அந்தப் புண்ணியவதியின் கருணையால் நான் சிவனை முற்றாக அறிந்து விட்டேன்" என்றார் அச் சிவனடியார்.

**126) அருமையில் எளிய அழகே போற்றி**

**127) கருமுகில் ஆகிய கண்ணே போற்றி**

"அவள் தான் எனது குரு. அவளின் உருவில்தான் நான் சிவனைக் காண்கிறேன். அவளைச் சந்திக்காவிட்டால் எனது வாழ்வு சீரழிந்திருக்கும். சிவன்தான் அவருளுருவில் வந்து என்னைச் சீப்படுத்தியவள். அவள் சொன்ன வார்த்தைகள் எனது மனதில் கல்வெட்டாகப் பதிந்துள்ளது. "இன்பத்தைத் தேடுவதானால் பேரின்பத்தைத் தேட வேண்டும். சிவனைத் தவிரப் பேரின்பத்தைத் தர எவராலும் முடியாது. பணம், பொருள், பொன் என்பவற்றால் கிடைக்கும்

இன்பம் சிற்றின்பம். பணம், பொருள் இளமை என்பன அற்றுப் போனால் சிற்றின்பமும் அழிந்து போகும். உயிர்களால் பெறமுடியாத அருமையான பொருள் சிவன். எனினும் சிவன் பக்தர்களுக்கு எளிதில் அகப்படக்கூடிய அழகன். அத்தகைய பெரும் பொருளான சிவனை வணங்கு. உயிர்களை உய்விப்பதற்காகக் கார்மேகமாகி அவர்களின் நலனைக் காப்பவன் சிவன். அத்தகைய கண்களைப் போன்ற சிவனை வணங்கு. இதை நான் சொல்லவில்லை. மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னார். தீய செயல்களை அஞ்சாது செய்யும் எவரும் மாணிக்கவாசகரது திருவாசகத்தைப் பொருளுணர்ந்து படித்தானேயானால், அதன்பின் அவன் தீயசெயல்களைச் செய்யாது சிவபக்தனாக மாறிவிடுவான்" என்றார். அது மனதில் ஒலிப்பதால்தான் என்னால் தீயவற்றை எண்ணக்கூட முடியவில்லை" என்றாள் அச் சிவனடியார்.

**128) மன்னிய திருவருள் மலையே போற்றி**

**129) என்னையும் ஒருவன் ஆக்கி இரும் கழல்**

**130) சென்னியில் வைத்த சேவக போற்றி**

அப்போது அந்தச் சிவனடியார் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த நாகலிங்கம் என்பவன் சொன்னான்; "சிவசங்கரா, உன்னைத் தேடி உனது சகோதரர்கள் பேயாய் அலைகின்றனர். கணக்கில்லாத உனது சொத்துக்காக அவர்கள் சண்டையிலீடுபடுகின்றனர். நான் தற்செயலாக இங்கு வந்தேன். உனது கதையைக் கேட்டபின் உன்னை அடையாளம் கண்டேன். வந்து சொத்துக்கு ஒரு வழி செய்"

அந்நச் சிவனடியானான சிவசங்கரன் சொன்னான்; "நான் கலையரசி என்ற பெண்ணுக்கு முறைப்படி எனது சொத்துக்களை எழுதி வைத்துவிட்டேன். அவள் என்ன செய்கிறாள்."

"அப்படி ஒரு பெண் அங்கிருப்பதாகத் தெரியவில்லை. நீ காணாமல் போன நாளிலிருந்து உனது வீடு திறக்கப்படவில்லை. அதைதிறக்க உனது சகோதரர்கள் சமாதானமடையவில்லை. அங்கு யாரும் இல்லை. தோப்புக்கள், வயல்கள் யாவும் தேடுவாரற்று இருக்கின்றன. வந்து பொறுப்பேற்று ஆவன செய்." என்றான் நாகலிங்கம்," எல்லாவற்றையும் நான் எப்போதோ துறந்து

விட்டேன். அவைபற்றி எனக்குக் கவலை இல்லை. யாராவது எடுத்துக் கொள்ளட்டும். அருளுவதில் நிலைபேறுடைய மகாமேருமலையில் வீற்றிருக்கும் சிவனைப் போற்றுகின்றேன். தகுதியற்ற என்னை தகுதிவாய்ந்தவனாக மாற்றிய சிவனது திருவடியை சிரசில் வைத்துப் போற்றுகின்றேன். அவன் என்னை ஆட்கொள்வான் என்ற நம்பிக்கை எனக்குண்டு. மாணிக்கவாசகர் இவ்வாறு கூறிச் சிவனைப் போற்றுகிறார். அதனால் அவர் மேன்மையடைந்துள்ளார். அவரைச் சிவன் ஆட்கொண்டான். அவர் எல்லாவற்றையும் துறந்து சிவனடியைச் சேர்ந்தவர். அதுவே எனது விருப்பம். நீ நான் இங்கிருப்பதைப் பற்றி யாருக்கும் கூறாதே. கூறினால் சிவனின் தண்டனைக்குட்படுவாய்" எனிறான் சிவசங்கரன்.

**131) தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி**

**132) அழிவு இலா ஆனந்த வாரி போற்றி**

"நாகலிங்கம் உன்னை எனக்குத் தெரியவில்லை. அதுபோல என்னை உனக்குத் தெரியவில்லை. காலமாற்றம் என்பது இதுதான். மிகவும் அன்பாகப் பழகியவர்களும் சில நாட்கள் கண்டு பழகாவிட்டால் மறந்துவிடுவார்கள். சிவன் அப்படியானவன் அல்ல. தன்னை நம்பிக் கைகூப்புவோரது துன்பத்தை நீக்குவான். எத்தனை ஊழிக்காலம் வந்து சென்றாலும் உயிர்களைத் தனித்தனியாக அறிந்து கொள்பவன். அவன் என்றும் ஆனந்தக்கடல். அதனால் அவன் எவ்வேளையிலும் ஆனந்தமாகவே இருப்பான். அதற்குக் காரணம் தான் ஆனந்தமாக இருந்தால் தான் தன்னை வணங்குபவர்களும் ஆனந்தமடைவர் என்ற எண்ணத்தால், எவ்வளவு துன்பங்களுடன் வாழ்ந்தேன். மாயமான பொருட்களை நிசமான பொருட்களென எண்ணினேன். சிற்றின்பத்தைப் பேரின்பமென நினைத்தேன். சிவனை வணங்கத் தொடங்கியபின் படிப்படியாக எனது துன்பங்கள் மறைந்து இன்பத்தை அனுபவிக்கத் தொடங்கிவிட்டேன். ஆனந்தக்கடலான சிவனுடன் சேர்ந்து ஆனந்தமாக இருக்கும் நான் துன்பப்பட விரும்பவில்லை. நீ சென்று விடு" என்றான் சிவசங்கரன்.

**133) அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி**

**134) முழுவதும் இறந்த முதல்வா போற்றி**

"நாகலிங்கம், பிரபஞ்சத்தை ஆக்கியவன் சிவன். அதைத் தொழிற்படுத்துபவனும் சிவன். அதனால் பிரபஞ்சம் முழுவதும் அவனது சொத்து. நாம் வாழ என அவன் எமக்கு யாவற்றையும் இரவலாகத் தந்துதவியுள்ளான்.

எனது பூமியென்று நான் நினைத்தவையெல்லாம் முன்பு யாரோ ஒருவரின் உடமையாக இருந்தது. பின் அது எனது பாட்டனுக்கு உரிமையானது. அதன் பின் எனது தந்தைக்குரிமையாகிப் பின் எனக்குரிமையானது. உரிமை என்றதும் அதை நாம் இறக்கும்போது கொண்டு செல்ல முடியாது. இறக்கும்போது கொண்டு செல்பவைதான் எம்மோடு பிறவிகள் தோறும் வரும். அப்படிப் பார்த்தால் பாவபுண்ணியங்களும் சிவனின் அருளும்தான் எம்முடன் கூட வரும். கூடவராத பொருட்களைச் சொந்தம் கொண்டாட முடியாது. ஒடுங்குவதும் தோன்றுவதும் ஆகிய பிரபஞ்சத்துக்கு அப்பால் இருக்கும் சிவனை நம்பினால் அவன் எம்மோடு பிறவிகள் தோறும்கூட வருவான். அவன் படைத்த பொருட்கள் கூடவர மாட்டாது. அதனால் அவன் படைத்த பொருட்களில் விருப்பம் கொள்ளாது அவனை விரும்பி அடைய முயலவேண்டும். பிரபஞ்சங்கள் யாவும் அழிந்தபின்பும் நிலைத்திருந்து மீண்டும் பிரபஞ்சத்தைப் படைக்கும் மூலப் பொருளான சிவனைப் போற்றுவேனே தவிர வேறு எதையும் போற்றமாட்டேன்" என்றான் சிவசங்கரன்.

**135) மான்நேர் நோக்கி மணாளா போற்றி**

**136) வான் அகத்து அமரர் தாயே போற்றி**

"நீங்கள் மிகவும் ஆழமான பக்தியை உடையவர் போலக் காணப்படுகின்றீர்கள். மானினது கண்களைப் போன்ற கூர்மைமிகுந்த அழகான கண்களையுடைய உமாதேவியின் மணாளனான சிவனைப் போற்றி வணங்குபவனுக்கு எந்தத் துன்பமும் வராது. விண்ணுலகில் வாழும் தேவர்களுக்குத் தாயாக இருந்து அன்பு சொரிந்து அவர்களைக் காப்பாற்றும் சிவன் தனது அடியார்களைத் தாயினும் மேலான தலைவனாக இருந்து காப்பான் என்ற உண்மை பலருக்குத் தெரிவதில்லை. ஆனால் நீங்கள் அறிந்துள்ளீகள். அதனால்தான் கோடிக்கணக்கான சொத்துக்களைவிட்டு விட்டுச் சிவனை நம்பி, அவனை வழிபட்டு, அவனது திருவடியை அடைய வேண்டும் என்று நினைத்து உறுதியாக இருக்கிறீர்கள். பெருமைகள் மிக்க சிவனைப் போற்றுவோரைச் சிவனாக மதித்து வணங்குவது சைவர்களது கடமை. அதனால் நான் உங்களை வணங்குகிறேன்" என்று சிவசங்கரனின் திருவடியைத் தொட்டுக் கதிரேசன் வணங்க அங்கு நின்றவர்கள் எல்லோரும் சிவசங்கரனை வணங்கினர்.

"ஐயையோ, என்னைப் புகழாதீர்கள். வணங்காதீர்கள். நான் சிவனின் அடிமை. அடிமையை வணங்கக்கூடாது" என்றான் சிவசங்கரன்.

**137) பார் இடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி**

**138) நீர் இடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி**

"சிவனடியார்களைச் சிவன் என நினைப்பது எமது மரபு. எல்லோரது உள்ளத்திலும் சிவன் குடியிருக்கிறான். தன்னை நேசிக்கும் சிவனடியார்களின் உள்ளத்தில் விருப்புடனும், மகிழ்வுடனும் குடியிருக்கின்றான். மகிழ்வுடன் இருக்கும் சிவனைப் போற்றி வணங்கினால் அதனால் வரும் பயன் இரட்டிப்பாகும். அதனால்தான் சைவசமயம் சிவனடியார்களைச் சிவனாகப் போற்றச் சொல்கிறது. நிலமாகிய ஐந்தாவது பூதமாகவும், நீராகிய நான்காவது பூதமாகவும் பர்ணமித்துள்ள சிவனை நான் போற்றி வணங்குகிறேன் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். நிலமும் நீருமாக இருக்கும் சிவன் அடியார்களின் உள்ளத்தில் தாயாகவும் தந்தையாகவும் வீற்றிருக்கின்றான். நிலத்தை தாய் என்கிறோம். நீரைத் தந்தைக்கு ஒப்பிடலாம். தாயும் தந்தையும் இல்லாவிட்டால் பூமி நரகமாகிவிடும். பூமியின் வெகுமதி தான் நீர். அதனால்தான் மாணிக்கவாசகர் சுவாமிகள் அவ்வாறு கூறிப் போற்றுகிறார்." என்றார் கதிரேசன்.

**139) தீ இடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**

**140) வளி இடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**

**141) வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி**

**142) அணிபவர் உள்ளத்து அமுதே போற்றி**

கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; "சிவன் மூன்றாம் பூதமாகிய அக்கினியாகவும், இரண்டாம் பூதமாகிய வாயுவாகவும், முதல் பூதமான ஆகாயமாகவும் இருக்கிறான். இதை உணர்ந்து அவனைப் போற்றி வணங்கும் அடியவர்களின் உள்ளத்தில் அமிழ்தமாக வீற்றிருப்பான். அவனைப் போற்றி வணங்கவேண்டும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். இதை விளக்கவே சிவன் சிதம்பரத்தில் ஆகாயலிங்கமாகவும், காளகஸ்தியில் வாயுலிங்கமாகவும், திருவண்ணாமலையில் அக்கினி லிங்கமாகவும், திருவானைக்காவில் அப்புலிங்கமாகவும் (நீர்), காஞ்சிபுரத்தில் பூமி லிங்கமாகவும் (பிருதுவி இலிங்கம்) வீற்றிருக்கிறார். இந்த உண்மையை மெய்யறிவுள்ளவர்கள் தான் உணர்ந்து கொள்வர்." என்றார்.

**143) கனவிலும் தேவர்க்கு அரியாய் பொற்றி**

**144) நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி**

"ஐயா, நான் எவ்வேளையிலும் சிவனை நினைத்துக் கொண்டிருப்பேன். இமைப்பொழுதுகூட நான் அவனை மறந்ததில்லை. அப்படியிருந்தபோதும் நனவில் ஒருமுறைகூடத் தென்படாத சிவன் கனவில் தினமும் வந்து என்னுடன் கூடிக் குலாவுகிறான். இத்தன்மை தேவர்களுக்கு வாய்ப்பதில்லை. ஆனால் அற்பனாகிய எனக்கு நேரில் வந்து தரிசனம் தந்து என்னை ஆட்கொண்டான் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். எனக்குப் பலமுறை கனவில் வந்துள்ளான். வந்து பேசி மகிழ்வான். நிசத்திலும் வந்திருப்பான். ஆனால் எம்மால் அதை அறிந்து கொள்ள முடிவதில்லை. நாகலிங்கம் எங்களைச் சந்தித்த பெண் எனது வீட்டுக்கு வரவில்லை என்று கூறியபின்பும் நான் அவளைப்பற்றி நினைக்கவில்லை. நேற்றிரவு அவள் எனது கனவில் வந்தாள். அவளது தலையில் பூச்சூடி இருந்தாள். அதில் பிறைச்சந்திரன் தென்பட்டது. அதைக் கனவு என்று என்னால் ஒதுக்கமுடியவில்லை. சிவன்தான் என்னை ஆட்கொள்ளப் பெண் உருவில் வந்தானென நான் நினைக்கிறேன். இதை யாரும் நம்பமாட்டார்கள்" என்று சிவசங்கரன் கூறியபோது கதிரேசன் சொன்னார்; "சங்கரா, நான் நம்புகிறேன். சிவன், எம் உயிரோடு உயிராகக் கலந்து இருக்கையில் ஏன் நேரில் வரமாட்டான். நீ சொன்னதுபோல அவனின் வரவை நாம் உணரவில்லை. காலம் தாழ்த்தித் தான் உணர்கிறோம். உணர்ந்தவற்றையும் பலர் சொல்வதில்லை. ஏனென்றால் அதை உணர்வதற்குச் சிவனின் அருள் வேண்டும்" என்றார் கதிரேசன்.

**145) இடைமருது உறையும் எந்தாய் போற்றி**

**146) சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி**

அன்று காலை சிவசங்கரனின் சகோதரர்கள் மூவர் அவர்களது மனைவிமார், பிள்ளைகள், இனத்தவர்களென இருபது பேர் சிவசங்கரனைத் தேடி வந்தனர். அப்போது பசுபதி சிவன்கோவில் இருந்தார். அவர்கள் பசுபதியைச் சந்தித்துச் சிவசங்கரனைப்பற்றிக் கேட்டனர். பசுபதி சொன்னார்; "நேற்று இரவு எட்டுமணிபோல என்னிடம் வந்த சிவசங்கரன், "ஐயா, திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் சிவனைச் சந்திக்க விரும்புகிறேன். கங்காதரனாக இருக்கும் அவனைத் தரிசித்தால் நான் செய்த பாவங்கள், பழிகள் யாவும் நீங்கிவிடும்.

திருவுடையில் எழுந்தருளியிருக்கும் இறைவா போற்றி. கங்காதரா போற்றி. மறுபடியும் நான் உங்களைச் சந்திக்க மாட்டேன். போற்றி, போற்றி, கங்காதரனே போற்றி என்றவாறு கோவிலின் தெற்குத் திசையாக நடந்து சென்றவர்" என்றார். அப்போது அங்கே வந்த கதிரேசன் சொன்னார்;"

**147) ஆரூர் அமர்ந்த அரசே போற்றி**

**148) சீர் ஆர் திருவையறா போற்றி**

"என்னை வணங்கினார். பின், "சிவனடியாரே உம்மைச் சந்தித்தால் பெருமகிழ்வுற்றேன். உங்களது பெருமைகளைப் பலர் சொல்லக் கேட்டுள்ளேன். சிவன் உங்களை ஆட்கொள்வார். நான் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் ஈசனைத் தொழ வேண்டும். அத்துடன் அழகு நிறைந்த திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் சிவனைப் போற்றிப் பாடுதல் வேண்டும். திருவையாறு புனிதநகர். அங்குள்ள சிவன் சக்திமிக்கவன். அவனைக் கண்குளிரக்கண்டு வணங்க வேண்டும். இனிமேல் நான் உங்களைச் சந்திப்பேன் என்று நினைக்கவில்லை. சிவனருளால் இருவரும் சிவனின் திருவடி நிழலில் தங்க நேரிட்டால் சந்திப்போம்" என்று கூறிவிட்டுச் சென்றவர்"

"அவர் அப்படித்தான் தினமும் ஒரு திருக்கோவிலில் இருப்பார். அவரைத் தேடி நாங்கள் களைத்துவிட்டோம். எங்கோ ஒரு சிவன்கோவிலில் அவர் இருப்பதாக யாராவது ஒருவர் சொன்னால் அங்கே செல்வோம். அங்கே அவரைக் காணமுடியாது. நேற்று நாகலிங்கம் இங்கிருப்பதாகக் கூறியதால் வந்தோம். அவர் இங்கிருந்தும் சென்று விட்டார். கோடிக் கணக்கான சொத்து தேடுவாரின்றிக் கிடக்கிறது. யாரோ ஒரு பெண்ணுக்கு எழுதியதாகக் கேள்விப்பட்டோம். அப் பெண்ணையும் நாம் இதுவரை காணவில்லை. ஏதோவெல்லாம் நடைபெறுகிறது" என்று சிவசங்கரனின் சகோதரன் ஒருவன் சொன்னான்.

**149) அண்ணமலை எம் அண்ணா போற்றி**

**150) கண் ஆர் அமுதக் கடலே போற்றி**

நல்லைநாதன் கதிரேசன் வீட்டிற்கு வந்தார். அவரது முகம் வாடி இருந்ததைக் கண்டும் கதிரேசன் எதுவும் பேசவில்லை. அதனால் நல்லைநாதனும்

எதுவும் பேசவில்லை. அப்போது அங்கு வறந்த ரவீந்திரன் சொன்னான்; "மகாலிங்கமும் பத்துச் சிவனடியார்களும் தென்னிந்தியத் தலங்களுக்குத் தல யாத்திரை சென்று விட்டனர். தான் போகவில்லை என்று நல்லைநாதன் அண்ணைக்குப் பெருங்கவலை."

"எத்தனை வருடங்களாக நான் சிவனை வழிபடுகிறேன். எனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை. வருடக்கணக்கில் குடித்துவிட்டுத் தீயசெயல்களை மட்டும் செய்து வந்த மகாலிங்கமும் அவனது நண்பர்களும் சில மாதங்களுக்கு முன்புதான் சிவனை வழிபடத் தொடங்கினர். அவர்களுக்குச் சிவன் அருள் செய்துவிட்டார். திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள ஞானம் நிறைந்த சிவனைத் தரிசித்துப் போற்றி வணங்க வேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருந்தேன். அதற்கான நேரம் இன்னும் வரவில்லை. ஒருவேளை வராது செத்துப் போவேனோ தெரியாது." என்றார் நல்லைநாதன். அதைக்கேட்ட கதிரேசனுக்குத் துக்கமாக இருந்தது; "நல்லை, எதற்கும் நேரம், காலம் வரவேண்டும். நாம் ஒரு மாதகாலமாக அயலூருக்குச் சென்றிருந்தோம். அங்கு மழை பெய்யாமையால் பூசை செய்யவரும்படி அழைத்தனர். அதனால்தான் மகாலிங்கத்துடன் செல்லமுடியாமற் போனது. அவன் அயலூரில் நான் இருக்கும்போது வந்து சந்தித்துச் சொன்னவன். போயிருக்கலாம். ஆனால் அவ்வூரவர்கள் துன்பப்படுவார்கள் என்று நினைத்துத்தான் உனக்குச் சொல்லவில்லை. சிவன் எம்மை ஏதேதோ செய்யச் சொல்கிறான். அவன் இட்ட வேலையைத் தானே செய்தல் வேண்டும்" என்றார் கதிரேசன். அவரது அப்பதிலால் நல்லைநாதனின் மனம் குளிர்ந்து மாறியது.

**151) ஏகம் பத்து உறை எத்தாய் போற்றி**

**152) பாகம் பெண்உரு ஆனால் போற்றி**

கதிரேசனும் சிவனடியார்களும் மூன்று மாத காலம் அவ்வூரில் தங்கியிருந்து அவ்வூர் மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர். அவர்கள் தமது ஊருக்கு வந்தபோது திருத்தல யாத்திரை சென்ற மகாலிங்கமும் அவரது நண்பர்களும் ஊர் திரும்பியிருந்தனர். அவர்கள் எல்லோரும் கதிரேசனைச் சந்திக்கக் கதிரேசனது வீட்டுக்கு வந்திருந்தனர். அதைக் கேள்விப்பட்ட பலர் கதிரேசனது வீட்டுக்கு வந்து கொண்டிருந்தனர். மகாலிங்கத்தையும் திருக்கோவில்களுக்குச் சென்ற சிவனடியார்களையும் பூரண கும்பம் வைத்து குத்துவிளக்கேற்றி வணங்கிக் கதிரேசன் வரவேற்றார்.

“நீங்கள் எல்லோரும் புண்ணியம் செய்த சிவனடியார்கள். யாருக்கும் இலகுவில் கிடைக்காத வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்துள்ளது. நாயன்மார்களால் தரிசித்துப் பாடல் பெற்ற பல தலங்களைப் பார்த்து அங்கு கோவில் கொண்டிருக்கும் சிவனை வணங்கிவிட்டு வந்துள்ளீர்கள். உங்களைப் பார்த்ததும் எனக்கு எல்லாக் கோவில்களிலும் குடிகொண்டிருக்கும் சிவனைப் பார்த்தது போல இருக்கிறது. பாக்கியவான்கள்” என்றார் கதிரேசன்.

“அண்ணை திருவேம்பகத்தில் வீற்றிருக்கின்ற சிவனை வணங்கினேன். அர்த்தநாரீசுவரராக வீற்றிருக்கின்ற சிவனை வணங்கி ஈசா போற்றி போற்றி என்று வணங்கியபோது உங்களதும் உங்களது மனைவியினதும் நினைவுதான் எனது மனதுள் எழுந்தது. சிவனும் உமையும் இணைந்த தோற்றத்தில் இருவரையும் கண்டேன். அம்மையைப்போல பசித்தவர்க்கெல்லாம் மகிழ்வுடன் உணவு படைக்கும் உங்கள் மனைவியைப் போன்ற அம்மை அவள். எமக்கல்ல அங்கு சென்ற எல்லோருக்கும் எந்நாளும் உணவு அளிக்கிறாள்.” என்று கலங்கினார் மகாலிங்கம்.

**153) பராய்துறை மேவிய பரனே போற்றி**

**154) சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி**

“அண்ணை, நீங்கள் கட்டாயம் பாடல் பெற்ற தலங்களைச் சென்று வணங்க வேண்டும். அங்கிருக்கும் சிவனையும் அம்மையையும் கண்குளிரக் காணவேண்டும். ஒவ்வொரு கோவில்களிலும் சிவனைப் பார்க்கும்போது அங்கேயே தங்கிவிட வேண்டும் என்ற நினைப்பு உண்டாகிறது. திருப்பராய்த்துறையில் வீற்றிருக்கும் சிவனை மாணிக்கவாசகர் தரிசித்து விட்டு அங்கு வீற்றிருக்கும் சிவனைப் பெரியோய் போற்றி என்கிறார். திருச்சிராப்பள்ளியில் வீற்றிருக்கும் சிவனைத் தலைவா போற்றி என்கிறார். திருவாசகத்தோடு அக்கோவில்களில் வீற்றிருக்கும் சிவனை ஒப்பிட்டு நோக்கும்போது மெய்சிலிர்க்கிறது. இவ் உலக எண்ணமே வரவில்லை. அங்குள்ள சிவனோடு கூடியிருக்க வேண்டும் என்ற நினைவுதான் மேலெழுகிறது. அங்கு வரும் அடியவர்கள் தம்மை மறந்து தம் குடும்பத்தினரை மறந்து சிவனோடு ஐக்கியமாகிவிட்ட நிலையை உணர முடிகிறது. அங்கு வாழும் சிவனடியார்கள் சிலர் எம்மோடு சேர்ந்து நாம் தரிசிக்கும் சிவத்தலங்களைத் தரிசிக்க எம்முடன் வந்தனர். அவர்கள் அவ்வவ் ஊர்களில் கோவில் கொண்டருளியிருக்கும் சிவனது பெருமைகளைக்

கூறிக்கொண்டு வந்தனர். வடிவேலன் என்ற சிவனடியார் சொன்னர்; "சிவனடியார்களே, நான் திருச்சிராப்பள்ளியில் கோவில் கொண்டிருக்கும் சிவனைத் தினமும் வழிபடுவேன். எனது சொந்த ஊர் திருச்சிராப்பள்ளி. நான் ஒரு விவசாயி. என்னிடம் ஏராளமான நிலங்கள் இருக்கு. அதில் வரும் வருமானத்தில் பெரும் பங்கைச் சிவனுக்கும் சிவனடியார்களுக்கும் செலவு செய்வேன். எனக்குத் திருமணமாகிப் பத்து வருடங்களாகப் பிள்ளைகள் பிறக்கவில்லை. சிவனிடம் கெஞ்சி மன்றாடியதால், ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது ஐந்து வயதுவரை பேசவில்லை. அது எனக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. சிவனின் மீது அளவுகடந்த வெறுப்பை உண்டுபண்ணியது. திருவிழா நாளில் மக்கள் அதிகம் கூடுவார்கள். ஒரு திருவிழா நாளில் எனது மகளை அழைத்துச் சென்று மக்கள் கூட்டத்தில் விட்டுவிட்டு, "எனக்கு நீ தந்த பிள்ளை வேண்டாம். நீயே வைத்துக்கொள்" என்று கூறிவிட்டு விலகி நின்றேன். எனினும் அவளின் நடமாட்டத்தை அவதானித்தேன். மக்கள் கூட்டம் அதிகம் இருந்தமையால் அவளைக் காணவில்லை. ஏதோ ஒரு வெறுப்பில் அப்படி நடந்தாலும் பாசம் என்னைக் கொன்றது. அதனால் அவளைத் தேடினேன். பலமணி நேரம் சென்றும் அவளைக் காணவில்லை. துயருடன் சிவனது வாசலுக்குச் சென்று வருந்தி அழுதேன். திடீரென்று ஒலிபெருக்கியில் "வடிவேலனது மகள் அபிராமி எமது பாதுகாப்பில் உள்ளாள். அவளுக்கு வயது ஐந்து. 'அப்பா அப்பா' என்று அழுகிறாள். உடனே வந்து பிள்ளையை அழைத்துச் செல்லவும்" என்று கூறியது. நான் தடுமாற்றத்துடன் அந்த அலுவலகத்திற்குச் சென்றபோது எனது மகள் அபிராமி, "அப்பா அப்பா என்னை விட்டுவிட்டு எங்கே சென்றீர்கள். நான் பயந்து விட்டேன்" என்றாள். எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. என் தலைவன் என்னை மகிழ்ச்சியடையச் செய்து விட்டான்" என்றதும் அவரின் கதையைக் கேட்கக் கேட்கத் திருச்சிராப்பள்ளியில் கோவில் கொண்டிருக்கும் தலைவனான சிவனின் மீது பற்று அதிகரித்தது." என்றார் மகாலிங்கம்.

**155) மற்று ஓர் பற்று இங்கு அறியேன் போற்றி**

**156) குற்றாலத்து எம் கூத்தா போற்றி**

அன்று காலையில் மகாலிங்கத்தைச் சந்தித்த வடிவேலன் சொன்னார்; "ஐயா, திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கும் கூத்தனை வணங்க நாங்கள்

செல்லவுள்ளோம். நானும் எனது வாகனச் சாரதியும் தான் வந்தோம். எனது வாகனத்தில் பதினைந்து பேர் செல்லலாம். இங்கு வருவோர் பிரயாணத்திற்குச் சிரமப்படுவர். அவர்களை ஏற்றிச் சென்று நாம் வழிபடப் போகும் கோவிலில் இறக்கிவிடுவேன். நீங்கள் திருக்குற்றாலத்திற்கு வர விரும்பினால் வாருங்கள்."

"சிவனே, உன்னையல்லால் வேறு ஒரு பற்றுக்கோட்டை இவ்வுலகில் நான் அறிய விரும்பவில்லை. அதனால் உன்னை வணங்குகிறேன். நான் கூத்தனை வணங்கத் திருவருள் வந்துள்ளது. "உனக்கு வணக்கம்" என்று சிவனைத் தொழுத மகாலிங்கம் நாங்கள் வருகிறோம்" என்றார்.

இரவு பத்து மணியிருக்கும். திருக்குற்றாலத்திற்குச் சென்ற வடிவேலனது வாகனம் திடீரென்று நடுவழியில் செயலற்று நின்றது. அனைவரும் கீழே இறங்கினர். சாரதி வெகுநேரமாக வாகனத்தில் ஏற்பட்ட பழுதைத் திருத்திக் கொண்டிருந்தான். அவ்வீதியில் சன நடமாட்டம் இருக்கவில்லை. ஓரிரு வாகனங்கள் சென்றன. பன்னிரண்டு மணிக்கு வாகனம் செயற்படத் தொடங்கியது. மகாலிங்கம் வாகனத்தில் ஏறும்போது ஒரு பொதி காலில் தட்டுப்பட்டது. அதை அவர் எடுத்துக்கொண்டு வாகனத்தில் ஏறினார்.

"ஐயா, நான் வாகனத்தில் ஏறும்போது இப்பொதி கிடைத்தது. இதைப் பொறுப்பேற்று உரியவரிடம் கையளியுங்கள்" என்றார் மகாலிங்கம். அதைப் பார்த்த வடிவேலன்; "ஏதாவது பிரச்சினைக்குரிய பொருளாகவும் இருக்கலாம். அதனால் பிரித்துப் பார்ப்போம்" என்று கூறிய வடிவேலன் பொதியைப் பிரித்தார். அதற்குள்ப் பெருந்தொகையான பணம் இருந்தது. அதைக் கண்ட மகாலிங்கம் சொன்னார்; "அருகில் காவல் நிலையம் இருந்தால் கொடுத்துவிட்டுப் போவோம்"

"இல்லை, நீங்கள் வரும்போது உங்கள் பணம் முழுவதையும் தொலைத்து விட்டதாகக் கூறினீர்கள். அதனால் சிவன் உங்களுக்குத் தந்திருக்கிறார். எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் வடிவேலன்.

"வேண்டாம் ஐயா, நாம் முன்பு தீயவர்கள். செய்யக்கூடாதவற்றையெல்லாம் செய்தோம். திருடினோம், மிருகங்களைக் கொலை செய்தோம். அந்தப் பழிபாவங்களை நீக்கத்தான் இங்கு வந்தோம். இனிமேல் தீயசெயல்கள் எதையும் செய்ய மாட்டோம். இந்தப்பணம் எமக்கு வேண்டாம்" என்றார் மகாலிங்கம்.

“வடிவேலன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மகாலிங்கமும் கூடச் சென்ற சிவனடியார்களும் அப்பணத்தைப் பெற மறுத்துவிட்டனர். அதனால் வடிவேலன் சொன்னார்; “நீங்கள் உண்மையான சிவனடியார்கள்தான். உங்களது பணத்தை மகாலிங்கத்திடம் கொடுத்து வைத்தீர்கள். அது தொலைந்தமையால் பணத்திற்குக் கஸ்டப்பட்டீர்கள். அதனால் நான் தான் கொஞ்சப் பணத்தைப் பொதிசெய்து வீதியில் போட்டேன். அதைப் பெற்றுக் கொள்ளுங்கள்” என்றார் வடிவேலன்.

“இவ்வாறு நாம் செல்லுமிடமெங்கும் சிவன் எம்முடன் கூட வந்து கொண்டே இருந்தான்” என்று கதிரேசனுக்குச் சொன்னார் மகாலிங்கம்.

**157) கோகழி மேவிய கோவே போற்றி**

**158) ஈங்கோய் மலை எம் எந்தாய் பொற்றி**

**159) பாங்கு ஆர் பழனத்து அழகா போற்றி**

திருக்குற்றாலத்தில் வீற்றிருந்த கூத்தனை போற்றி வணங்கிய வடிவேலன், “ஐயா, திருவாவடுதுறைக்குச் செல்லவுள்ளோம். நீங்களும் வாருங்கள்” என்றார். நாங்கள் சம்மதித்தோம். வடிவேலன் சொன்னார்; “திருவாவடுதுறையைத் தரிசிக்க வேண்டும். அங்கிருக்கும் சிவனைத் திருமூலரில் இருந்து சகல நாயன்மார்களும் வணங்கி, அருள் பெற்றவர்கள். அங்கு சிவன் அரசனாக வீற்றிருக்கின்றான். அதனால் மாணிக்கவாசக சுவாமிகள், “திருவாவடுதுறையில் அமர்ந்திருக்கின்ற வேந்தே போற்றி என்று கூறிப் போற்றியுள்ளார். திருவிங்கோர் மலையில் வீற்றிருக்கின்ற சிவனிடமும் சென்று அவனைப் போற்றி வணங்குதல் வேண்டும். அத்துடன் அழகு நிறைந்த திருப்பழனத்தில் அழகனாக வீற்றிருக்கும் சிவனைப் போற்றி வணங்குதல் வேண்டும். இவ்விடங்களில் கோவில் கொண்டிருக்கும் சிவனைப் போற்றி வணங்குமாறு மாணிக்கவாசக சுவாமியார் கட்டளையிட்டுள்ளார். நான் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை மாணிக்கவாசக சுவாமிகள் போற்றி வணங்கிய சிவன்கோவில்களுக்கெல்லாம் செல்வேன். திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் சிவன் குருவாகிப் பலருக்கு உபதேசம் செய்தவன். எனது மகளான அபிராமியை அவள் பேசத் தொடங்கியதும் முதன்முறையாக திருவாவடுதுறைக்குத்தான் அழைத்துச் சென்றேன். அதன்பின் அவள் நல்லமுறையில் கற்கத் தொடங்கினாள். அவள் பரீட்சை எழுதும்போது

அவளைத் திருவாவடுதுறைக்கு அழைத்துச் சென்று சிவனை வழிபடச் செய்வேன். இப்பொழுது அவள் வைத்தியராக இருக்கிறாள் என்று மகிழ்ந்தார் வடிவேலன்" என்றார் மகாலிங்கம்.

'சிவனது புதுமைகளைச் சொல்லி முடிக்க முடியாது. உங்களைத் தன் இருப்பிடமெங்கும் மகிழ்வுடன் சிரமப்படாமல் அழைத்துச் சென்ற சிவனை நான் போற்றுகிறேன்" என்றார் கதிரேசன்.

**160) கடம்பூர் மேவிய விடங்கா போற்றி**

**161) அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி**

"அடுத்து நாங்கள் திருக்கடம்பூரில் எழுந்தருளியிருக்கும் அழகனை வணங்குவதற்காகப் புறப்பட்டோம். புறப்படுமுன் வடிவேலன் சொன்னார்; "ஐயா, திருக்கடம்பூரில் எழுந்தருளியிருக்கும் சிவனை அழகன் என்பார்கள். அங்கு இருக்கும் இலிங்கத்தைச் சுயம்புலிங்கம் என அழைப்பர். அச் சிவன் தன்னை வணங்குபவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்பவன். அதனால் நீங்கள் உங்களுக்குத் தேவையாவற்றைக் கேட்டால் அருளுவான். எனது மனைவிக்கு ஒருவிதமான தோல்நோய் வந்துவிட்டது. மேலெல்லாம் எவ்வேளையிலும் அரிக்கும். சொறிந்தால் நீர் வடியும், எரியும். வெய்யிற்காலமானால் பெரும் துன்பம் உண்டாகும். உங்களைப்போல வெளியூர்களில் இருந்து வரும் சிவனடியார்களை நான் எனது வாகனத்தில் ஏற்றி வருவேன். அதற்காகத்தான் அதை வாங்கினேன். ஒருமுறை டெல்லியில் இருந்து வந்த சிவனடியார் எனது மனைவியின் தோலைக் குணமாக்க வேண்டுமானால் திருக்கடம்பூரில் எழுந்தருளியிருக்கும் சிவன் கோவிலுக்குச் சென்று அங்குள்ள கிணற்றில் மூன்று நாட்கள் குளித்துவிட்டுச் சிவனை வணங்குங்கள் என்றார். அப்படியே நான் செய்தேன். வீட்டுக்குவர எனது மனைவியின் தோல்நோய் மாறிவிட்டது. அழகை விரும்பும் பெண்கள் அந்த அழகனைத்தான் வழிபடுவார்கள்." என்று சொன்னார். நாங்கள் அங்கு தங்கி அக்கிணற்றில் நீராடிவிட்டுச் சிவனைப் போற்றித் துதித்தோம்." என்றார் மகாலிங்கம். கதிரேசனுக்கு அவரது கதை உற்சாகத்தைக் கொடுத்தது. அதே நேரம் நல்லைநாதனுக்கு மனவருத்தத்தைக் கொடுத்தது.

**162) இத்தி தன்னின் கீழ் இரு மூவர்க்கு**

**163) அத்திக்கு அருளிய அரசே போற்றி**

“மகாலிங்கம், சிவன் இத்தி என்று சொல்லப்படும் கல்லாலமர நிழலில் இருந்து பலருக்கு அருள்புரிந்திருக்கின்றான். அவன் கல்லால மரத்தின் கீழிருந்த ஆறுபேருக்கும் யானைக்கும் அருள் செய்தவன். அந்தக் கல்லாலமரத்தைச் சென்று வணங்கினாயா…? அதை வணங்குபவர்கள் பெரும் பேறு பெற்றவர்கள் என்று சொல்வார்கள். நான் இளவயதில் சென்று வணங்கினேன். இப்பொழுதும் காலையில் அக் கல்லாலமரத்தின் கீழிருக்கம் சிவனை வீட்டில் இருந்து போற்றி வணங்குவேன்.” என்றார் கதிரேசன்.

“சென்று வணங்கினோம். வடிவேலன் பெரியதொரு வாகனத்தைக் கொண்டு வந்தமையால் அனேகமான கோவில்களில் கோவில் கொண்டிருந்து அடியவர்களுக்கு அருளும் சிவனைத் தரிசிக்க முடிந்தது. சிவன்தான் நாம் எல்லாத் திருக்கோவில்களுக்கும் சென்று அங்கு வீற்றிருக்கும் தன்னை வணங்கிப் போற்றவேண்டும் என நினைத்து வாகனத்தை அனுப்பி வைத்துள்ளான்” என்று உணர்ச்சி வசப்பட்டார் மகாலிங்கம்.

**164) தென் நாடு உடைய சிவனே போற்றி**

**165) எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

“மகாலிங்கம், தென்நாட்டில் கோவில் கொண்டிருக்கும் சிவனைச் சிறப்பானவன் என்பார்கள். அவன்தான் உலகத்தவர்கள் அனைவர்க்கும் இறைவன் என்று மெய்யுணர்ந்தவர்கள் சொல்வார்கள். பெரும்பாலான திருவிளையாடல்களைச் சிவன் தென்நாட்டில் தான் நிகழ்த்தியுள்ளார். அதனால் சிவனைத் தென்னாட்டானென்று சிறப்பித்துக் கூறுவர். நீ பாக்கியவான். உன்னிடம் வந்தவர்கள் புண்ணியம் செய்தவர்கள். அதனால் தான் தென்நாடு முழுவதும் சென்று சிவனைத் தரிசித்தாய்” என்றார் கதிரேசன்.

**166) ஏனம் குருளைக்கு அருளினை போற்றி**

**167) மானம் கயிலை மலையாய் போற்றி**

“மகாலிங்கம், மேன்மைபொருந்திய கைலைமலையில் உறைந்திருக்கும் சிவன் பாகுபாடு காட்டாதவன். எந்தக் கேவலமான உயிரையும் தான் படைத்தமையால் அதற்குத் தாயாகமாறிப் பாலும் ஊட்டுவான். தாய்ப்பன்றியை வேடன் ஒருவன் கொல்ல அதன் குட்டிகள் பசியால் அழ, அழுகுரல் கேட்டுச்

சிவன் தாய்ப்பன்றியாக மாறிவந்து பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டியவன். அதேவேளை சம்பந்தப் பெருமானுக்குப் பாலூட்டியவன். அத்தகைய சிவனைப் போற்றி வணங்க வேண்டும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அதனால்தான் நான் தெருவில் விடப்படும் நாய்க்குட்டிகளையும், பூனைக்குட்டி-களையும் தூக்கிவந்து வளர்க்கிறேன். அத்துடன் பலவருட காலம் எமக்குத் தாயைப்போலப் பாலைத்தந்த பசுக்களை வயது முதிர்ந்ததும் கசாப்புக் கடைக்காரருக்கு விற்கிறார்கள். அதைத் தடுக்கவே முதிர்வடைந்த பசுக்களை வாங்கிவந்து வளர்க்கிறேன். அவற்றின் சாணம் எனது வயல்களுக்குப் பசளையாகிறது. சிவன் படைத்த உயிர்களைப் பசியால் வாடவிடுவது பெரும் பாவம்" என்றார் கதிரேசன்.

**168) அருளிட வேண்டும் அம்மான் போற்றி**

**169) இருள் கொட அருளும் இறைவா போற்றி**

அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த வல்லிபுரத்திற்குக் கவலையாக இருந்தது. அவன் மகாலிங்கத்தின் நண்பன். பெருங்குடிகாரன். தீய செயல்களைத் துணிந்து செய்பவன். அவன் மகாலிங்கத்தின் வற்புறுத்தலால் சிவனை வழிபடத் தொடங்கியவன். மகாலிங்கத்துடன் சேர்ந்து தென்னாட்டுத் திருத்தலங்களுக்குச் சென்று வந்தவன். அவன் போகும்போது அதைப் பெரிதாக எண்ணவில்லை. அங்கு சென்று அங்குள்ள சிவத்தலங்களைத் தரிசித்துப் போற்றி வணங்கிய பின்பு அவனது மனம் முற்றாக மாறிவிட்டது. தான் வாழ்ந்த வாழ்க்கையை எண்ணி மிகவும் துன்பப்பட்டான். அதை அடிக்கடி அவன் மகாலிங்கத்திற்கும் கதிரேசனிற்கும் சொல்லிக் கவலைப்படுவான். கதிரேசன் முதிர்ந்த மாடுகளை வாங்கித் தனது பட்டியில் சேர்த்தபோது அது அவனுக்கு மிகுந்த சினத்தைக் கொடுத்தது. அவன் ஒரு மாட்டுவியாபாரி. மாடுகளை வாங்கிக் கசாப்புக் கடைக்காரனுக்கு விற்பதால் அவன் பெரும் பொருள் சம்பாதித்து வந்தான். மாடுகளைக் கதிரேசன் வாங்கத் தொடங்கியபின்பு யாரும் அவனுக்கு மாடுகளை விற்பதில்லை. அதனால் அவனது தொழில் முற்றாக முடங்கியது. கதிரேசனைப் பழிவாங்கவும் முடியாது. அவருக்கு ஏதாவது நோய் என்றாலே ஊரே திரண்டு வரும். அதனால் வல்லிபுரம் பேசாமல் இருந்து வந்தான்.

“அண்ணை, எனக்கு மிகுந்த கவலையாக உள்ளது. தெனன்னாட்டில் உள்ள சிவத்தலங்களுக்குச் சென்றபோது அங்குவந்த அடியவர்கள், “தாயை ஒத்த இறைவா எனக்கு அருள் புரிவாயாக. அஞ்ஞான இருளை அகற்றும்

இறவைா போற்றி" என்று வணங்கியபோதுதான் எனக்குச் சிவனின் பெருமை தெரிந்தது. நான் பல உயிர்களைத் துன்புறுத்தி விட்டேன். எனது பாவம் தீருமா...?" என்று கேட்டான் வல்லிபுரம்.

"மகனே, எதையும் நினைக்காமல் பற்றுக்களின்றிச் சிவனை வழிபடுபவன்தான் சிவனடியான். நடந்தவற்றை மறந்துவிட்டுப் பற்றற்றுச் சிவனை வணங்கு. சிவனை வணங்கும்போது எதையும் நினைக்காது உனது அருளைத்தா என்று வேண்டுதல் செய். காலக்கிரமத்தில் யாவும் நல்லபடி நடைபெறும்" என்றார் கதிரேசன்.

**170) தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி**

**171) களம் கொளக் கருத அருளாய் போற்றி**

"மகனே, கலங்குவதாலோ, கவலைப்படுவதாலோ எதுவும் நடந்துவிடாது. அவை மனிதனைப் பலவீனப்படுத்தி பல்வேறு சிந்தனைகளை உருவாக்கும். அதனால் மனம் சஞ்சலப்படும். சஞ்சலப்படும் மனத்தால் இறைவனை வணங்க முடியாது. வெட்டப்பட்ட மரத்தை என்ன செய்ய முடியும்" முடிந்தவற்றை நினைக்காதே. இப்போது உனக்குப் பெரிதாகத் தொழில் இல்லை. எனது பட்டியில் சுமார் 100 மாடுகள் உண்டு. அவற்றை நல்லமுறையில் பராமரித்துத் தரவேண்டும். உனக்கு விருப்பமானால் வா. நல்ல சம்பளம் தருகிறேன்" என்றார் கதிரேசன்.

"நான் செய்த பாவங்கள் அதனால் தீருமென்றால் நான் வந்து அவற்றைப் பராமரிக்கிறேன். எனக்குச் சம்பளம் தர வேண்டாம். மூன்று வேளையும் உணவு தந்தால் போதும்." என்றான் வல்லிபுரம்.

"பிறந்து பிறந்து இறந்து இறந்து பின் பிறக்கும் உயிருக்கு நிலையான இடம் இல்லை. இறைவனை அடைந்து அவனது திருவடி நிழலில் இருப்பதே நிலையான இடம். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார், "பிறவிப் பெருங்கடலில் தன்னந் தனியனாய் அலைந்து அலைந்து களைப்படைந்ததனால் உனது துணையை நாடுகிறேன். அருள் புரிவாயாக. நிலைத்த இருப்பிடமான உனது திருவடிகளை அடைய அருள் புரிவாயாக" என்கிறார். பிறப்பது துன்பம். அதைவிட இறப்பது துன்பம். கடைசி நேரத்தில் பல்வேறு விதமான நோய்கள்

வந்து துன்புறுத்தும். இறந்து விட்டால் பின் பிறப்பு இப்படிச் சுழலும் ராட்டினம் போலத் திரும்பத் திரும்பப் பிறப்பு உண்டாகும். அதை விலக்க வேண்டுமானால் சிவனைப் பற்றின்றி வணங்குதல் வேண்டும். நீயும் அப்படிச் செய்" என்றார் கதிரேசன்.

**172) அஞ்சேல் என்று இங்கு அருளாய் போற்றி**

**173) நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி**

"மகனே, பிறவிகள் பயத்தை உண்டுபண்ணுகின்றன. ஆனால் இறைவனைத் தொழுவதற்குப் பயப்படத் தேவையில்லை. உலக வாழ்க்கையில் மரணம் என்பது விசமாகும். அதுபோல இறைவனை அடைவது அமிர்தமாகும். அதனால் பிறப்பிலிருந்து விடுவித்து அபயம் அளிப்பது சிவன். அதனால் அவனைப் போற்றி வணங்கு. விசத்தை விரும்பி உண்டு அதை அமிர்தமாக்கிய சிவனைப் போற்றினால் விஷமாக இருந்து மனிதர்களைத் துன்புறுத்தும் விஷம் என்ற பிறப்பு அற்று, அது அமிழ்தான சிவனது திருவடியைச் சேர்க்கும். முன்பு தொழிலுக்காக ஊர் ஊராகச் சென்று மாடுகளை வாங்கி விற்பனை செய்த நீ இனிமேல் ஊர் ஊராகச் சென்று முதிர்ந்த மாடுகளை விலைகொடுத்து வாங்கிவா. அவற்றைக் கொலை செய்யும் பாவிகளிடமிருந்து காப்பாற்று." என்றார் கதிரேசன்.

**174) அத்தா போற்றி ஐயா போற்றி**

**175) நித்தா போற்றி நிமலா போற்றி**

**176) பக்தா போற்றி பவனே போற்றி**

"இந்தத் தொழிலில் உனக்கு விருப்பமில்லாவிட்டால் விட்டுவிடு. நான் யாரையும் வற்புறுத்தவில்லை. தொழில் எதுவாக இருந்தாலும் அதை அர்ப்பணிப்புடனும், மகிழ்வுடனும் செய்பவன் தான் அதனால் வரும் பயனை அனுபவிப்பான். உனக்கு ரவீந்திரனைத் தெரியும். சிறு வயதிலேயே தந்தையை இழந்தவன். தாய் கூலிவேலை செய்து அவனைக் கற்பித்தவள். அவன் உயர்தர வகுப்புப் படிக்கும்போது விடுமுறை நாட்களில் கூலிவேலை செய்தவன். அவனது நல்ல பண்புகளை உணர்ந்த அவனது அதிபர் பாடசாலையில் கூலியாகச் சேர்த்தார். கூலிவேலை எனும்போது மலசல கூடங்களையும் கழுவுதல் வேண்டும்.

அவற்றையெல்லாம் மிக்க மகிழ்வுடன் செய்த ரவீந்திரன் இன்று கல்வி அமைச்சில் ஓர் உயர்ந்த அதிகாரி. உற்சாகமும், அர்ப்பணிப்பும், முயற்சியும் ஒருவனை மலைபோல உயர்த்தும் என்பதற்கு அவன் உதாரண புருஷனாவான். அதனால் அர்ப்பணிப்புடன் உனது கடமைகளைச் செய். உனது பாவங்கள் யாவும் படிப்படியாக நீங்கும்” என்றார் கதிரேசன்.

**177) பெரியாய் போற்றி பிரானே போற்றி**

**178) அரியாய் போற்றி அமலா போற்றி**

வல்லிபுரம், கதிரேசனின் முதிர்ந்த மாடுகள் அடைக்கும் பட்டியில் வேலை செய்து கொண்டிருந்தபோது மகாலிங்கம் வந்து கேட்டார்; “அந்த வெள்ளைக் காளை இறந்து விட்டதா?”

“இல்லை அண்ணை, காலமை வைத்தியர் வந்து சோதித்துப் பார்த்துவிட்டு ஊசி போட்டவர். காலையில் புல்லுத் தின்றது. தப்பிவிடும் என்று வைத்தியர் சொன்னவர். ஆறு மாதங்களுக்கு முன்பு கதிர்காமநாதனின் எருது ஒன்று இப்படித்தானே நின்றது. அவர் வைத்தியரை அழைத்து வந்து காட்டாது என்னிடம் வந்து கசாப்புக் கடைக்காரனுக்கு விற்கச் சொன்னவர். நான் விற்றுக் கொடுத்ததற்கு ஐநூறு ரூபா தந்தவர். அப்ப நான் பாவம், பழி பார்ப்பதுமில்லை. இறைவனை வணங்குவதும் இல்லை. ஆனால் கதிர்காமநாதன் பெரும் சிவபக்தன். சிவபூசை செய்பவன். சிவபூசை செய்யும்போது; “அனைத்திற்கும் பெரியவனே போற்றி, உயிர்களை இரட்சிப்பவனே போற்றி, பஞ்சேந்திரியங்களுக்கு எட்டாதவனே போற்றி, நிர்மலனாக இருப்பவனே போற்றி என்று பூப்போட்டுச் சிவனை வணங்குவார். பின்பு பஞ்சமாபாதகங்கள் அனைத்தையும் செய்வார். சிவனை வணங்கத் தொடங்கிய பின்பு நான் முன்பு செய்த தீய செயல்களை எண்ணி வருந்துகிறேன். வெட்கப்படுகிறேன். சிவனை நினைத்த மனத்தால் தீயவற்றை நினைக்க முடியவில்லை. கதிர்காமநாதன் எப்படிப் பாவங்களை அஞ்சாது செய்கிறான்” என்று கேட்டான் வல்லிபுரம்.

“மக்களில் பெரும்பான்மையானோர் அவ்வாறுதான் நடந்து கொள்கிறார்கள். சிவனை நம்பி சிவனை முழுமையான அன்புடன் தொழுபவர்களின் சந்ததி மகிழ்வுடனும், வசதிகளுடனும் வாழும். கதிரேசனின் குடும்பத்தைப் பார். அவரது பூட்டன் இம்முறை மருத்துவக்கல்லூரிக்குத்

தெரிவாகியுள்ளான். கதிர்காமநாதனின் மகன் பத்தாம் வகுப்புக்கூடப் படிக்கவில்லை. எல்லோரும் கடவுளை வணங்கினால் போதும், பொங்கல், பூசைகள் செய்தால் போதும் என்று நினைக்கிறார்களே தவிர ஒழுக்கமாக வாழவேண்டும் என்று நினைப்பதில்லை. அதனால்தான் துன்பப்படுகின்றனர்; துன்பப்பட்டபோதும் அவர்கள் அதை உணர்வதில்லை" என்றார் மகாலிங்கம்.

**179) மறையோர் கோலம் நெறியே போற்றி**

**180) முறையோ தரியேன் முதல்வா போற்றி**

"வல்லிபுரம், பழிபாவம் எதுவும் செய்யாத மாணிக்கவாசக சுவாமிகள் "நேர்மை பிறழாதவனே", நீ வேதியன் வடிவெடுத்து வந்தாய். அனைத்திற்கும் முதல்வனே. என்னால் இனியும் பிறப்பெடுக்க முடியாது. என்னை ஆட்கொள்ளாதிருப்பது முறையோ? உன்னை நான் போற்றுகிறேன். எனது பிறவியை அறுத்துவிடு என்று" பாடுகிறார். நாம் பல்லாயிரம் பாவங்கள் செய்தோம். அதற்காக நாம் சிவனை நாள்தோறும் போற்றுதல் வேண்டும். கதிர்காமநாதன் போன்றோரைக் கனவிலும் எண்ணலாகாது. அப்படி எண்ணினால் பாவம் தான் வந்து சேரும். பழையவற்றை நினைக்ககூடாது. நினைத்தால் அதன்மேல் பற்று உண்டாகும். கதிர்காமநாதன் சிவனை வணங்கிக்கொண்டு பழையவற்றை நினைக்கிறான். அதன் மேல் உண்டாகும் பற்றால் அவாப்படுகிறான். சாகக் கிடந்த மாட்டை அருளில்லாமல் காசுக்கு ஆசைப்பட்டு விற்றவன். இப்போ இன்னொரு மாடு நோய்வாய்ப்பட்டுள்ளது. அதை விற்பதற்காக அலைகிறான். அதனால் அனைத்திற்கும் முதல்வனான சிவனை வணங்குவோர் எக் காரணம் கொண்டும் சிவனைத் தவிர்ந்த எதையும் நினைக்கக் கூடாது. அதில் மிகக் கவனமாக இரு" என்றார் மகாலிங்கம்.

**181) உறவே போற்றி உயிரே போற்றி**

**182) சிறவே போற்றி சிவமே போற்றி**

"வல்லிபுரம் இப்போ நான் எனது சொத்துக்கள் அனைத்தையும் உரியவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டேன். இப்போ என்னிடம் இருப்பது உருத்திராக்கமும், உடையும், உண்கலமும், கைத்தடி ஒன்றும், கமண்டலம் ஒன்றுமே. எனினும் உடையையும், கைத்தடியையும், கமண்டலத்தையும் கைவிட

முடியவில்லை. சிவன் எனக்குச் சுற்றமான பின், எனது உயிர், நலன் அனைத்தையும் அவனிடம் ஒப்படைத்துவிட்டேன். அதனால் எனக்கு அவன் மங்களத்தைத் தந்துள்ளான். அதனால் எந்த நினைவும் எனக்கில்லை. எல்லாம் அவனென்று நினைத்தபின்பு எதுவும் என்னில் இல்லை என்ற உணர்வு மேம்பட்டுவிட்டது. நாம் தென்னாட்டில் சந்தித்த வடிவேலனைப் பார்த்தாயா? அவரிடம் ஏதுமில்லை. கோடிக்கணக்கான சொத்துக்களை விட்டுவிட்டுப் பரதேசியைப்போல ஒரு நான்குமுழ வேட்டியோடு திரிகிறார். இது தான் சிவனடியானது நிலை. ஓடி ஓடிச் சம்பாதிக்கும் கதிர்காமநாதனுக்கு ஏராளமான நோய்கள். அதனால் உண்ண முடியாது. உண்ண முடியாதவன் ஏன் ஓடி ஓடிச் சம்பாதிக்க வேண்டும்...? சம்பாதிப்பது நல்ல சுவையான உணவுகளை உண்ண. அவன் சுவைத்து உண்பதற்கு உறுதியான பற்கள் தேவை. இளவயதிலேயே பல்நோய் ஏற்பட்டு அவனது பற்கள் யாவும் விழுந்து விட்டன. பொய்ப் பல் கட்டியுள்ளான். அது சரியாகப் பொருந்தாமையால் அதைக் கழற்றி வைத்திருக்கிறான். அதைவிட்டுவிட்டு அவனது பணம், பொருள்களை எடை போடுகிறாய். வாழும் போதே உதவாத பணம் போனபின் உதவுமா என்ன...? அதனால் மகிழ்வுடன் உனது சுற்றத்தவனான சிவனைப் போற்றி வணங்கு" என்றார் மகாலிங்கம்.

**183) மஞ்சா போற்றி மணாளா போற்றி**

**184) பஞ்சுஏர் அடியேன் பங்கா போற்றி**

காளை மாடு எழுந்து நிற்கிறது என்று கேள்விப்பட்ட கதிரேசன் தொழுவத்திற்கு வந்தார். அழகன் என்று செல்லமாக அழைக்கும் அந்தக் காளை எழுந்து நின்றது. கதிரேசனைக் கண்டதும் மகிழ்ச்சியால் வாலை ஆட்டியது. அவரது கையை நக்கியது; "சிவனுக்கும் அழகன் என்றொரு பெயர் உண்டு. அதனால் தான் எனது காளைக்கு அழகன் என்று பெயர் வைத்தேன். சிவனின் வாகனம் காளை. அதனால் காளையைத் துன்பம் செய்தால் அது சிவனுக்குத் துன்பஞ் செய்வதை ஒக்கும். அது போலச் சேவை செய்தால் அது சிவனைச் சென்றடையும். மரணத்தின் வாயிலுக்குச் சென்ற அழகனைக் காப்பாற்றிவிட்டாய். இத் தொழுவத்தில் வடக்குப் பக்கத்தில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்துள்ளேன். காலையும் மாலையும் பூசை செய். சிவன் அழகானவன் மட்டுமல்ல, உயிர்களுக்கு மணவாளன். செம்பச்சை போன்ற சிவந்த பாதங்களையுடைய உமாதேவியாருடைய மணாளன். அத்தகைய சிவனைப்

போற்றித் துதித்தால் பாவங்கள் யாவும் மறைந்துவிடும். சிவனின் வாகனமான காளையை நீ மிகுந்த கவனத்துடன் பராமரித்திருக்கிறாய். வேலைக்கு உன்னைச் சேர்க்கும்போது நீ நன்றாக வேலை செய்வாயோ எனச் சந்தேகித்தேன். நீ மகிழ்வுடனும், அர்ப்பணிப்புடன் வேலை செய்கிறாய். தொழுவம் முழுவதும் சாம்பிராணியின் வாசம் எழுகிறது. சேவையை நல்லமுறையில் செய். சிவன் உனக்கு அருள் செய்வார்" என்றார் கதிரேசன்.

"அண்ணை நீங்கள் சொல்வதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கு. சிவனை வணங்கத் தொடங்கிய பின்பு தான் நான் மகிழ்வாக வாழ்கிறேன். எனது மனைவியும் பிள்ளைகளும் மகிழ்வாக வாழ்கின்றனர். முன்பு மூத்த மகள் கற்று உயர்தரப் பரீட்சை எழுதியபோது நான் குடித்துவிட்டு அவளது படிப்பைக் குழப்பினேன். அவள் மாமனின் வீட்டுக்குச் சென்று படித்ததால் இன்று ஆசிரியையாக இருக்கிறாள். இவையெல்லாம் தவறு என்று, இப்போதுதான் தெரிகிறது" என்றான் வல்லிபுரம்.

**185) அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி**

**186) இலங்கு சுடர் எம் ஈசா போற்றி**

"அண்ணை நாய்போல அலைந்த என்னை நன்னெறிப் படுத்தியதால் நான் இன்று துன்பங்களில் இருந்து விடுபட்டுள்ளேன். நாய்போல் அலைந்து துன்பப்பட்ட எனக்குச் சிவன் உதவிகள் செய்ய ஆரம்பித்துவிட்டார். சிவனைப்போல இருந்து எனக்கு உதவிகள் பல செய்கிறீர்கள். சுடராக விளங்கும் ஈசனின் அருள் எனக்குக் கிடைக்கத் தொடங்கிவிட்டது. நான் குடித்துவிட்டு வீட்டில் குழப்பம் செய்வதால் பிள்ளைகள் இரவு வேளைகளில் நித்திரை கொள்வதற்காக இனத்தவர்களின் வீட்டுக்குச் சென்று விடுவர். இப்போ நான் சிவனை வணங்குவதால் எனது பிள்ளைகள் நிம்மதியாக வீட்டில் இருந்து மகிழ்வுடன் கற்கின்றனர். அதற்கு வழிகோலிய உங்களை நான் சுடர்வடிவாக இருக்கும் சிவனாகவே கருதுகிறேன்" என்று கதிரேசனை வணங்கினான் வல்லிபுரம்.

**187) கவைத்தலை மேவிய கண்ணே போற்றி**

**188) குவைப்பதி மலிந்த கோவே போற்றி**

“கதிரேசண்ணை கவத்தலை என்ற ஊரில் உள்ள சிவன்கோவில் வாசலில் கட்டி நின்ற பெரிய காளை மாட்டைப் பார்த்ததும் பயம் உண்டாகும். ஆனால் அது பரமசாது என்று எல்லோரும் சொல்வர். கோவிலில் உள்ள ஒரு புற்களை வைத்திருப்பார். மக்கள் வாங்கி அதற்குக் கொடுப்பார்கள். சிறுவர் குழந்தைகள் கூடக் கொடுக்கும். அதைப் பார்த்த மகாலிங்கம் புல்லை வாங்கிக் கொடுத்தான். அது உண்ணவில்லை. அதனால் அதைக் கீழே போட்டீர்கள். நான் வாங்கிக் கொடுத்தபோது அக்காளை தனது நீண்ட கூரிய கொம்பால் என்னைத் தூக்கிவைத்துத் தலையை ஆட்டியது. அது என்னைக் கொன்றுவிடும்போல இருந்தது. அதனால் அலறினேன். எனது அலறல் சத்தம் கேட்ட மாட்டின் சொந்தக்காரன் என்னை வந்து காப்பாற்றிவிட்டுச் சொன்னான்; “பாவிகள் கொடுக்கும் புல்லை அது ஏற்காது. தீயவர்களை அது தாக்கும். உங்களின் பாவம் தீரவேண்டுமானால் இருவரும் குவைப்பதி என்னும் ஊரிலுள்ள சிவனைச் சென்று தரிசியுங்கள்” என்றவன். எம்முடன் வடிவேலனும் வந்தமையால் சுலபமாக அவ்விருகோவில்களையும் வணங்க முடிந்தது” என்றான் வல்லிபுரம்.

“மிருகங்களுக்கு எல்லாம் தெரியும். யமன் வாறது கூடத் தெரியும் என்பர்ர்கள். நீ மாடுகளை வாங்கிக் கசாப்புக்கடைக்காறனுக்கு விற்றது அதற்குத் தெரிந்திருக்கிறது. அதனால் காளைகளுடன் அவதானமாகப் பழகு” என்றார் கதிரேசன்.

**189) மலைநாடு உடைய மன்னே போற்றி**

**190) கலைஆர் அரிகே சரியாய் போற்றி**

“மாணிக்கவாசக சுவாமிகள், தென்னாட்டில் கோவில் கொண்டருளி-யிருக்கும் எல்லாத் திருத்தலங்களுக்கும் சென்றிருக்கிறார். அதனால் தான் அவர் சென்ற திருத்தலங்களின் பெருமைகளைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். “கைலாயமலையில் இருக்கின்ற அதிபதியே போற்றி” என்றும், “கலைஞானங்கள் நிறைந்த அரிகேசரி என்னும் ஊரில் கோவில் கொண்டிருக்கும் சிவனே போற்றி” என்கிறார். நீங்கள் அரிகேசரிக்குச் சென்றீர்களா…?” என்று கேட்டார் கதிரேசன்.

“அங்கு சென்றோம். அங்குள்ள சிவனைத் தரிசிப்பதற்காகக் கலைஞர்கள் வருவார்கள். வந்து தாம் கற்ற ஞானத்தால் சிவனைப் போற்றி வழிபடுவர். நாம் சென்றபோது ஒரு புல்லாங்குழல் வித்துவான் இனிமையாகப் புல்லாங்குழலை

வாசித்துக் கொண்டிருந்தார். மிகவும் அருமையாக இருந்தது. கச்சேரி முடிய அவர் சொன்னார்; "நான் அரிகேசரிக்கு வந்து புல்லாங்குழலை வாசித்தால் சிவன் மகிழ்ந்து வரமளிப்பார். அதன்பின் எனது திறமை மேலோங்கும். அதிக கச்சேரிகள் வரும்" என்றவர். "எல்லாம் சிவனின் புதுமைதான்" என்றார் மகாலிங்கம்.

**191) திருக்கழுக்குன்றில் செல்வா போற்றி**

**192) பொருப்பு அமர் பூவணத்து அரனே போற்றி**

"திருக்கழுக்குன்றில் வீற்றிருக்கும் சிவனை நாம் சந்திக்கச் சென்றபோது அங்கிருந்த சுவாமியார் என்னருகே வந்து சிவனை நீ வணங்கத் தொடங்கியுள்ளாய். இக் குன்றில் அமர்ந்திருக்கும் சிவன் மிக்க சக்தி வாய்ந்தவன். அவனை வணங்கியதால் நீ பெரும் வசதியுள்ளவனாக மாறப்போகிறாய். நீண்ட நாட்களாத் தடைப்பட்டிருந்த ஒரு மங்கள நிகழ்வொன்று நடைபெறவுள்ளது. இங்கிருக்கும் சிவனை வணங்கிவிட்டுத் திருப்பூவனத்தில் கோவில் கொண்டிருக்கும் சிவனையும் வணங்கு. உனது துயரங்கள் தீரும் என்றவர். அவர் சொல்லி எதுவும் நடக்கவில்லை. ஆனால் இரவில் கனவில் வந்து அதனையே கூறுகிறார். அதனால் என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. முன்பென்றால் மதுவைக்குடித்தால் எல்லாவற்றையும் மறந்து விடுவேன். நன்மை, தீமைகள் தெரியாது. இப்போ பாவத்தையும் எண்ணி எண்ணிக் கவலைப்படுகிறேன். அப்போதெல்லாம் திருக்கழுக்குன்றிலும், திருப்பூவனத்திலும் கோவில் கொண்டிருக்கும் சிவனின் நினைப்புத்தான் வருகிறது. கனவு வந்த நேரத்தில் இருந்து விடியும் வரை அத்திருக்கோவில்களில் இருக்கும் சிவனை போற்றி வணங்குகிறேன்" என்றான் வல்லிபுரம்.

"அந்தச் சுவாமியார் சொன்னது சரி. உனது மகள் ஆசிரியையாக இருக்கிறாள். அவளைப் பாடசாலையில் கண்டு ரசித்த வர்த்தகனான அமிர்தலிங்கம் காதலிக்கிறான். அவனது பெற்றோர் சிவபக்தர்கள். நீ சிவனை வணங்காது தீய செயல்களைச் செய்பவன். அதனால் அவர்கள் விரும்பவில்லை. நீ மனம்மாறிச் சிவனை வணங்குவதற்காகத் தென்னாடு சென்றபின் அதைப்பற்றிக் கதிரேசனோடு கதைத்துள்ளனர். அது சரிவரும். பார்த்தாயா சிவனின் கிருபையை" என்றான் மகாலிங்கம்.

**193) அருவமும் உருவமும் ஆனாய் போற்றி**

**194) மருவிய கருணை மலையே போற்றி**

“வல்லிபுரம், சிவன் வடிவம் உள்ளவன். ஆனால் வடிவம் இல்லாதவன். அவன் மலையைப் போன்ற கருணை உள்ளவன். இது தெரியாமல் நாம் எவ்வளவு தீய செயல்களைச் செய்தோம். இருந்தும் அவனை முழுமனதுடன் வணங்கத் தொடங்கியவுடன் அக்கருணை மலையைப் போல உயரும். கவலைப்படாது அவனைப் போற்று” என்றார் மகாலிங்கம்.

“எனது மகளைப் பெருங்கோடீஸ்வரனான அமிர்தலிங்கம் விரும்புகின்றானா? எனக்கு அது தெரியாது” என்றான் வல்லிபுரம்.

“உனது மகளுக்கு அவன் தன்னை விரும்புவது தெரியாது. அத்துடன் நீ தீய செயல்களைச் செய்பவன். அப்படியிருக்கப் பெரும் தனவந்தர்களான அமிர்தலிங்கத்தின் பெற்றோர் உனது வீட்டிற்குத் திருமணம் பேச வருவர்களா…? அவர்களுக்கு விருப்பமில்லை. தமது மகனை அவர்கள் தலைமுழுகவும் தயாராக இருந்தனர். கதிரேசன் தான் அவர்களுக்குப் புத்திமதிகள் கூறி உனது மனமாற்றத்தைத் தெரிவித்தவர். நீ மனம் மாறியதால் அவாகள் ஒப்புக்கொண்டு விட்டனர். சிவனின் கருணை மலையை விடப் பெரியது” என்றார் மகாலிங்கம்.

“இவ்வளவு காலமும் அறியாமையால் பாவத்தைத் தேடிவிட்டோம். சிவனை வணங்கத் தொடங்கிய சில நாட்களுக்குள் சிவனின் அருள் கிடைத்து விட்டது” என்றான் வல்லிபுரம்.

“நீ தீயவன். சிவனை வணங்காதவன். ஆனால் உனது மகள் பெரும் சிவபக்தை. கதிரேசனின் அன்புக்குப் பாத்திரமானவள். அதனால்தான் இது நடைபெறுகிறது” என்றார் மகாலிங்கம்.

**195) துரியமும் இறந்த சுடரே போற்றி**

**196) தெரிவு அரிது ஆகிய தெளிவே போற்றி**

அப்போது அங்கு வந்த கதிரேசன் சொன்னார்; “முக்குணங்களுக்கு அப்பால் இருப்பது துரியம். ஆனால் சிவன் துரியாதீதமாய் இருக்கும் பேரொளி. சிவசைத்தன்னியமாக விளங்குபவன் பரமன். அவனைப் போற்றி வணங்கினால் நினைத்தவை நடைபெறும். உனது மகள் பெரும் சிவபக்தை. அவள் தனது உழைப்பில் ஒரு பானையும் சட்டியும் வாங்கித் தனக்கென்று புனிதமாகச் சமைத்து உண்பவள். சிவனின்மீது தீராத பக்தி கொண்டவள். அவள் ஏழையாக இருந்தாலும் சிவனின் பக்தை. அவளை மருமகளாக ஏற்க அமிர்தலிங்கத்தின்

பெற்றோருக்கு விருப்பம். அவர்கள் அவளை உன்னைவிட்டுப் பிரித்து கொண்டுபோக நினைத்தனர். அது உனது மகளுக்கு விருப்பமில்லை. அவளின் பிரார்த்தனையால் உனது மனம் மாறிவிட்டது. அது சிவனது பெரும் அருள். இனி நீ சிவனை மறக்க மாட்டாய் என்று நான் உறுதியாக நம்பியமையால் தான் அவர்களுக்கு ஒப்புதல் அளித்தேன்” என்றார்.

**197) தோளா முத்தம் சுடரே போற்றி**

**198) ஆள் ஆனவர்க்கு அன்பா போற்றி**

“வல்லிபுரம், சிவன் துளைக்கப்படாத முத்தின் ஒளியைப் போன்றவன். தன்னை வணங்குபவர்களுக்கு அன்பை அள்ளிக் கொடுப்பவன். சிவஒளி அண்டங்களெங்கும் வியாபித்திருக்கிறது. அது பிளவுபடுவதில்லை. எல்லா அண்டங்களையும் அது ஊடறுத்துள்ளது. நீ இளமையில் தொடங்கி அண்மைக்காலம் வரை தீயசெயல்களைச் செய்தபோதும் இப்போது திருந்தி விட்டாய். சிவனது அருள் உடனேயே கிடைக்கும். காலங்கடந்தும் கிடைக்கும். கண்ணப்பருக்கு உடனேயே கிடைத்தது. அப்பருக்கு எண்பது வயதில் கிடைத்தது. ஏனென்றால் அப்பரின் தேவை நாட்டுக்குத் தேவையாக இருந்தது. உனது மகள் சிவனில் மெய்யன்பு வைத்துள்ளாள். குட்டிநாய் கடித்ததற்காகத் தாய் நாயைத் தண்டிக்க முடியுமா…? அது போலத் தாயும் பிள்ளையும் ஒன்றென்றாலும் வாயும் வயிறும் வேறு என்பர். அவளது முழுமையான பக்தி பயனளித்துள்ளது. அவளது பக்தியின் வலிமையால் தான் நீ திருந்தினாய். அவளது முதலாவது கோரிக்கை தீய செயல்களைச் செய்யும் நீ திருந்த வேண்டும் என்பதே. அதற்காக அவள் பல முயற்சிகளைச் செய்தாள். அவை பலிக்காததால் சிவனைச் சரணடைந்தாள். அது நல்ல பயனைத் தந்துவிட்டது. சிவன் துளைக்கப்படாத முத்தைப் போன்றவன். முத்தை துளைத்தால் அதன் ஒளி மாறுதல் அடையும். அதனால்தான் துளைக்கப்படாத முத்தின் ஒளியே என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை வர்ணிக்கிறார். அத்துடன் மெய்யன்போடு வணங்கும் அடியார்களுக்குச் சிவன் வசமாகி விடுவான்” என்றார் கதிரேசன்.

**199) ஆரா அமுதே அருளே போற்றி**

**200) பேர் ஆயிரம் உடைப் பெம்மான் போற்றி**

"வல்லிபுரம், சிவன் தரும் இன்பம் தெவிட்டாதது. அத்துடன் சிவன் ஆயிரக்கணக்கான பெயர்களையுடையவன். அதனால் அவனது பெயர்களைச் சொல்லி வாழ்த்து என்று உனது மகளுக்குச் சொன்னேன். முக்கியமாக ஐந்தெழுத்துப் பெயரையே சிவன் மிக மிக விரும்புவான். அதனால் தமிழ் வேதமாகிய ஐந்தெழுத்தை ஓது என்று சொன்னேன். ஆரம்பத்தில் அமிர்தலிங்கத்தின் பெற்றோர் தமது மகனின் காதலை முற்றாக எதிர்த்தனர். அவனை வீட்டைவிட்டுத் துரத்தவும் முடிவு செய்தனர். அவன் என்னிடம் வந்து அதைச் சொன்னபோது உனது மகளுக்குச் சொன்னதையே அவனுக்கும் சொன்னேன். அவனும் சிவனது ஆயிரக்கணக்கான பெயர்களைச் சொல்லிப் போற்றினான். அதனால் சிவன் மகிழ்ந்து ஆவன செய்துவிட்டார்" என்றார் கதிரேசன்.

**201) தாளி அறுகின் தாராய் போற்றி**

**202) நீள் ஒளியாகிய நிருத்தா போற்றி**

"வல்லிபுரம், சிவன் மலர்களாலும், அறுகம்புல்லாலும் கட்டப்பட்ட மாலையை விரும்பி அணிபவன். அத்துடன் அகண்ட சோதியாக சிதாகாசத்தில் தாண்டவம் ஆடுகின்றவன். அவனைப் போற்றி வணங்கினால் வணங்குபவர்-களுக்கு வரும் இடர்களை நீக்குவான். அதனால் உனது மகளுக்குச் சிவனுக்கு மலர்களாலும், அறுகம்புல்லாலும் கட்டிய மாலையைத் தினமும் போட்டு வணங்கு என்றேன். அவள் அப்படியே செய்ததால் அறுகம்புல் சக்தி வாய்ந்தது. விநாயகரின் வெப்பத்தைத் தணித்தது. மக்கள் அனலாசுரனின் கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாது அல்லற்பட்டனர். அதனால் அவர்கள் அதை விநாயகரிடம் முறையிட, விநாயகர் அனலாசுரனைத் தூக்கி விழுங்கிவிட்டார். விநாயகரின் வயிற்றுள்ச் சென்ற அனலாசுரன் வெப்பத்தை வெளிப்படுத்தினான். அதைத் தாங்கமுடியாது விநாயகர் பெரும் துன்பப்பட்டார். அதைக்கண்ட முனிவர்களும், ரிஷிகளும், மக்களும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். பூசை செய்தனர். குளிப்பாட்டினார்கள். பாலால் அபிஷேகம் செய்தனர். வெப்பம் தணியவில்லை. அதனால் முனிவர்கள் விநாயகர் மீது அறுகம்புல்லைக் கொண்டு வந்து பரவினர். உடனே விநாயகரின் வெப்புநோய் நீங்கியது. அவ்வளவு வலிமை மிக்கது அறுகம்புல். அதனால் மாலை செய்து சிவனுக்குச் சாத்தினால் சிவனது மனம் குளிரும். நீயும் எமது தொழுவத்திலுள்ள சிவலிங்கத்திற்கு மலர்களாலும், அறுகம்புல்லாலும் மாலை கட்டிச் சாத்து." என்றார் கதிரேசன்.

**203) சந்தனம் சாந்தின் சுந்தா போற்றி**

**204) சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி**

அன்று பிரதோச நாள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆச்சிரமத்தில் உரையாற்றினார்; "சிவன் உடலெங்கும் சந்தனக் குழம்பைப் பூசியுள்ளான். அதனால்தான் சிவனடியார்களும் சந்தனத்தை உடலெங்கும் பூசிக்கொள்கிறார்கள். ஒருவன் திருநீற்றையும், சந்தனத்தையும் இட்டிருக்கிறான் என்றால் அவன் சிவனைப் போற்றுகின்றான் என்று அர்த்தம். அத்துடன் சிவன் மனதுக்கு எட்டாத மங்கள சொரூபமானவன். அவனை நினைவுபடுத்தச் சந்தனத்தைச் சைவர்கள் பூசுவர். கந்தராசா என்றொருவன் இருந்தான். அவன் காலையில் எழுந்து நீராடிச் சிவனைத் தொழுது நீறணிபவன். பின் சந்தணத்தை உடலின் பலபகுதிகளிலும் பூசுவான். அதன்பின் அவன் சந்தைக்குச் சென்று மீனைக் கொள்வனவு செய்து விற்பான். அவனது மீன்கடையில் சிவனது உருவப்படம் இருக்கும். அதற்கு அறுகம்புல்லும் பூக்களும் கலந்து கட்டிய மாலையைப் போட்டிருப்பான். மங்கள விளக்கு எரியும். பத்திக்குச்சிகள் நறுமணுத்தைப் பரப்பும். ஒரு நாள் ஒரு சிவனடியார் அக்கடைப்பக்கமாக வந்தபோது அதன் அமைப்பைக்கண்டு பதறிப்போனார். ஆத்திரத்துடன் அவனைப் பார்த்து; "துட்டனே மீன்கடையில் சிவனின் உருவப்படமா…? மீனை விற்கையில் சிவனுக்கு மாலைபோட்டது மல்லாமல் சிவ சின்னங்களை உடலில் பூசியுள்ளாய். இது மிகப்பெரிய துரோகம். இந்தப் பழியை எவ்வாறு நீக்கப் போகிறாய்" என்று கோபப்பட்டார்.

"சுவாமி, எனக்கு இவையெல்லாம் தெரியாது. மாமிசங்களை விற்கும் கடைகளில் இந்துத் தெய்வங்களை வைத்து மாலைசூட்டி விளக்கு வைத்துள்ளனர். அதைப் பின்பற்றி நானும் வைத்திருக்கிறேன்" என்றான்.

"பெரியவர்கள், அறிஞர்கள் என்றிருப்போர் மேடைகளில் தத்துவங்களை விளக்கமாகப் பேசாது தம்மைப் பற்றிய புராணங்களையே பாடுகின்றனர். அதனால் தான் பேசுவதைக் கேட்போர் தொகை குறைந்து குறைந்து வந்து இப்போ அற்றுவிட்டது. புனிதமான எங்கள் சிவன் மேல்முழுவதும் சந்தனத்தைப் பூசியுள்ளனான். அது புனிதமான பொருள். புனிதமானவர்கள்தான் பூசவேண்டும். நீ தொழிலைச் செய். ஆனால் நீறையும் சந்தனத்தையும் பூசாதே. தெய்வங்களின் படங்களை அகற்று. இல்லாவிட்டால் பெரும் பாவம் வந்து சேரும்" என்று

கூறிவிட்டுச் சென்றார். உடனே கந்தராசன் அவர் சொன்னவற்றைச் செய்தான். அதனால் பிள்ளைகளே, எமது சைவப் பாரம்பரியங்களுக்கு முரணான செயல்களைப் பிரமுகர்கள் செய்கிறார்கள் என்பதற்காக அவற்றைச் செய்யாதீர்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**205) மந்திரம் மாமலை மேயாய் போற்றி**

**206) எம்தமை உய்யக் கொள்வாய் போற்றி**

"பிள்ளைகளே, வேதங்களை விளக்குவதற்காக மகேந்திரமலையில் வீற்றிருக்கும் சிவனைப் போற்றுவோம். எம்மையெல்லாம் மேன்மைப்படுத்து-வதற்காக ஆட்கொள்பவனைப் போற்றி வணங்குவோம். அப்படி வணங்கினால் எமது அறியாமை நீங்கும். நினைத்தது நடக்கும். அச் சிவனடியார் அவ்வாறு சொன்னதும் கந்தராசா பயந்து போனான். அவன் அவ்வூரில் வாழ்ந்த பெரியவரிடம் சென்று கேட்டான்; "ஐயா, தாங்கள் பெரியவர், என்னைச் சந்திப்பவர். தாங்கள் நான் செய்வது பாவச் செயல் என்று ஏன் கூறவில்லை. அத்துடன் என்னிடம் மீனை வாங்கவருவோர் நீறும் சந்தனமும் அணிந்துதானே வருகிறார்கள். கோவில்களில் பிரசங்கம் செய்யும் பண்டிதர் பரந்தாமன் மீனை விரும்பி உண்பவர். அவருக்கு நான் தினமும் மீனை அனுப்பி வைப்பேன். அவர்கூட இது தவறு என்று நினைக்கவில்லையே" என்றான்.

பெரியவரால் அவனுக்குப் பதில்கூற முடியவில்லை. பலர் தீயசெயல்-களைச் செய்வதற்குப் பெரியவர்கள் தான் காரணம். கோவிலைச்சாட்டிப் பணத்தைச் சேர்க்கிறார்கள். பிரசங்கம் செய்யும்போது சொல்பவற்றை அந்த இடத்திலேயே மறந்து விடுகிறார்கள். தாம் பிழைகளைச் செய்வதால் மற்றவர்களைத் திருத்தமுடியாதவர்களாக இருக்கிறார்கள். நானும் பெரும்பிழை செய்துவிட்டேன். நீ தான் எனது குரு" என்று அப்பெரியவர் கந்தராசனை வணங்கினார். கந்தராசன் பயந்து போனான். அன்றிலிருந்து அவன் மீன்களை விற்பதில்லை. விவசாயம் செய்கிறான். இன்று சமூகத்தில் உள்ள பெரும் பிரச்சினை என்னவென்றால் கற்றவர்கள்தான் தீயசெயல்களைத் துணிந்து செய்கிறார்கள். அதைப் பார்த்து மக்களும் அவ்வாறு செய்கிறார்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**207) புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி**

**208) அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி**

“சிவனடியார்களே, ஆட்டுக்குட்டி ஒன்று தாயை இழந்து பசியால் தவித்த போது குட்டியீன்ற புலியை இரக்கம் கொள்ள வைத்து அந்த ஆட்டுக்குட்டிக்குப் பால் கொடுக்க வைத்தவன் சிவன். அத்துடன் ஆர்ப்பரிக்கும் கடலின்மேல் நடந்தவன் சிவன். அத்தகைய சிவனைப் போற்றி வணங்குபவர்களுக்கு விதியை மீறி உதவி செய்வான். புலி ஆட்டைக் கண்டால் கொன்று தின்றுவிடும். அப்படியான கொடிய மிருகத்திற்கு இரக்கத்தை உண்டாக்கி தாய்மையை மலரச் செய்து பாலைக் கொடுக்கச் செய்தவன் சிவன். கந்தராசாவுக்கு மீன் வியாபாரத்தைத்தவிர வேறு எதுவும் செய்யத் தெரியாது. அதாவது விவசாயம் செய்யச் சிரமப்பட்டான். மீன் விற்றுச் சேமித்து வைத்திருந்த சிறிய தொகைப் பணமும் விவசாயம் செய்ததால் செலவானது. அதனால் கூலிவேலை செய்யத் தொடங்கினான். அதையும் அவனால் ஒழுங்காகச் செய்யமுடியவில்லை. அதனால் மிக்க கவலைகொண்ட அவன்காட்டுக்குச் சென்று தற்கொலை செய்ய நினைத்துக் காட்டுவழியே சென்றான். அப்போது அவன், “சிவனே, உன்னையல்லாது எனக்கு யாரின் துணையுமில்லை. மீன் வியாபாரம் எமது குடும்பத் தொழில். வேறு தொழில்கள் எதையும் என்னால் செய்ய முடியவில்லை. அதனால் சாகப் போகிறேன்” என்று நினைத்தவாறு நடந்தான். அப்போது அவனது மீன்கடைக்கு வந்த சிவனடியார் அங்கு வந்து சொன்னார்; “மகனே, சிவபக்தன் கவலை கொள்ளக்கூடாது. தனது கவலைகளைச் சிவனிடம் சொன்னால் அவர் அதைத் தீர்த்து வைப்பார். பயப்படாதே. இந்தா இந்தப் பெட்டியைக் கொண்டு செல். இதை உனது வீட்டுக்குச் சென்ற பின்புதான் திறந்து பார்க்க வேண்டும்” என்று கூறிவிட்டுச் சென்றார். கந்தராசன் வீட்டுக்குச் சென்று பெட்டியைத் திறந்து பார்த்தான். அப்பெட்டி நிறைய தங்கக்காசுகள் இருந்தன. அதனால் சிவன் எந்த வகையிலும் உதவுவான் என்று நினைத்துப் போற்றுபவர்களின் துன்பங்களை நீக்குவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**209) கரும்குருவிக்கு அன்று அருளினை போற்றி**

**210) இரும்புலன் புலர இசைத்தனை போற்றி**

“சிவனடியார்களே, தன்னை முழுமையாக நம்பிய சிவனடியார்களுக்கு வேண்டியவற்றை வேறுபாடு காட்டாது கொடுப்பவன் சிவன். கண்ணப்பருக்கு

அருளியவன். பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டியவன். ஆட்டுக்குட்டிக்குப் புலியைக் கொண்டு பால் கொடுப்பித்தவன். அதைப்போலத் தன்னைப் பற்றின்றி வணங்கிய கரும்குருவிக்கு அருள் செய்தவன். அப்படிப்பட்ட சிவன் பெரும் புலன்கள் ஐந்தையும் அடக்கிச் செயலறச் செய்தபின்பே முத்தியைக் கொடுப்பான். புலன்களை மதங்கொண்ட யானைகள் என்பர். மதங்கொண்ட யானை பாகனுக்கும் அடங்காது. ஆனால் சிவனுக்கு அடங்கும். அதனால் மெய்யன்புடன் சிவனை வணங்குங்கள். தற்போது அறிஞர்கள், பெரியோர்கள் என்று சொல்வோர் கூடச் சாதிவேறுபாடு பார்க்கின்றனர். தகுதி பார்க்கின்றனர். ஆனால் சிவன் சகல சீவராசிகளையும் வேறுபாடின்றி நோக்கி உதவி செய்கிறான். மீன் விற்ற கந்தராசன் வீட்டுக்கு வந்து சிவனடியார் கொடுத்த பெட்டியைத் திறந்து பார்த்தபோது பெட்டி நிறையப் பொற்காசுகள் இருந்தது. உங்களுக்குத் தெரியும். அவன் அதைக்கொண்டு வசதியாக வாழ முயற்சிக்காது சிவசேவை செய்தான். கற்ற ஒருவனின் உதவியோடு ஒரு வர்த்தக நிலையத்தை ஆரம்பித்தான். அது நல்ல வருமானத்தைக் கொடுத்தது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**211) படிஉறப் பயின்ற பாவக போற்றி**

**212) அடியொடு நடுஈறு ஆனாய் போற்றி**

“சிவனடியார்களே, விண்ணுலகில் குடியிருப்பவனாகிய சிவன் அடியவர்களுக்காக மண்ணுலகத்திற்குக் கீழ் இறங்கி வந்து அவர்களின் குறைகளைத் தீர்ப்பான். வேறுபாடு காட்டமாட்டான். அவன் எவ்வளவுதான் கீழிறங்கினாலும் அவன் தனது தூய்மையை இழக்கமாட்டான். மாணிக்கவாசகர் கூறுகிறார்; “மண்ணுலகத்தவனான என்னை ஆட்கொள்வதற்காக நிலவுலக நிலைக்கேற்பக் கீழிறங்கி வந்தவனே போற்றி” என்கிறார். அத்துடன் துவக்கம், நடு, முடிவு ஆகியன அனைத்துமாய் இருப்பவனே போற்றி என்கிறார். மனிதர்கள் தூய்மை இல்லாதவர்கள். கேவலமானவர்கள், நாயினும் கடையவர்கள் என்றும் மாணிக்கவாசகர் கூறுகிறார். மகாலிங்கம் பெரியசாதிமான். அவனது சகோதரியின் கணவனது சிறிய தாயின் மகள் சாதியில் குறைந்தவனைக் காதலித்துத் திருமணம் செய்தமையால் அவர் சகோதரியின் வீட்டுக்கே செல்வதில்லை. ஆனால் உலக முதல்வனான சிவன் எல்லா சீவராசிகளின் உள்ளத்திலும் இருக்கிறார். அவர்கள் அன்புடன் படைக்கும் படையல்களை ஏற்கிறார். அதுபோலச் சாதியில் மிக மிக உயர்ந்தவரான கதிரேசன் அன்புடன் யார் மாமிசமல்லாதவற்றைக் கொடுத்தாலும் வாங்கி உண்பார். அவர் சொல்வார், “கண்ணப்பன் வேடன். அவன் உண்பது மாமிசம். அதனால் அவன் உண்டு

பார்த்துச் சுவையான மாமிசத்தைக் கொடுக்கச் சிவன் விருப்போடு உண்டார். சிவனுக்கில்லாத சாதியா எமக்கிருக்கிறது" என்பார். தொடக்கம், நடு, முடிவு எதுவும் இல்லாத சிவனுக்கு எல்லாம் ஒன்றாகவே இருக்கும். எமக்குத் திசைகள் உள்ளன. சிவனுக்குத் திசைகள்கூட இல்லை. எல்லாத் திசைகளிலும் சிவன் இருப்பதால் அவன் எங்கும் இருக்கிறான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**213) நரகொடு சுவர்க்கம் நால் நிலம் புகாமல்**

**214) பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி**

"சிவனடியார்களே, சிவன் தன்னை அன்புடன் பூசிப்பவர்களுக்கு நரகவாழ்வு, சுவர்க்கவாழ்வு, பூமியில் வாழ்வு என்பவற்றைக் கொடுக்கும் கீழ் நிலையில் விட்டுவிடமாட்டார். நேரே வீடுபேற்றைக் கொடுப்பார். அப்படியான ஒரு வாழ்வைச் சிவன் பாண்டிய மன்னனுக்குக் கொடுத்தான். அது மீண்டும் பூமியில் பிறக்காது பிறப்பை அறுத்தல். பிறப்பை அறுத்தவன் முத்தியின்பமான சிவனின் திருவடியை அடைவான். சிவனின் திருவடியை அடையாதவாகள் திரும்பத்திரும்பப் பிறந்திறந்து பூமியில் வாழும் பேற்றைப் பெறுவர். பிறப்பை அறுத்தோர் மீண்டும் பிறக்கார். அதனால் பிறப்பை அறுக்க முயலுங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**215) ஒழிவு அற நிறைந்த ஒருவ போற்றி**

**216) செழும் மலர்ச் சிவபுரத்து அரசே போற்றி**

"சிவனடியார்களே, பரிபூரணனாய் எங்கும் நிறைந்திருக்கும் சிவனே போற்றி. செழுமையான பூக்கள் நிறைந்திருக்கும் சிவபுரத்தின் தலைவனே போற்றி" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை உருகித் தொழுகிறார். நாமும் அவரைப்போல உருகித் தொழுதால் மேலான நிலையை அடையலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**217) கழுநீர் மாலைக் கடவுள் போற்றி**

**218) தொழுவார்மையல் துணிப்பாய் போற்றி**

"சிவனடியார்களே, செழுங்கழுநீர் மாலையை அணிந்த அஞ்ஞான இருளை அகற்றும் சிவனே போற்றி" என்றும் மாணிக்கவாசக சுவாமிகள்

போற்றுகின்றார். வல்லிபுரம் சொல்வான்; “நான் எமது தொழுவத்தில் வீற்றிருக்கும் சிவனுக்குச் செழுங்கழுநீர்ப் பூக்களால் மாலை கட்டிப்போட்டு வணங்குவேன். அமிர்தலிங்கத்தை எனது மகள் திருமணம் செய்தபோதும் மாப்பிள்ளை எனது வீட்டுக்கு வருவதில்லை. எனது மகள்தான் ஆடம்பரமான வாகனத்தில் வந்து போவாள். அது எனக்குப் பெரிய குறையாக இருந்தது. அதனால் நான் சிவனுக்கு மாலைசூட்டும்போது அதைச் சொல்லி வருந்துவேன். சென்றவாரம் மாப்பிள்ளையும் அவரது பெற்றோரும் வீட்டுக்கு வந்து உணவருந்திவிட்டுச் சென்றதால் எனது மனக்கவலை நீங்கிவிட்டது. எல்லாம் சிவனின் அருள்” என்பான். அதனால் நீங்கள் வணங்கும்போது செழுங்கழுநீர் மாலைசூட்டி வணங்குங்கள். உங்கள் குறைகள் யாவும் நீங்கும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**219) பிழைப்பு வாய்ப்பு ஒன்று அறியா நாயேன்**

**220) குழைத்த சொல் மாலை கொண்டருள் போற்றி**

“சிவனடியார்களே, திருவாசகம் என்பது தேன்; அமிழ்து. அதை விஞ்சக்கூடிய இலக்கியம் எதுவுமில்லை. அப்படியிருந்தும், மாணிக்கவாசக சுவாமிகள், “சிவனே எது பிழை, எது சரியென்று அறியாத இச் சிறுவனாகிய நான் பாடிய சொல்மாலையை ஏற்றருளும் ஈசனே உன்னைப் போற்றுகிறேன்” என்கிறார். இப்போதுள்ள பலர் எதையோவெல்லாம் எழுதிவிட்டு தாம் பெரிய இலக்கிய சாதனை செய்துள்ளோம் எனக் கொக்கரிக்கின்றனர். உரிய அதிகாரிகளைக் கும்பிட்டு வணங்கிப் பரிசுகள் பெறுகின்றனர். அந்த நூல்கள் எவற்றையும் காணமுடிவதில்லை. மாணிக்கவாசகர் என்னும் சிறுவன் எழுதிய சொல்மாலையான திருவாசகம் எழுதி ஆயிரம் வருடங்கள் கடந்தும் இன்றும் சிறப்புடன் போற்றப்படுகிறது. இன்னும் பல ஊழிகள் கடந்தாலும் போற்றப்படும். இதுவல்லவோ இலக்கியம். படியுங்கள்; தேனாகச் சுவைக்கும்; பிறப்புக்களை அறுக்கும்; மோட்சத்தைத் தரும் இது நிட்சயம்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**221) புரம்பல எரித்த புராணா போற்றி**

**222) பரம்பரம் சோதிப்பரனே போற்றி**

“சிவனடியார்களே, திரிபுரங்களை எரித்துச் சம்மாரம் செய்த சிவன், பிரபஞ்சத்துக்கு அப்பால் உள்ள ஆத்ம சோதிப்பிழம்பாக உள்ளான். சோதி சொரூபமான மேலான பொருளனான சிவனைப் போற்றுவோம்” என்று மாணிக்கவாசகசுவாமிகள் கூறுகிறார். அவர் அப்படிக் கூறியதற்குக் காரணம் உண்டு. அவர் அப்படிப் போற்றிப் போற்றிப் பாடியமையால் தான் அவரது சொல்மாலை இன்றும் இனிக்கிறது. கலைஞர்கள் மேம்பட விரும்பினால் மாணிக்கவாசகசுவாமிகளைப் போல அழியாத இலக்கியங்களைப் படைக்க வேண்டும். இல்லாவிட்டால் அறிஞர்கள், என்று நினைப்போரை விழுந்து வணங்கி விருதுகளைப் பெறல் வேண்டும். அவ்விருதுகள் சில மணிநேரம் தன்னும் வாழாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**223) போற்றி போற்றி புயங்கப் பெருமான்**

**224) போற்றி போற்றி புராண காரண**

**225) போற்றி போற்றி சயசய போற்றி**

“சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள், “பாம்பை அணிந்த தலைவா போற்றி; அனைத்திற்கும் ஆதிகாரணனே போற்றி. உனது திருவிளையாடல்களில் வெற்றியே வடிவெடுத்திருப்பவனே போற்றி” என்று சிவனைப் போற்றித் தனது சொல்மாலையான போற்றித் திருவருகலை முடிக்கிறார். நாமும் அவரைப் போலச் சிவனைப் போற்றி அவனது திருவடிநிழலை அடைவோமாக” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.